# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 20 செவ்வாய்க்கிழமை (05.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 221




15

புற்றுநோய் விழிப்புணர்வு



17

மெரிக்கோ றவுண்ட் காட்டும் மஹிந்தர்



19

ஐ.நா.வின் கதவுகள் திறந்துள்ளன.



25

அமெரிக்கா காலிறுதியில்

# தெரிவுக்குழு பிரேரணை இன்று சபையில் கூட்டமைப்பினரின் இறுதி முடிவு என்ன?

## நாளை கூடித் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 5

**அரசியல் தீர்வு யோசனையைத் தயாரிப்பதற்கான உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதா, இல்லையா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை கொழும்பில் கூடி தீர்மானிக்கும்.**

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சிகளின் அதிருப்திக்கும், எதிர்ப்புகளுக்கும் மத்தியில் இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது தொடர்பான பிரேரணை இன்று கூடவுள்ள நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று சபாநாயகர் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் திட்டத்துக்கு எதிரணியினர்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் நாடு திரும்பிய பின்பே ஐ.தே.க. இறுதி முடிவு எடுக்கும்

கொழும்பு, ஜூலை 05

அரசியல் தீர்வு யோசனைகளை தயாரிப்பதற்கான உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசிய கட்சி கலந்துகொள்வதா, இல்லையா என்பது பற்றிய இறுதித் தீர்மானம் அமெரிக்கா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் எடுக்கப்படும் என்று ஐ.தே.கட்சி நேற்றுத் தெரிவித்தது.

இதுதொடர்பாக ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கூறியவை வருமாறு:-

அரசியல் தீர்வு யோசனைகள் தயாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது ஓர் ஏமாற்று நாடகமாகும். இதே நோக்கத்துக்காகவே சர்வகட்சி பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டு அக்குழு மூன்று வருடங்கள் கூடிப் பேசித் தயாரித்த தீர்வு யோசனைகள் குப்பையில் போடப்பட்டுவிட்டன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் யோசனைகளுக்கும் இதுதான் நடக்கும்.

உள்நாட்டு மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் செயற்பாடு தான் இந்த தெரிவுக்குழு நாடகம். இது எல்லோரினதும் நேரத்தையும் வீணடிக்கும் செயலாகும்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4க்கு எதிராக வழக்கு தொடர அரசு தயங்குவது ஏன்?

### காட்டமாக கேட்கிறார் மங்கள

கொழும்பு, ஜூலை 5

'சனல் - 4' தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்ட இலங்கைக்கு எதிரான காட்சி பொய்யானது என்பதற்கான ஆதாரம் அரசிடம் இருந்தால் அரசு சனல் - 4 இற்கு எதிராக உடன் வழக்குத் தொடரவேண்டும். ஏன் தயக்கம் காட்டுகிறது என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பினார்.

அக்குறஸ்ஸவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறி

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டேன்

### புதிய பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 5

எனது பதவிக்காலத்துக்குள் எந்தவிதமான அரசியல் அழுத்தம் வந்தாலும் அடிபணியமாட்டேன். அப்படி வந்தாலும், அதை வெற்றிகரமாக சமாளிக்கக் கூடிய ஆற்றல் எனக்கு உள்ளது. எனினும் எனது 31 வருடகால பொலிஸ் சேவை வரலாற்றில் இதுவரை எந்தவிதமான அரசியல் அழுத்தமும் வந்ததில்லை. மக்களுக்கு நீதியாகவும், நேர்மையாகவும் சேவையாற்றுவதே எனது இலக்காகும்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

### தனுஷ்கோடி அருகே நேற்றுக் காலை

## இராமேஸ்வர மீனவர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையால் கைது

இராமேஸ்வரம், ஜூலை 5

தனுஷ்கோடிக்கு அருகே நாலாம் திட்டுப் பகுதியில் நேற்றுக் காலை மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களைச் சுற்றி வளைத்த இலங்கைக் கடற்படையினர் வள்ளத்தோடு 14 மீனவர்களையும் கடத்திச் சென்றதாக தப்பி வந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மீன் வளத்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்படியான சம்பவம் ஏதும் இடம்பெறவில்லை என்று இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் நேற்றிரவு தெரிவித்தார். (ஒ-ஐ)

## இந்தியாவின் உயர்மட்ட அதிகாரி கொழும்புக்கு விரைவில் வருவார்

புதுடில்லி, ஜூலை 5

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நடவடிக்கையை அடுத்து இந்திய வெளிவிகார அமைச்சு உடனடியாகவே செயலில் இறங்கியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்றுக் கைது குறித்த தகவல் வெளியான கையோடு 'இது இப்படியே தொடர முடியாது. இலங்கை அரசுடன் உறுதியான புரிந்துணர்வுக்கு நாம் வரவேண்டும் என எண்ணுகிறேன்" என்றுசற்று

(27 ஆம் பக்கம் பார்க்க)

# 8 பெண்கள் உட்பட 552 முன்னாள் போராளிகள் விடுவிப்பு


கொழும்பு, ஜூலை 05

புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 8 பெண்கள் உட்பட 552 முன்னாள் போராளிகள் நேற்று அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

இதற்கான நிகழ்வு நேற்றுக் காலை வவுனியா கலாசார மண்டபத்தில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க, அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, புனர்வாழ்வு அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ்குமார், வவுனியா மாவட்ட அரச அதிபர் சாள்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதன்போது உரையாற்றிய அமைச்சர் சந்திர



சிறி கஜதீர கூறியவை வருமாறு:-

பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் முன்னாள் போராளிகளும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைய வேண்டும்; அவர்களும் அரசியலில் ஈடுபட வேண்டும்.

ஜே.வி.பி. கிளர்ச்சிக்குப் பின்னர் அவர்களில் பலர் அரசியலில் முக்கிய இடங்களுக்கு வந்துள்ளனர். அத்துடன், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் பொருளாதார நிலைமையைக் கட்டியெழுப்ப அரசு கடமைப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன - என்றார்.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு ஆணையாளர் சுசந்த ரணசிங்க உரையாற்றுகையில் கூறியதாவது:-

இறுதிக்கட்டப் போரின் போது படையினரால் கைது செய்யப்பட்ட மற்றும் சரண் அடைந்தவர்களில் இதுவரை 7,968 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# 'பென்ரைவில்' யுத்தக் காட்சிகளைச் சேமித்த வங்கி ஊழியர் இரு வருடங்களாகச் சிறையில்!

கொழும்பு, ஜூலை 05

இறுதிக்கட்ட யுத்தக் காட்சிகளை அரச இணையதளங்களில் பார்வையிட்டு, அதனை 'டவுன்லோட்' செய்து பென்ரைவ்வில் போட்டுக்கொண்டு வீட்டுக்குச் செல்லும் வழியில் கைதுசெய்யப்பட்ட வங்கி ஊழியர் ஒருவர் இரண்டு வருடங்களுக்கு மேலாக மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தையை வசிப்பிடமாகக்கொண்ட யோகராசா சுதர்ஷன் என்ற தமிழ் அரசியல் கைதியின் கதை இது. இவரது வயது 28. (இவர் 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.)

யோகராசா சுதர்ஷன் வெள்ளவத்தையிலுள்ள வங்கிக் கிளை ஒன்றில் சேவையாற்றும் ஓர் ஊழியர். காலையில் வேலைக்கு சென்று வேலை முடிந்ததும் மாலை 'நெட்கபே'க்கு செல்வது வழக்கம்.

அங்கு செல்லும் அவர் இறுதிக்கட்ட சமர் காட்சிகளை அரச இணையதளங்களில் பார்வையிடுவது வழக்கம். www.army.lk, www.news.lk. என்ற இணைய தள முகவரியின் ஊடாக அவர் யுத்தக் காட்சிகளைப் பார்த்துள்ளார். இவை இரண்டும் அரச இணையதளங்களாகும்.

காலம் செல்லச் செல்ல அவர் அந்த வீடியோக் காட்சிகளை டவுன்லோட் செய்து பென்ரைவில் போட்டுக்கொண்டு சென்று வீட்டில் போட்டு பார்வையிடுவதை வழக்கமாகக் கொண்டார்.

அவ்வாறு ஒருநாள் 'நெட்கபே' சென்று வீடியோக் காட்சிகளை டவுன்லோட் செய்து பென்ரைவில் போட்டுக்கொண்டு வீடு திரும்பும் வழியில் அவரை இராணுவத்தினர் கைதுசெய்தனர். அவர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் இராணுவம் செவிசாய்க்கவில்லை. அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையையும் மேற்கொண்டனர்.

அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்குப் படையினர் திணறினர். எனினும், ஒரு மாதிரி தாக்கல் செய்துவிட்டனர். வழக்கு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி சுதர்ஷன் தனக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நீதிமன்றில் ஆஜரானார். எனினும், அவரது நம்பிக்கை வீணடிக்கப்பட்டுவிட்டது. அவரை ஒரு வருடத்துக்கு சிறை வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

எதிர்பார்ப்புகளுடன் வெளியே வந்த சுதர்ஷன் மீண்டும் சிறைவாசம் அனுபவிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விட்டது. அவர் தற்போது மன உளைச்சலுடன் காணப்படுகின்றார்.

அரச இணையதளத்தில் வீடியோ பார்த்த ஓர் வங்கி ஊழியருக்கு ஏன் இப்படி தண்டனை. தகவல் அறியும் உரிமை அவருக்கு இல்லையா? சுதர்ஷனின் குடும்பத்துக்கு யார் பதில் கூறுவது? குடும்பத்தை யார் கட்டிக்காப்பது என்றெல்லாம் 'நாம் இலங்கையர்' அமைப்பு கேள்வி எழுப்புகின்றது. (ஒ-சி)

## குருபூசைத் தினம்

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் ஏற்பாட்டில் மணிவாசகர் பெருமானுடைய குருபூசைத் தினம் இன்று பிற்பகல் 5 மணிக்கு கந்தர்மடத்திலுள்ள இந்து சமயப் பேரவையின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டத்தின் இறுதி வரைவு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

அத்துடன் மணிவாசகர் வரலாறு காட்டும் ஜீவகாருண்ய கொள்கை, சிவ ஆலயங்களில் மீள ஆரம்பித்துள்ள உயிர்ப் பலியை தடுத்து நிறுத்துவதுக்கான செயற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

சைவசமய அமைப்புகளின் பிரதி நிதிகளும் சமய, சமூக, ஆர்வலர்களும் கலந்துகொண்டு இந்த் விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சைவ, சமய மன்றங்களின் பிரதிநிதிகளையும், பொது மக்களையும் கலந்து கொண்டு அறநெறிச் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-14)

## இன்றைய வானிலை

33°C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 33°c | 28°c | |
| மன் | | 31°c | 27°c | |
| வவு | | 33°c | 25°c | |
| முல் | | 31°c | 27°c | |
| கிளி | | 31°c | 27°c | |

கிளி, முல்லை மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் ஏனைய மாவட்டங்களில் தெளிவான காலநிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

# அதிபருக்கு எதிராக முறைப்பாடு பணிப்பாளர் நேரில் விசாரணை

அளவெட்டி சதானந்த வித்தியாலய அதிபருக்கெதிராக பெற்றோர்களால் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு குறித்து இன்று நேரில் சென்று உரியவிசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதிபருக்கெதிரான விடயங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை நேற்றுப் பெற்றோர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்துள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெற்றோர்களால் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பாடசாலை மாணவர்களைக் கொண்டு மலசலகூடத்தை சுத்தம் செய்வது, பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட பொருள்களை உரியமுறையில் வழங்காது விட்டமை, ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடாமல் வகுப்பு நேரங்களில் வீண் பொழுது போக்கி வருகின்றமை. சப்பாத்து வேண்டிப் போடுமாறு வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களையும் வற்புறுத்தி வருகின்றமை. ஆகிய காரணங்களால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல விரும்பமில்லாத நிலையில் வீட்டில் நிற்கின்றனர்.

எனவே இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதற்கெல்லாம் உடந்தையாக செயற்படும் அதிபரை உடனடியாக இடமாற்றப்படவேண்டும் என்றுள்ளது.

மகஜரை ஏற்றுக்கொண்ட வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரன் இந்த விடயம் தொடர்பாக பாடசாலைக்கு இன்று நேரில் வந்து விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கையெடுப்பதாவும் தெரிவித்தார். (த-9)



திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் இந்து போட் இராசரத்தினத்தின் 127ஆவது பிறந்த நாள் விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சங்கத்தின் தலைவர் சோ. பத்மநாதன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உருவங்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# கிழக்கில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குகிறது

## பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 05

கிழக்கில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று மேல்நீதிமன்றில் நடைபெற்றது. வழக்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சரத் பொன்சேகா, நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கில் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் அங்கு வங்கிக் கொள்ளை ஒன்று இடம்பெற்றது. பயங்கரவாதிகளாலேயே இந்த வங்கிக் கொள்ளை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

(ஒ-சி)

## CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 04, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6816.74↓
மிலங்கா(MPI) 6332.95↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 845.05Mn
பங்குகளின் அளவு(No.) 56.64Mn
வியாபாரம்(No.) 17600
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஏம்எப் பினான்ஸ் 300.00
சிங்கலங்கா 2125.00
கீல்ஸ் பூட் 121.10
கொழும்பு போட் 355.00
இகியூரி வன் 53.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சிலோன லெதர் 13.00
சிலோன லெதர் 12.70
என்விறோமென்ரல் றிசோஸ் 25.80
பைன்லேஸ் கொழும்பு 280.00
அலயன்ஸ் 952.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நிகழ்வுகள்

## பவளவிழா

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி சாரணியர் அணியின் பவளவிழாவும், மலர்வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சங்கானை வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி த.பிரகாசனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.கனகரத்தினம், வடமாகாண சாரண ஆணையாளர் நா.போஜன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பவளவிழா மலர் வெளியீட்டுரையை யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் ந.இரவீந்திரனும், ஆய்வுரையை யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

[illegible] வை [illegible] பெற்றுக்கொள்வார். (ற-55)

## கண்டிய நடன ஆரம்ப வைபவம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பாடத்திட்டத்தில் ஒன்றான கண்டிய நடன கற்கை நெறியின் இரண்டாவது பிரிவின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலவசமாக நடத்தப்படுகின்ற இந்தக் கற்கைநெறியில் இணைந்து பயில ஆர்வமுடையோர் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் தமது பெயர் விவரங்களை யாழ். திருமறைக் கலாமன்றத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்ற காணொளியில் மூலப்பிரதி இராணுவப் பேச்சாளர் மெதவல தடுமாற்றம்

சனல்-4 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட போர்க்குற்ற காணொளியின் மூலப்பிரதி என்று கூறப்பட்டு நேற்று முன்தினம் சுவர்ணவாகினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட காணொளிப் பதிவு குறித்து சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெடவெல குழப்பமான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதுவே மூலப்பிரதி என்றும் அதை பிரிட்டனில் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் அவர் முன்பு கூறியிருந்தார்.

ஆனால் நேற்று அவர், இந்தக் காணொளி எங்கிருந்து பெறப்பட்டது என்பது குறித்து இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் ஊடாகவே குறித்த காணொளி சுவர்ண வாகினியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தக் காணொளியை சுவர்ணவாகினியிடம் இருந்து மேலதிக விசாரணைகளுக்காக பாதுகாப்பு அமைச்சு பெற்றுக் கொண்டுள்ளதாகவும், அது ஆராயப்பட்டு வருவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவப் பேச்சாளரின் முன்னுக்குப் பின் முரணான இந்தக் கருத்துக்கள் கொழும்பு ஊடக வட்டாரங்களில் பலத்த சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. (10)

# நீதிமன்ற அனுமதியின்றி தமிழினியிடம் பொலிஸார் இரு தடவை விசாரணை

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழினியிடம் நீதிமன்ற அனுமதியின்றி பயங்கரவாதத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இரண்டு தடவைகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

தமிழினிக்கு எதிரான வழக்கு நேற்று கொழும்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரஸ்தாப விடயம் தமிழினியின் சட்டத்தரணியினால் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுவாக தடுப்புக் காவல் கைதிகள் சிறைச்சாலை மருத்துவமனை மற்றும் நீதிமன்றம் என்பவற்றுக்கு மட்டுமே நீதிமன்றத்தின் அனுமதியின்றி அழைத்துச் செல்லப்பட முடியும். அவ்வாறின்றி தடுப்புக் காவல் கைதியிடம் சிறைச்சாலையில் வைத்து விசாரணை நடத்தவும் பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியை முற்கூட்டியே பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் தமிழினி அவ்வாறான நடைமுறைகள் அப்பட்டமாக மீறப்பட்ட நிலையில் தடுப்புக் காவல் கைதியாக இருந்த நிலையிலேயே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அலுவலகத்துக்கு இரண்டு தடவைகள் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

எனவே அச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் 18ஆம் திகதி வரை அவருக்கான விளக்கமறியல் உத்தரவும் நீடிக்கப்பட்டுள்ளது. (10)

# ஒபாமா கொல்லப்பட்டதாக வெளியான செய்தியால் பரபரப்பு

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கொலை செய்யப் பட்டுள்ளதாக அமெரிக்காவின் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் டுவிட்டர் செய்தி இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டுவிட்டர் இணையத்தளத்தில் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் 'பொக்ஸ் நியூஸ் பொலிட்டிக்ஸ்' எனும் செய்தி இணைபுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவிய குழுவொன்றே வதந்தியை செய்தியாக பரப்பியுள்ளது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மீது இத்தகைய எந்த தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

அமெரிக்காவின் அயோவா மாநிலத்தில் உணவு விடுதி யொன்றில்வைத்து ஜனாதிபதி பராக் ஒபாமா சுட்டுக்கொல்லப்பட்டதாக மேற்படி டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இரு துப்பாக்கி குண்டுகள் அவரை தாக்கியதாகவும் கூறப் பட்டது.

நேற்று ஜூலை 4 ஆம் திகதி அமெரிக்க தேசிய தினத்தை அமெரிக்கர்கள் கொண்டாடிக்கொண்டிருக்கும் நிலையில் வதந்தி பரப்பப்பட்டுள்ளது.

''பராக் ஒபாமா காலமானார். ஜனாதிபதி கொல்லப்பட்டார். மிகத் துயரமான ஜூலை 4 உண்மையில் ஜனாதிபதி பராக் ஒபாமா கொல்லப்பட்டார்'' என அச் செய்தியில் குறிப்பிடப் பட்டிருந்தது.

அச்செய்தி வெளியாகி சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் புதிய ஜனாதிபதி ஜோ பிடெனுக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

3 மணித்தியாலங்கள் வரை இந்தச் செய்திகள் எதுவும் அந்த இணையத் தளத்தில் இருந்து அகற்றப்படாமல் இருந்தன.

'ஸ்கிரிப்ட் கிடீஸ்' எனும் நபர் அல்லது குழுவினால் இந்த ஊடறுப்புக்குக்கு உரிமை கோரப்பட்டுள்ளது.

பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் செய்திகள் அமெரிக்காவில் அதிகம் பார்க்கப்படும் கேபிள் தொலைக்காட்சி செய்திகளாக விளங்குகின்றன. சுமார் 2 கோடி பேர் இந்தச் செய்தி ஒளிபரப்புகளை பார்வையிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10)



இலங்கை வர்த்தக சம்மேளம் 12ஆவது தடவையாக ஏற்பாடு செய்த 'இலங்கை பொருளாதார மாநாடு 2011 நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து நாளையும் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் நிதி மற்றும் பொருளாதார அமைச்சு ஆகியவற்றின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நுளம்பு ஒழிப்புத் திட்டத்தை தேசிய கொள்கையாக்க முடிவு

## சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஜூலை 5

தேசிய நுளம்பு ஒழிப்பு செயற்றிட்டத்தினை, தேசிய நுளம்பு ஒழிப்பு கொள்கையாக நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நுளம்பு ஒழிப்புத் திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், ஜனாதிபதி டெங்கு ஒழிப்புப்பிரிவு மற்றும் 11 அமைச்சுக்கள் இணைந்து செயற்றிட்டத்தினை முன்னெடுக்கவுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நுளம்பு ஒழிப்பு தேசிய கொள்கையினை உருவாக்குவதற்கு, குறித்த அமைச்சுக்களினதும், உள்ளூராட்சி மன்றங்களினதும், மாவட்ட செயலகங்களினதும் ஆலோ சனைகள் மற்றும் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கமைய, குறித்த பிரிவுகளில் இருந்து கருத்துக்கள் மற்றும் யோசனைகள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை 75 வீதம் பூர்த்தியடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

இணையச் செய்திகள்

# சிறுமி மீது பாலியல் வன்புணர்வு சந்தேக நபரை கைது செய்ய பிடியாணை

## கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவு

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் 15 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு ஈடுபடுத்திய சந்தேக நபருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி அருகிலுள்ள பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றுவரும் வேளையில் அவருடன் காதல் கொண்டு பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி அவரைத் தாய்மையடையச் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டிலேயே கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் பெ. சிவகுமார், குறித்த சந்தேக நபரைக் கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்ததுடன் இது தொடர்பான மருத்துவ அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் [illegible] தார். (ஒ-323-6)

# தரக்குறைவான பெற்றோலுக்கான கொடுப்பனவை இடைநிறுத்த உத்தரவு

கொழும்பு, ஜூலை 5


இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைவான பெற்றோல் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 20 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலுக்கான கொடுப்பனவை உடனடியாக இடைநிறுத்துமாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெற்றோலிய வளத்துறை அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்றின்போதே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பெற்றோல் பாவனையால் வாகனங்கள் பழுதடையும் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பான விசாரணைகளும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், ஜூலை 5
கொக்குவில் கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ற)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆல யத்தின் மணவாளக்கோல அலங்காரத் திருவிழா கடந்த 2 ஆம் திகதி ஆரம் பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடை பெற்றுவருகின்றது. திருவிழாக் காலத் தில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். எதிர் வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு சங்கா பிஷேகமும், பிற்பகல் 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தேர்ப்பவனி யும் இடம்பெறும். (ற-313)

* * *

வடமராட்சி, ஜூலை 5
பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலயத்தின் பெருந்திரு விழா கடந்த வெள்ளிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 5
நவாலி அட்டகிரி முருகன் ஆலயத் தின் பெருந்திருவிழா இன்று செவ் வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழா வும் இடம்பெறும். திருவிழா பூசைகளை சிவஸ்ரீ கா. துரைச்சாமிக் குருக்கள் நிகழ்த்து வார். (ற-302)

* * *

சுழிபுரம், ஜூலை 5
சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயத் தின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுழிபுரம் திருவடி நிலை தீர்த் தக்கரையில் தீர்த்தத்திருவிழா இடம் பெறும். (ற-28)

* * *

சுழிபுரம், ஜூலை 5
தொல்புரம், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாக் கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். (ற-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 5
சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளை யார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற வுள்ளது. (ற-9)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 5
கரவெட்டி, தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறும். திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 6 மணிக்கு யாழ். சின் மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்யா சொற்பொழிவு நிகழ்த்துவார். (ற-313)




மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள் வங்கியின் சாவ கச்சேரிக் கிளையிலும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. இதில் தென்மராட் சிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் ஆயிரம் ரூபா வவுச்சர்கள் அடங்கிய பலூன்களைப் பறக்கவிடுகிறார். (ம -202)

# ரயில்வே திணைக்களத்தில் 4,000 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு பல வருடங்களாக நடவடிக்கை இல்லை

## ரயில்வே தொழிற்சங்க ஒன்றியம் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 5
ரயில்வே திணைக்களத்தில் நான்கா யிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாக ரயில்வே தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற் கான நடவடிக்கைகளை பல வருடங் களாக ரயில்வே அதிகாரிகள் மேற்கொள்ள வில்லை என அதன் செயலாளர் சம்பத் ராஜித சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக அதிகளவான ஊழியர்கள் மேலதிக நேரம் சேவையில் ஈடுபடுவதாகவும், அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க திணைக்களம் நாளாந்தம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட நேரிட்டுள்ளதாகவும், ஊழி யர்கள் மேலதிகமாக சேவையில் ஈடு படுகின்ற போது அவர்கள் அதிருப்தியுட னேயே பணியாற்றுவதாகவும் அவர் தெரி வித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ரயில்வே பொது முகாமையாளர் பி.ஏ.பி. ஆரியரத்னவிடம் கேட்டபோது;

அவர் வெற்றிடங்கள் நிலவுவதை ஒப்புக்கொண்டுள்ளார், மேலும் உரிய நடைமுறைக்கு அமையவே ஊழியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப் படுவதாகவும், சில தொழிற் சங்கங்கள் புதிதாக ஊழியர்களைச் சேர்த்துக் கொள் வதற்கு எதிராக செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியாத போதிலும், கால தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்பு வதற்கு திட்டமொன்றை செயற்படுத்தி யுள்ளதாகவும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ற)

# வீதி விளக்குகள் இல்லை; விபத்துகள் ஏற்படும் நிலை

கொழும்புத்துறை, ஜூலை 5
அரியாலை வில்வம் பகுதியில் வீதி விளக்குகள் ஒளிராமையால் இப் பகுதி இருள் சூழ்ந்து காணப்படுவதால் மக்கள் இரவில் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர்.

மின்கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவை நீண்ட காலமாக ஒளிராது காணப்படு கின்றன. இதனால் இப்பகுதியில் அடிக் கடி விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரி விக்கப்படு கின்றது. (ம-135)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 Bahiraha புறொயிலர் குஞ்சுகள் 06.07.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை 'முன்கூட்டியே மேற்கொள்ளவும்'

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P. No. 021 222 2867
077 6090926

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 07.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593
★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, அம்பாள்குளம், கிளிநொச்சி - 0776225944

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

**ஜனஜய** லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 241
சீட்டிழுப்புத் திகதி 03.07.2011

வெற்றி இலக்கங்கள்: 04 14 25 59
சுப்பர் இலக்கம்: 02

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,217,530/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 114964 | ரூ. 20/= | ரூ. 2,299,280 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 10513 | ரூ. 40/= | ரூ. 420,520 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 8918 | ரூ. 100/= | ரூ. 891,800 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 803 | ரூ. 200/= | ரூ. 160,600 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 200 | ரூ. 1,500/= | ரூ. 300,000 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 16 | ரூ. 3,000/= | ரூ. 48,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 52,17,530/= | |
| மொத்த எண்ணிக்கை | 135415 | | ரூ. 5,120,200/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,566,520/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 323 546 - 47 தொலைநகல்: 2 323 545
Website: www.dlb.lk

**விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, இல.56 (பிறவுண் லேன்) அச்சக ஒழுங்கையில் கிணறு, சுற்று மதில், இரண்டு குளியலறைகளைக் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
தொலைபேசி. இல. 0774346417 (1355)

**வேலையாள் தேவை**

சகல கணினி வேலைகளும் தெரிந்த பெண் அல்லது ஆண் (01) தேவை.
★தமிழ், ஆங்கிலம், தட் டெழுத்து தெரிந்திருத்தல் விரும் பத்தக்கது.
(உடன் தொடர்பு கொள்ளவும்)
aRK net
444/1, நாவலர் வீதி, நல்லூர்.
(பாப்பையா கடைச்சந்தி, நல்லூர்)
021 222 1562, 077 6444 418
(5477)



ஆயிரங்காலத்துப் பயிர் - திருமணம்
திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்
**போஸ்கோ**
இல. 610/3(252) பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக) தொ.பே: 021 222 0370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் நலன் நாடும் நிலை எப்போது?

உங்களுடைய வாகனம் வீதியில் ஓடிக்கொண்டிருக்கும் போது திடீரென நின்றுவிட்டதா? இல்லையேல் அதன் இயந்திரம் இயங்க மறுத்துவிட்டதா? பதற்றப்படாதீர்கள், உடனடியாக உங்கள் தொலைபேசியில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முறைப்பாடு செய்யுங்கள்!

இந்த அறிவித்தல் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்ட விளம்பரம் ஒன்றின் பிரதான வாசகம் என்று நினைக்கிறீர்களா? அது தவறு!

பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வாகனச் சொந்தக்காரர்களுக்கு விநயத்துடன் (நேற்று முன்தினம்) திடீரென விடுத்த வேண்டுகோள்.

இதென்ன, சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த கதையாக இருக்கிறது என்று புலம்புவது கேட்கிறது. பீடிகையை நிறுத்திக்கொண்டு விடயத்துக்கு வருவோமே...

மூன்று மாத காலத்துக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசல் வகைகளை கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துகொண்ட விநியோகஸ்தர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை கடந்த மார்ச் மாதத்தில் அனுமதி அளித்திருந்தது. அதாவது பெற்றோலியத்துறை அமைச்சர் இதற்கெனச் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் அதன் பிரகாரம் பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி செய்யப்படவில்லை. அதற்கு மாறாக, வழமைக்குப் புறம்பாக, ஐக்கிய அரேபிய எமரேட்ஸ் நாட்டு நிறுவனம் ஒன்றிடம் இருந்து பெற்றோலியம் கூட்டுத்தாபனம் எரிபொருள்களை இறக்குமதி செய்தது.

அந்தோ பரிதாபம்! இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள்கள் இரண்டும் விற்பனைக்கு விடப்பட்டபோது குட்டு வெளிக்கத் தொடங்கியது. இறக்குமதி செய்யப்பட்ட இருபதினாயிரம் தொன் எரிபொருள்களும் தரம் குறைந்தவை என்று பெற்றோலியம் கூட்டுத்தாபன இரசாயன வியலாளர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் அவை எரிபொருள் நிலையங்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு விற்கப்பட்டு வருகின்றன.

அதன் விளைவு; புதிய விநியோகஸ்தரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோல் மற்றும் டீசலைப் பயன்படுத்திய வாகனங்கள் இயங்க மறுத்தன. வீதிகளில் பயணம் செய்துகொண்டிருந்த போது, திடீர் திடீரென, அடிக்கடி தொழிற்பட மறுத்தது மட்டுமன்றி, பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் ஸ்தம்பித்துத் தொல்லை கொடுத்தன. சில நாள்களில் இயந்திரங்கள் முற்றாக இயங்க மறுத்து "கொட்ட உட" (கிடப்பில் போடும்) பாவனைக் உதவாத நிலைக்கும் தள்ளப்பட்டு விட்டதாக முறைப்பாடுகள் மலிந்து விட்டன.

பணம் கொடுத்து எரிபொருள் வாங்கி வாகனத்தைக் "கொலை" செய்த நிலைக்கு - பாவத்துக்கு மிகப் பெரும் எண்ணிக்கையான வாகனச் சொந்தக்காரர்கள் ஆளாகியுள்ளனர்.

வாகனங்கள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உள்ள "பம்பி" களும் இயங்க மறுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

எனினும்-

வாகனங்களின் இயந்திரங்கள் திடீரென இயங்க மறுப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல் மற்றும் டீசலே காரணம் என்று கூறமுடியாது என்று பெற்றோலியம் கூட்டுத்தாபனம் வாதாடுவது இன்னொரு பக்கம்.

நாட்டில் மொத்தம் உள்ள சுமார் இருபது லட்சம் மோட்டார் சைக்கிள்கள், சுமார் ஐந்துலட்சம் முச்சக்கர வண்டிகள், சுமார் நான்கு லட்சம் மோட்டார் கார்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் பாதிப்பைக் குறைத்து மதிப்பிட முனைகிறது கூட்டுத்தாபனம்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் ஜூன் 16 ஆம் திகதியே கொழும்புத் துறைமுகத்திலிருந்து இறக்கப்பட்டது. அது சுமார் ஆயிரம் எரிபொருள் நிலையங்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டது. ஆனால் அவற்றில் மிக குறைந்த எண்ணிக்கையான நிலையங்களிலிருந்தே முறைப்பாடுகள் கிடைத்ததாகப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் சமாளிக்கும் தொனியிலான காரணங்களையும் முன்வைக்கிறது!

எவ்வாறாயினும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தரம் குறைந்த - மாசடைந்த - பெற்றோலைப் பயன்படுத்தியதால் பழுதடைந்த வாகனங்களுக்கு நட்டஈடு வழங்க முன்வந்திருக்கிறார். அதன் பெயரிலேயே, வாகனச் சொந்தக்காரர்களை முறைப்பாடு செய்யுமாறு கேட்டுள்ளார். உரிய பரிசோதனைகள் மூலம் வாகனத்தின் இயந்திரத்துக்கு சேதம் ஏற்பட்டது என்பது கண்டறியப்பட்டால் நட்டஈடு வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

அதன் அர்த்தம் என்ன? விநியோகிக்கப்பட்ட எரிபொருள் தரம் குறைந்தது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது.

எரிபொருள் பற்றாக்குறை உண்டாகும் என்பதனை முன்கூட்டியே அறிந்து கொள்ளாதிருந்தமை, அவசர தேவைக்கெனக் கூறி புதிய வழங்குநரிடமிருந்து தரம் குறைந்த எரிபொருளைக் கொள்வனவு செய்தமை என்பன முற்றிலும் விதிமுறைகளுக்கு விரோதமானவை.

எனவே, இந்தச் செயற்பாடுகளில் ஊழலும் மோசடியும் இணைந்திருக்கும் என்பது மிகத் தெளிவாகிறது. ஆகையால் இதற்கு அமைச்சர் மட்டுமன்றி அரசாங்கமும் தெளிவான பதில் சொல்லியே ஆகவேண்டும். அரசு நியமிக்கும் விசாரணைக் குழுக்களும் தவறுகளை அம்பலப் படுத்துவது மிகக்குறைவு என்றாகிவிட்டது.

தவறுசெய்தவர்கள் எவராயினும் தண்டிக்கப்பட வேண்டியது தான் தர்மம். ஆனால் அத்தகைய ஒரு நிலை இந்த நாட்டில் கீழிறங்கிப் போகும் போக்கே தொடர்கிறது.

நீதியும், நியாயமும், உரிமைகளும், ஜனநாயக நியமங்களும் மக்களுக்கு கிடைக்க வழிசெய்யவேண்டும் என்பதில் அரசினரும் அதன் அதிகாரி களும் அக்கறை கொள்வது எப்போது? மக்களின் சேவைக்கு என்ற நிலைமாறி, அதிகார வர்க்கத்தினர் நலனுக்கே என்பது நாட்டைப் படுகுழியிலேயே வீழ்த்தும்.

# வாக்குறுதிகளை அள்ளி வீசும் அரசியல்வாதிகள் நாம் நிரந்தர நியமனம் பெற உதவுவார்களா?

## தொண்டர் ஆசிரியர் சங்கம் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குறுதிகளை அள்ளிவீசும் அரசியல் வாதிகள் எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள குறிப்பிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த 2009 ஆம் ஆண்டு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கலின் போது பாதிக்கப்பட்ட நாம் தொடர்சியாக நியமனம் வழங்கக் கோரி பல்வேறு கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். எமது நிலைமையை அரச உயர் அதிகாரிகள் தொடக்கம் யாழ். மாவட்ட அரசியல் வாதிகள் வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் விளக்கியிருந்தோம்.

ஆனால் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போல பயனற்றுப் போயுள்ளன.

தொண்டர் ஆசிரியர்களுக்கு இனிமேல் நியமனம் வழங்கப்படமாட்டாது என அரச அதிகாரிகள் கூறி வருகின்றனர். இந்தக் கூற்று எமக்கு மனவேதனையையும் விசனத்தையும் அளிக்கிறது.

எனவே தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வீசும் அரசியல் வாதிகள் எமக்கு நியமனம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த-14)

# புங்குடுதீவு காளிகா பரமேஸ்வரி ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று

புங்குடுதீவு மேற்கு, நான்காம் வட்டாரம், பிட்டியம்பதி காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று செவ்வாய்க் கிழமை மு.ப. 10.32 மணி தொடக்கம் 11.57 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த சிற்பத் தேரை சிற்பக் கலைஞர் இராசதுரை பிரதீபன் வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலய தேர்த்திருவிழா நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

தீர்த்தத் திருவிழா மறுநாள் வியாழக் கிழமை இடம்பெற்று இரவு கொடியிறக்கம் நடைபெறும். இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகிறது. (ம)

(சிறப்பு மலர் 12 ஆம் 13 ஆம் பக்கங்களில்)

# முதியோர் அடையாள அட்டை பெற பிரதேச செயலகங்களில் கூட்டம்

நாவற்குழி, ஜூலை 5

உள்ளூராட்சித் தேர்தலில் முதியோர் அடையாள அட்டை பெற பிரதேச செயலகங்களில் கூட்டம் அதிகமாகியுள்ளது.

சென்ற வருடம் ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தலின் போது 60 வயதிற்கு மேற்பட்டோர் முதியோர் அடையாள அட்டை பெறுவதில் கவனம் செலுத்தப்பட்டது.

அப்போது அதனைப் பெறாமையால் வாக்களிக்கத் தவறியவர்கள் கூட இப்போது உள்ளூராட்சிச் தேர்தலில் இன்று அடையாள அட்டையைப் பெறுவதில் அதிக நாட்டம் செலுத்துகின்றனர்.

தமது ஊரவர், உறவினர் தேர்தலில் நிற்பதால் தாம் கட்டாயம் வாக்களிக்கப் போவதாகவும் இம் முதியோர் தெரிவிக்கின்றனர்.

முத்திரையளவு 2 கலர் போட்டோக்களைப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு எடுத்துச் சென்றால் பிரதேச செயலரின் ஒப்பத்துடன் கூடிய முதியோர் அடையாள அட்டையை அன்றைய தினமே பெறமுடிகின்றது.

இந்த இலகுத் தன்மையால் முதியோர் அடையாள அட்டையைப் பெறுவதில் அதிக அக்கறை கொண்டுள்ளனர். (த-12)

# குறுகிய காலத்தில் கண்ணி வெடிகளை அகற்றி மக்களை குடியமர்த்தும் புண்ணிய பூமி இலங்கை

## பெருமிதம் கொள்கிறார் பஸில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

உலகநாடுகளுடன் ஒப்பிடும் போது குறுகிய காலத்தில் கண்ணி வெடிகளை அகற்றி மக்களை மீள் குடியமர்த்தும் புண்ணிய பூமி இலங்கை எனக் குறிப்பிட்டார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

பிறந்த, வளர்ந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து வேறு இடத்தில் கண்ணீருடன் துயரமாக வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில் மக்களை மீளக் குடியமர்த்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதன் போது மீள்குடியமர்வதற்காக திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது பல்வேறு குண்டுத் தாக்குதலுக்கும் கண்ணிவெடி அபாயத்துக்கும் உட்பட்ட பகுதி இது. அவ்வாறான பகுதியில் சகல உட்கட்டமைப்பு வசதிகளும் குறுகிய காலத்தில் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினர் பொறியியலாளர்களைப் பயன்படுத்தி நவீன இயந்திரங்களின் துணையுடன் கண்ணி வெடிகளை குறுகியகாலத்தில் அகற்றி மக்களை மீளக் குடியமர்த்துகின்றோம்.

ஐரோப்பிய நாடுகளில் கூட மிதிவெடி அகற்றுவதற்கு குறைந்தது 7 வருடங்கள் எடுக்கின்றன. ஆனால் இலங்கையில் அப்படியல்ல. வாழ்வாதார வசதிகளை வழங்கியிருக்கின்றோம் படையினரால் அமைக்கப்பட்ட 10 வீடுகளை மக்களுக்கு கையளிக்கின்றோம். தொடர்ந்தும் மக்களது தேவைகள் தீர்த்து வைக்கப்படும். எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வுக்காக நாம் ஐக்கியமாக வாழவேண்டியது அவசியம் என்றார்.

(ம-14)

# வைத்திய அதிகாரிகளுக்கு அலவன்ஸ் 12 ஆயிரம் ரூபாவாக உயர்கிறது

தென்மராட்சி, ஜூலை 5

வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தொகையை தொடர்ந்து அலவன்ஸ் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வைத்திய அதிகாரிகள் பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசிகள் உட்பட ஏனைய தொலைபேசிகள், இணையத்தள சேவைகள் ஆகியவற்றுக்கு 6 ஆயிரம் ரூபா வரை அலவன்ஸாக வழங்கப்பட்டுவந்தன.

அரச வைத்தியர் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து தொலைத்தொடர்பு அலவன்ஸ் அதிகரிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் வைத்திய அதிகாரிகள் தாம் பயன்படுத்தும் தொலை பேசிகளுக்கு செலுத்தப்படவுள்ள பற்றுச் சீட்டை அந்தந்த சுகாதாரத் திணைக்களத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு அரச வைத்திய சங்கத்தினர் சகல மருத்துவ அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளனர். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மின் விநியோகத்தை சீராக்க மேலும் மூன்று மின் பிறப்பாக்கிகள்

## அமைச்சர் பஸில் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

இரண்டு வருடங்களின் பின்னர் வடக்குக்கு 24 மணி நேர மின்சாரம் தங்கு தடையின்றி வழங்கப்படும். அதுவரை மின்வெட்டு ஏற்படாமல் சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு கொழும்பில் இருந்து 3 மின் பிறப்பாக்கிகள் இங்கு எடுத்துவரப்படவுள்ளதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவைச் சந்தித்த போதே மேற்கண்ட உறுதிமொழியை அமைச்சர் பஸில் வழங்கியுள்ளார்.

குடாநாட்டில் அடிக்கடி ஏற்படும் மின்தடை குறித்து அதனால் பொதுமக்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு அமைச்சரிடம் தமது விசனத்தைத் தெரிவித்திருந்தது.

இதற்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் இன்னும் 2 வருடங்களில் தென்னிலங்கையைப் போல மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

தற்போது ஏற்பட்டு வருகின்ற மின்தடையை சீராக்க கொழும்பில் இருந்து 3 மின் பிறப்பாக்கிகள் அடுத்த வாரமளவில் இங்கு எடுத்துவரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

# போதனா வைத்தியசாலையில் குடிதண்ணீர் பற்றாக்குறை

## நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.போதனா வைத்தியசாலையில் குடிதண்ணீர் பற்றாக்குறையால் விடுதியில் தங்கியுள்ள நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களாக ஒரு சில மணி நேரங்களில் மட்டுமே குடிதண்ணீர் குழாய் மூலம் வழங்கப்படுகின்றது.


இந்தக் குழாய் மூலம் குறித்த ஒரு இடத்தில் மட்டும் குடிதண்ணீர் வழங்குவதால் விடுதிகளிலிருந்து நீண்ட தூரம் கடந்து நீர் பெறுவதற்கு வரும் நோயாளிகள் சில நேரங்களில் நீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் விடுதியில் தங்கியுள்ள நோயாளிகள் வெளியில் உள்ள கடைகளிலும் யாழ். போதனா வைத்தியசாலையின் தேநீர் கடையிலும் பணம் கொடுத்துக் குடிதண்ணீர் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-313)

## கொழும்புத்துறையில் சேதமடைந்த

# வேளாங்கண்ணி ஆலயத்தின் கட்டடப் பணிகள் ஆரம்பம்



கொழும்புத்துறை, ஜூலை 5

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியான கொழும்புத்துறை எழிலூரில் சேதமடைந்திருந்த வேளாங்கண்ணி மாதா ஆலயத்தை புதிதாக அமைக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

வெளிநாட்டில் வாழும் இந்து மத அன்பர் ஒருவர் வழங்கிய ஒரு தொகை நிதியைக் கொண்டு ஆலய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், முழுமையாகக் கட்டி முடிக்கப் பலரதும் உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் பங்குத் தந்தை அருட்திரு றோய் பேடினன்ட் அடிகள் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை எவரும் குடியமரவில்லை. எனினும் வீதிகள், வளவுகள், பொது இடங்களை துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-135)

# குடிசன மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியருக்கு விசேட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள விசேட குடிசன மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடவுள்ள ஆசிரியர்களுக்கு, 200 குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபா என்ற வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

வடக்கில் விசேட குடிசன மதிப்பீட்டுப் பணிகளுக்கென பாடசலை ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள் பிரதேச செயலக ரீதியாக நடத்தப்பட்டு வருகின்றன.

இவை யாவும் நிறைவுபெற்றதும் ஆசிரியர்கள் சனி,ஞாயிறு தினங்களில் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ளும் இந்தக் குடிசன மதிப்பீட்டுப் பணியில் தெற்கில் இருந்து வரும் அதிகாரிகளுடன் ஆசிரியர்களும் சேர்ந்து ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# கற்றல் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு யாழ் எயிட் நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள், காலணிகள், புத்தகப்பைகள் வழங்கப்படவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை இளவாலை, சிறுவிளான் கனகசபை வித்தியாலயம், கட்டுடை சைவ வித்தியாசாலை, நவாலி அட்டகிரி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் அந்தந்தப் பாடசாலைகளில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இது .தொடர்பான நிகழ்வுகள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக மெல்போர்ன் நகரில் இருந்து வருகை தந்திருக்கும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவன் நவரட்ணம் சூரியநாராயணனும், சிறப்பு விருந்தினராக வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி சி.பரிபூரணனும் கலந்துகொள்வர் . (ம-319)

# கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம் படிச் சங்கங்கள், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்காய்வு விடயம் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் அறிவித்துள்ளார். (த-26)

# தெய்வீகப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை 5

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 9 தினங்கள் மாலை 6 மணிக்கு மகாபாரதம் தெய்வீகப் பேருரை நடைபெறவுள்ளது.

இந்தப் பேருரையை பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தவுள்ளார். (ற-28)

# போதையில் ஆட்டம் போட்ட கும்பல் பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம்

## புதிய மோ.சைக்கிள் பொலிஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வீதியில் வாள்களோடு நின்று அட்டகாசம் புரிந்த கும்பல் ஒன்று பொலிஸாரைக் கண்டதும் தாம் ஓடிவந்த மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு தப்பி ஓடிய சம்பவம் ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாயன்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலயத்துக்கு அருகில் நின்று இரவு, பகல் எனப் பாராது இந்தக் கும்பல் தினமும் வீதியால் செல்வோருக்குபெரும் இடைஞ்சல் ஏற்படுத்தி வந்ததுடன் ஆலய வழிபாட்டுக்கு வரும் யுவதிகளுடன் மதுபோதையில் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்துச் சேட்டையில் ஈடுபடுவதாகவும் பொதுமக்கள் பலராலும் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் சம்பவ தினம் இரவு 8.30 மணியளவில் பொலிஸார் மேற்படி வீதி வழியாக வந்துகொண்டிருந்த வேளை வாள்களோடு வீதியில் மதுபோதையில் நின்ற இந்தக் கும்பல் பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம் பிடித்தனர்.

போதையில் நின்ற கும்பலில் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை ஓட்ட முடியாத நிலையில் அதனை அவ்விடத்திலேயே போட்டு விட்டு தப்பி ஓடிவிட்டார். மோட்டார் சைக்கிளை கைப்பற்றிய பொலிஸார் அதனை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பொலிஸாரின் மேற்படி நடவடிக்கையை அடுத்து கடந்த சில நாள்களாக வீதியில் இந்தக் கும்பல்களின் நடமாட்டம் எதுவும் இல்லை என்பதுடன் ஆலய வழிபாட்டுக்கு வருவோரும் எதுவித இடையூறும் இல்லாது ஆலய வழிபாட்டை மேற்கொள்ளவதாகவும் அந்தப் பகுதி மக்களால் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது. (த-228)

# வெளியூர் தபால் சேவையை விரைவுபடுத்த பார ஊர்தி

யாழ்ப்பாணத்துக்கும் வெளியூர்களுக்கும் இடையிலான தபால் சேவையை மேற்கொள்வதற்கு யாழ். பிரதம தபாலகத்துக்குப் பார ஊர்தி ஒன்று விரைவில் வழங்கப்படவுள்ளது. இந்தப் பாரவூர்தியை தபால்மா அதிபர் எம்.கே.திஸாநாயக்க விரைவில் வழங்கவுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பார ஊர்தி மூலம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தபால் சேவை விரைவு படுத்தப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-26)

# பனை மரம் ஏறும் இயந்திரத்தை யாழ்ப்பாணத்தில் தயாரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 5

பனைமரம் ஏறும் இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையினால் இந்த இயந்திரங்கள் ஏற்கனவே இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்டன.

தற்போது இந்த இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மரம் ஏறும் இயந்திரங்களை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அரச அதிபர்

# லயனல் பெர்னாண்டோ போல் நீங்களும் சிறந்த நிர்வாகிகளாக சேவையாற்ற வரவேண்டும்

## இங்கு வந்துள்ள தெற்கு பயிற்சியாளருக்குத் தளபதி ஹத்துருசிங்க ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.மக்களின் மதிப்பைப் பெற்ற முன்னாள் அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ போல் நீங்களும் எதிர்காலத்தில் சிறந்த நிர்வாக அதிகாரிகளாக வர வேண்டும் யாழ்.மாவட்ட இராணு வத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இவ் வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவைப் பயிற்சியாளர்களை வரவேற்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலக் கேட்போர் கூடத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நேற்றுக்காலை இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:

யாழ்ப்பாண மக்களின் கலை, கலாசார, பண்பாடுகள் மிக உயர்வானவை. இவர்களுடன் நீங்கள் பழகுவதன் ஊடாக அந்நியோன்யமான உறவை வளர்க்க முடியும். இந்த மக் களிடமிருந்து நீங்கள் நன்மதிப் பைப் பெற்றுக்கொள்ள வேண் டும். நீங்களும் எதிர்காலத்தில் சிறந்த அரச அதிகாரிகளாவதற்கு வாழ்த்துகின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங் கம், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை நிர்வாக சேவை யைச் சேர்ந்த 140 பயிற்சி யாளர்களும் யாழ்.மாவட்டத் தில் ஒரு மாதகாலம் தங்கியி ருந்து கடமையாற்றவுள்ளனர். இவர்கள் இங்கு 15 பிரதேச செயலகங்களில் மருதங்கேணி, நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள் வுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் சிங்கள மொழியில் முதலில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. பின்னர் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

மேலும் பயிற்சியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர் களில் தமிழர்கள் எவரும் சித்தி யடையவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (த-15)

## பன்றி தாக்கியதில் குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஜூலை 5

வயல் வேலையில் ஈடுபட் டிருந்த குடும்பஸ்தரை பன்றி தாக்கிக் காயப்படுத்தியது. இந் தச் சம்பவம் கடந்த சனிக் கிழமை கல்வயல் விளை வேலி தோட்ட வெளியில் இடம் பெற்றது. கல்வயலைச் சேர்ந்த அழகன் அழகராசா (வயது - 50) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவ ருக்கு அருகில் நின்ற மனைவி யையும் பன்றி இடித்து வீழ்த்தி விட்டு ஓடியதாகவும் தெரிவிக் கப்பட்டது. (த-207)

## மருத்துவ விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 5

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சங்க அங்கத்தவர்களுக்கு மாதமொரு மருத்துவம் என்னும் விழிப்பு ணர்வு கருத்தரங்கு நடத்தும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஜூலை மாதத்துக்கான கருத் தரங்கு அண்மையில் சாவகச் சேரி புவேந்தன் பாலர் பகல் பரா மரிப்பு இல்லத்தில் நடைபெற்றது.

புற்றுநோயைத் தடுக்கும் உணவுகளும் மூலிகைகளும் மற்றும் போசாக்கு சார்ந்த உத் திகளும் என்னும் பொருளில் ஆயுள் வேத வைத்தியர் ஆனந்த ஜோதி விஜயகுமார் கருத்துரை வழங்கினார். (த-207)

வடமராட்சி கிழக்கில்

## 4 கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னும் மீளக்குடியமர்வு இல்லை

பருத்தித்துறை, ஜூலை 5

வடமராட்சி கிழக்கில் இன் னும் 4 கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியேற்றம் இடம் பெறவில்லை.

வடமராட்சி கிழக்கில் 2000 ஆம்அண்டு நாகர்கோயில் கிழக்கு , நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் தெற்கு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் 2006 ஆம் ஆண்டு செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளி யான், போக்கறுப்பு, சுண்டிக் குளம் ஆகிய ஏழு கிராம சேவை யாளர் பிரிவுகளிலிருந்தும் மக் கள் இடம் பெயர்ந்திருந்தனர்.

அந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த 13 கிராம சேவையாளர் பிரிவுகளில் 9 கிராம சேவையாளர் பிரிவு களில் மக்கள் மீளக்குடியேற் றப்பட்டுள்ளார்கள்.

நாகர்கோயில் கிழக்கு, நாகர் கோயில் மேற்கு, நாகர்கோயில் தெற்கு, சுண்டிக்குளம் ஆகிய 4 கிராம சேவையாளர் பிரிவு களிலேயே மேலும் மக்கள் மீளக்குடியேற்றப்பட வேண்டி யுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டது. ()

## நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

நெடுந்தீவு உதவி அரச அதி பர் பிரிவுக்கான பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என பிர தேச செயலர் ஆ.சிறி அறிவித் துள்ளார். பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். இதில் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், போக்கு வரத்து, நெடுந்தீவு படகு சேவை, குறிகாட்டுவான் நெடுந்தீவு இறங்குதுறை அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படும்.

குறிப்பாக தேசிய நீர்வழங் கல் வடிகாலமைப்புச் சபையால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட வுள்ள கிராமிய குடி தண்ணீர் திட்டம் தொடர்பாக எந்திரி. எஸ்.ஸ்ரெயிலிதரன் அதில் விளக்கு வார். (த-302)

## பிரதேச செயலர் பிரிவுகளில் கைத்தொழிலாளர் சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச் சபை யாழ். மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர் களின் எதிர்காலத் தொழில் மேம் பாட்டுக்கான செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக சிறிய நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான சங்கங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் மேற்படி சங்கம் பிரதேச செயலர் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான வைபவம் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு வலி.வடக்குப் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி செயலகப் பிரிவுக்குட்பட்ட அனைத்து சிறிய நடுத்தர கைத் தொழில் முயற்சியாளர்கள் மற் றும் ‘திவி நகும’ திட்டத்தில் கைத் தொழில் துறையில் தெரிவான பயனாளிகளும் இதில் பங்கு கொண்டு அங்கத்தவராகி பயன டையுமாறு இலங்கை கைத் தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்டக் காரியாலயம் அறிவித் துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் மத்திய. வங்கியின் வடபிராந் திய முகாமையாளர் இ.ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறு தொழில் முயற்சிக்காக வழங் கும் விசேட சேவைகள் தொடர் பாகக் கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(த-26)

## 1 லட்சத்து 92 ஆயிரம் கண்ணிகள் குடாநாட்டில் இதுவரையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.மாவட்டத்தில் இது வரை ஒரு லட்சத்து 92 ஆயி ரத்து 112 வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன. இவற் றில் மனித எதிர்ப்பு மிதிவெடி, தாங்கி எதிர்ப்பு மிதிவெடி, வெடிக்காத வெடி பொருள்கள் என்பனவும் அடங்கும். இவ் வாறு யாழ். மாவட்ட மிதி வெடி செயற்பாட்டு அலுவலக தலைமை அதிகாரி வ.முருகதாஸ் தெரி வித்தார்.

அவர் இந்த விடயம் தொடர் பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 60 வீதமான பகுதிகளில் கண்ணிவெடி அகற் றப்பட்டுள்ளன. இன்னும் 40 வீதமான பகுதிகளில் கண்ணி வெடி அகற்றப்படவில்லை. இதுவரை அகற்றப்பட்ட நிலப் பரப்பிலேயே இந்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள் ளன.

மனித எதிர்ப்பு மிதிவெடி 93 ஆயிரத்து 086 , தாங்கி எதிர்ப்பு மிதிவெடி 156, வெடிக்காத வெடிபொருள்கள் 98 ஆயிரத்து 870 மீட்கப்பட்டுள்ளன.

இவற்றை ‘ ஹலோ ட்ரஸ்’ , ‘டனிஷ்’ கண்ணிவெடி அகற்றும் பிரிவு, இராணுவத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் 1 ஆம் [illegible] பிரிவு ஆகியன மீட்டுள்ளன என்றார். (த-15)

## பருத்தித்துறை - ஆழியவளை வீதியில் இ.போ.ச.பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கடந்த 21 வருடங்களுக் குப் பின்னர் பருத்தித்துறை - ஆழி யவளை வீதி நேற்றுமுன்தினம் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டது. வடமராட்சி கிழக் கிலுள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களை மீளக்குடிய மர்த்தும் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கலந்து கொண்டிருந்த போது இந்த வீதி யினூடான போக்குவரத்தும் ஆரம்பமாகியது. 36 கிலோ மீற் றர் நீளமான இந்த வீதியில் இறு [illegible] பஸ்சேவை இடம்பெற்றது. அதன் பின்னர் தற்போதே வீதிப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

பருத்தித்துறை - ஆழியவளை போக்குவரத்துச் சேவை தொடர் பாக பருத்தித்துறைச்சாலை பொதுமுகாமையாளர் குகபால செல்வம் உதயனுக்குத் தெரிவித் தவை வருமாறு:

பருத்தித்துறையிலிருந்து ஆழியவளை வரையும், ஆழிய வளையிலிருந்து பருத்தித்துறை வரையும் தலா மூன்று தடவை கள் பஸ்சேவை தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

அந்த வீதியில் எத்தனை பஸ் களை எந்தெந்த நேரங்களில் சேவையில் ஈடுபடுத்துவது குறித்து நேர அட்டவணை தயாரிக்க வேண்டியுள்ளது.

அதற்கு முன்னோடியாக அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தி யோகத்தர்கள், மாணவர்கள், கடற் றொழிலாளர்கள் , கிராம மட்டத் தலைவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து வருகின்றோம்.

எதிர்வரும் வாரம் முதல் ஒழுங் கான நேர அட்டவணைப்படி பஸ்போக்குவரத்துச் சேவை மேற்கொள்ளத் திட்டமிட்டுள் ளோம் - என்றார். (த-14-190-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு யாழ். நகரில் 5 மாடிக் கட்டடம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அடிக்கல் நடுவார்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் வடக்கு நிர்வாக வேலைகளுக்கு யாழ். நகர் மத்தியில் 5 மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

140 மில்லியன் ரூபா செலவில் நவீன வடிவில் சபையின் வடக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் அலுவலகமே ஐந்து மாடி கட்டடமாக அமைக்கப்படவுள்ளதாக யாழ்.-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துக்கான திட்டப்பணிப்பாளர் எந்திரி தி. பாரதிதாசன் தெரிவித்தார்.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளும் தேசிய நீர்வழங்கல் அமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகி யோர் இணைந்து அடிக்கல் நடுவர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதேச சபை, நகரசபை செயலாளர்கள் கலந்து கொள்வர் என யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். ஜெகூ தெரிவித்தார்.

(த-302)

# ஜெய்ப்பூர் நிறுவன ஆண்டு நிறைவு விழா வலுவிழந்தோருக்கு இடையே போட்டிகள்

நவாலி, ஜூலை 5

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 24 ஆவது நிறைவு தினத்தையொட்டி வலுவிழந்தவர்களுக்கு இடையே எதிர்வரும் 16ஆம் திகதி போட்டிகளை நடத்தவுள்ளனர்.

முச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள் ஆகியவற்றுடன் சில நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகளில் செயற்கைக்கால் அவயவம் பொருத்தியவர்களே பங்குபற்ற முடியும்.

பங்குபற்ற விரும்புபவர்கள் தமது விவரங்களை தமது பிரிவு கிராமசேவையாளரிடமோ அல்லது சமூக சேவை உத்தியோகத்தர்களிடமோ உடன் சமர்ப்பிக்குமாறு சமுக சேவை உத்தியோகத்தர் வி. அருந்தவராசா அறிவித்துள்ளார். (வ-100)

## அருள் கிடைக்கட்டும்...



ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத் தேர்த் திருவிழாவில் பிள்ளையார், முருகன், அம்மன் ஆகியோர் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்கள். (100)

# போர்க்குற்றங்களுக்கு இந்தியா உடந்தை; கோத்தபாயவின் கூற்றிற்கும் மௌனம்

## சென்னை பல்கலைக்கழக அரசியல் துறைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜீலை 5

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு இந்தியா உடந்தையாக இருந்துள்ளது என்று சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொது நிர்வாகத் துறையின் தலைவர் இரா.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் இந்தியாவை துரோகம் இழைத்து விட்ட நாடாகவே பார்ப்பதாக அவர் 'த வீக் கெண்ட் லீடர்' எனும் ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்:

விடுதலைப்புலிகளுக்கு எதிரான கோபத்தை காங்கிரஸ் கட்சி வெளிப்படுத்தியதன் மூலம் இந்தியாவுக்கும், இலங்கை தமிழருக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்பை மலினப்படுத்தியுள்ளது. இலங்கைத் தமிழர்கள் கடந்த அறுபது ஆண்டுகளாக அரசியல் மற்றும் சமத்துவ உரிமைகள் கோரி நடத்தி வந்த போராட்டம் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை மூலம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதில் இந்தியாவின் வகிபாவம் குறித்து பல் வேறு தரப்புக்களிலிருந்தும் கேள்விகள் எழுந்துள்ளன.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு வெளிப்படுத்திவரும் அசமந்தமான போக்கை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைக்கான கடந்த தேர்தலில் காங்கிரஸ் தி.மு.க கூட்டணியை தோற்கடிக்கச் செய்வதில் இலங்கை தமிழர் விரோதக் கொள்கையே பிரதான காரணியாக விளங்கியது.

வன்னியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்டப் போரில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்ததாகக் கூறியிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவிக்காத மூலம் இந்தியா தனது இரட்டை முகத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை பற்றிய தமிழகத்தின் கொள்கையை இந்தத்தீர்மானங்கள் மீளாய்வு செய்ய வழிவகுத்துள்ளதுடன் இலங்கை மீதான இந்தியாவின் கொள்கை பற்றிய நாடாளுமன்ற விவாதம் ஒன்றை நடத்த மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் உரிமையை தமிழக அரசு கொண்டுள்ளது- என்றார். (வ)




அன்புச் செல்வமே!
உனது 22 ஆவது பிறந்த நாளில்
உன் முகம் காண எம்முள்ளம் துடிக்கின்றது
உன் நினைவுகள் தினம் எம்மை வாட்டுகின்றன
ஓடோடி வந்து எம் துயர் ஆற்றாயோ?

9/7, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(5474)

குடும்பத்தினர்

**UNIVERSITY OF JAFFNA**

**VACANCY**

**POST OF WORKS ENGINEER (CIVIL) GRADE II**

Attention is drawn to the paper advertisement appeared on 2nd July 2011. Please read with the following corrections in relevant places. Other details will remain unchanged.

Post of Works Engineer (Civil) Grade III should read as Post of Works Engineer (Civil) Grade II with the following as the qualification and salary scale applicable.

Qualifications:-

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University/ Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers.

And

(B) A minimum of five (05) years of experience in the Design, Construction and Maintenance of Buildings, Water supplies, Drainage, Road and Electrical Installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour.

**Salary Scale:-**

UEX2 (III) 32, 750 - 12x585-39, 770 pm.

**Registrar,**
**University of Jaffna.** (சி/1365) **2011.07.04.**

# மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசை

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் சட்டநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விஷேட பூசை, வழிபாடுகள் நடைபெற்று திருவாசகப் பாடல்கள் பாராயணம், சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். காலை 7.30 மணிக்கு மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு யாழ்ப்பாணம் வண்ணைஸ்ரீ வைத்தீஸ் வரா வித்தியாலயத்தில் நடராஜ மூர்த்திகளுக்கும், மாணிக்கவாசக சுவாமிகளுக் கும் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அகில இலங்கைத் திருமுறை மன்ற பண்ணிசை வகுப்பு மாணவர்களின் பண்ணிசை, திருவாசகப் பாராயணம் ஆகியன இடம்பெறும்.

* * *

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் மாணிக்கவாசகர் குருபூசை இன்று பி.ப. 3.30 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

## மரண அறிவித்தல்

### கணேசபிள்ளை துரைராசசிங்கம்



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் வியாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை துரைராசசிங்கம் நேற்று (04.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் அன்னமுத்து தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் கனகம்மா தம்பதியரின் அருமை மருமகனும் லலிதகுண ஞான செல்வ சுந்தரராணியின் அன்புக் கணவரும் விஜிதா (கனடா), சுதாகரன் (U.K), உமா, றஜினிகா (சுவிஸ்), தமயந்தி (தாதியர் கல்லூரி, யாழ்.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜமுகன் (கனடா), கிருஸ்ணதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அபிஷனின் பேரனும் கமலாதேவி, பவானியம்மா, பராசசிங்கம், உருத்திரசிங்கம், இரத்தின சிங்கம், கெங்காதேவி, ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வியாவில்,**
**காரைநகர்.**

(5476)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு அரசின் தீர்வு என்ன? வெளியானதும் ஐ.தே.க. பதிலளிக்கும்

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 5

தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் தொடர்பில் அரசு எதனை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது என்பதனை வெளிப்படையாகக் கூற வேண்டும். அவ்வாறு அரசின் திட்டம் வெளியிடப்படும் பட்சத்தில் நாங்கள் எமது நிலைப்பாட்டை அறிவிப்போம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க முயற்சிக்கின்றமை அர்த்தமற்ற விடயமாகவே அமையும்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை தொடர்பில் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைக்கவேண்டிய இந்தக் கட்டத்தில் அரசு உள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பலம் உள்ளது.

எனவே அரசியல் தீர்வு யோசனை விடயத்தில் அரசு தமிழ் பேசும் மக்களுக்கு என்ன தீர்வை வழங்கப்போகின்றது என்பதனை வெளிப்படுத்த வேண்டும். அரசுக்கு அதன் பின்னர் ஏனைய கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்கும்.

தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்திலிருந்து தெளிவான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றமை அனைவருக்கும் தெரியும்.

அரசு கடந்த காலங்களில் சர்வகட்சி மாநாட்டை நடத்தியதுடன் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவையும் நியமித்து நகர்வுகளை முன்னெடுத்தது. ஆனால் இறுதியில் ஒன்றும் இடம் பெறவில்லை.

எனவேதான் தற்போது அமைக்கப்படவிருப்பதாகக் கூறப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் எமது விசனத்தை வெளியிடுகின்றோம் - என்றார்.

இனப்பரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கான பிரேரணை நாடாளுமன்றத்துக்கு இன்று செவ்வாய்க்கிழமை அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அதில் 43 பேர் இடம்பெறுவர். ஆறு மாதகாலத்தில் இந்த தெரிவுக்குழு தமது யோசனைகளை முன்வைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வீடுகட்டுவதற்குக் காணி வழங்கக் கோரி இளைஞர் சாகும் வரை உண்ணாவிரதம்


மஸ்கெலியா, ஜூலை 5

வீடு கட்டிக்கொள்ள காணி வழங்காததையொட்டி நோர்வூட், வெஞ்சர் தேயிலை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 28ஆம் திகதி முதல் லோவ லோரன்ஸ் பிரிவிலுள்ள கற்பாறையின் மேல் ஏறிச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மடுல்சீமை பிளான்டேசனுக்கு உரித்தான நோர்வூட், வெஞ்சர் தோட்டத்தைச் சேர்ந்த இளைப்பாறிய தோட்டத் தொழிலாளியின் மகனான செல்வம் கிருஷ்ணகுமார் (வயது-23) என்பவரே இவ்வாறு உண்ணாவிரதமிருந்து வருகிறார். இது சம்பந்தமாக அவர் தெரிவித்ததாவது:-

தோட்டத் தொழிலாளியான எனது தந்தை இளைப்பாறி விட்டார். தற்போதுள்ள வீட்டில் எங்களுக்கு இடப் பற்றாக்குறை உள்ளது. இது சம்பந்தமாகத் தோட்ட முகாமையாளரிடம் கடந்த வருடம் கேட்ட போது வீடு கட்ட இடம் ஒன்றை ஒதுக்கிக் கொடுத்தார்.

இருந்தபோதும் அந்த இடத்தில் வீடுகட்ட முயற்சி செய்த போது தோட்ட முகாமையாளர் எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளேன். இடம் கிடைக்கும் வரை உண்ணாவிரதம் தொடரும் - என்றார்.



கிளிநொச்சியிலுள்ள இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த மீன்பிடி நடவடிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கின்றார்.

# கல்முனையில் திடீர் தீ விபத்து



கல்முனை,ஜூலை5

கல்முனை நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக இரண்டு கடைகள் உட்பட வை.எம்.சீ.ஏ அலுவலகமும் எரிந்து சேதமாகியுள்ளன.

கல்முனை நகரில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டதால் வை.எம்.சீ.ஏ. அலுவலகமும் நாளிதழ்கள், பாடசாலைப் புத்தகங்கள், காகிதாதிகள் விற்பனை செய்யும் கடையொன்றும் முற்றாக எரிந்து சேதமாகியுள்ளன. அத்துடன், புடவை விற்பனை நிலையமொன்றின் ஒரு பகுதியும் எரிந்துள்ளது.

தீயணைக்கும் நடவடிக்கையில் கல்முனை மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவு ஈடுபட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து மின்னொழுக்கினால் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த கல்முனை பொலிஸார், இந்த தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-30-21)

# ஏ.ரீ.எம் மோசடி அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 5

ஏ.ரீ.எம் மோசடி நடவடிக்கைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் காணப்படும் தனியார் வங்கிகளுக்குச் சொந்தமான ஏ.ரீ. எம். களில் இவ்வாறு சட்ட விரோதமான முறையில் பணம் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாக காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

பல மில்லியன் ரூபா இவ்வாறு தமது வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நுட்பமான முறையில் வாடிக்கையாளர்கள் தரவுகளைப் பெற்றுக் கொண்டு இந்த மோசடி இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இரண்டு ரோமானியர்கள் உள்ளிட்ட கும்பலொன்று ஏ.ரீ.எம். மோசடியில் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனியார் வங்கிகளில் 14 மில்லியன் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டிற்காக இந்த ரோமானியர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருவதாகப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச)

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள்

கொழும்பு, ஜூலை 5

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களுக்குச் சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளதாகச் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும் என இலங்கைச் சட்ட ஆலோசனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சட்ட ஆலோசனை வழங்கும் நோக்கில் வடக்கு, கிழக்கில் சுமார் 61 நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

ஏற்கனவே ஐந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், மீள் குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணி உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதேச மக்கள் சட்ட ஆலோசனைகளை வேண்டி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# குற்றவியல் நீதிமன்றத்தில் இணையப் போவதில்லை

## நீதி அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 5

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இணையப் போவதில்லை என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். ஆசிய- ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையின் தலைவராக ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உறுப்பு நாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இணைப்பது குறித்து எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. இவ்வாறு இணைவதன் மூலம் குறிப்பிட்ட உறுப்பு நாடுகளின் சுயாதீன நீதித்துறைக்குப் பாதிப்பு ஏற்படலாம் என அவர் கூறியுள்ளார்.

இதே வேளை, ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் விசேட செயலமர்வு ஒன்றினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விரைவில் மலேசியாவில் நடத்த உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பயுங்கரவாதம் , பெண்கள் மற்றும் சிறுவர்களை கடத்துதல், சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டுப் பணியாளர்கள் தொடர்பில் ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையில் உறுப்பு நாடுகள் முன்வைத்த யோசனைத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அரசின் பஸ் கட்டண மீளாய்வுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம்

கொழும்பு, ஜூலை 5

அரசினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட பஸ் கட்டண மீளாய்வுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது,

இந்த பஸ் கட்டணம் போதுமானதாக இல்லை என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். எனவே, குறித்த மீளாய்வுக்கெதிராக மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு தரம் மிக்க சேவையை வழங்குவதற்காகத் தனியார் பஸ் சேவையின் பங்களிப்பை முழுமைப்படுத்துவதே இதன்நோக்கம் என கெமுனு விஜேரட்ன குற்றஞ் சாட்டியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
05 ஜூலை 2011 செவ்வாய்க்கிழமை

# விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது இந்த மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை வளமாக்குவதுடன் வடமாகாணத்துக்கான நவீன தரத்திலான விளையாட்டுப் பயிற்சி மையமொன்றைச் சுமார் 325 மில்லியன் ரூபா செலவில் அமைப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பளை, பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேசங்களில் பிரதேச விளையாட்டு அரங்குகளை அமைப்பதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமையவிருக்கும் பிரதான விளையாட்டு அரங்குக்கான அடிக்கல்லை இந்த மாத இறுதியில் நடுவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கு அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமை தாங்கினார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (க)

# ஆனி உத்தரப் பொங்கல்

பூநகரி, ஜூலை 5

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, செல்லையாதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் ஆனி உத்தரப் பொங்கல் விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் கதிர்காமநாதன் சிறீதரன் தெரிவித்தார்.

இந்த ஆலயத்தில் வருடத்தில் 12 மாதங்களும் பொங்கல் நடைபெறுவது விசேட அம்சமாகும். அத்துடன் ஆனி மாதத்தில் நடைபெறும் உத்தரப் பொங்கல்விழா மிகவும் சிறப்பாக நடைபெறுவது வழக்கமாகும்.

இந்தப் பொங்கல் விழாவின் போது அடியவர்கள் பறவைக் காவடி, செடில் காவடி, பால் காவடி, பால்செம்பு, கற்பூரச் சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவு செய்து அம்பாளின் அருளைப் பெறுவர்.

போர் ஓய்ந்த நிலையில் இந்த ஆண்டுக்கான ஆனி உத்தரப் பொங்கல் மிகச் சிறந்த முறையில் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர்.

(க-406)

# சேதமடைந்து காணப்படும் செல்விபுரம் சிறுவீதிகள்

பூநகரி, ஜூலை 5

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, செல்விபுரம் கிராமத்தின் சிறுவீதிகள் யாவும் மிக மோசமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை காலத்தில் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குச் சில வீதிகள் சேதமடைந்து காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது. தினமும் இந்த வீதிகளைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், சாதாரண கிராம மக்கள் அனைவரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பூநகரிப் பிரதேச சபையின் நெல்சிப் திட்டமாவது இந்தச் சிறு வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு உதவுமா? என்ற கேள்வி இந்தப் பகுதி மக்களின் மனங்களில் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-406)

# கணினிப் பயிற்சி நிலையம்

பூநகரி, ஜூலை 5

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக்கிளையால் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் நன்மை கருதி இந்தப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அநேகமான உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை முடித்துக் கொண்டு மாலை வேளைகளில்இந்தக் கணினிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுவருவதை அவதானிக்க முடிகின்றது.

(க-421)

# கைதிகளின் விடுதலை வேண்டி மடு ஆலயத்தில் கூட்டுத் திருப்பலி

மன்னார், ஜூலை 5

தடுப்பு முகாம்களில் பல ஆண்டுகளாகச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் கைதிகளின் விரைவான விடுதலையை வேண்டி மடுமாதா ஆலயத்தில் மூன்று மறைமாவட்டங்களின் ஆயர்களால் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மடுத் திருப்பதியின் பெருவிழாவின் போது மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் யாழ்ப்பாணம், மற்றும் சிலாபம் ஆயர்கள் தோமஸ் சவுந்தரநாயகம், இவலன்ஸ் மென்டிஸ் ஆகியோர் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

இதன் போது மன்னார் ஆயர் தமது தலைமையுரையில் சிறைச்சாலைகளிலும், முகாம்களிலும் வாழ்ந்து வருபவர்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டுமென வேண்டுகின்றோம் என்று கூறினார். (க)

# பொன்னகரில் வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி, பொன்னகரில் வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பதினொரு வீடுகளே இவ்வாறு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சந்திரகுமார் எம்.பி. ஆகியோர் வீடுகளை இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வழங்கினார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் சு.இராசநாயகம், கரைச்சிப் பிரதேச செயலர் கே.நாகேஸ்வரன், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க)

## சாதனையாளர்கள்...



சாதனை தொடரட்டும்: கிளிநொச்சிக் கல்வி வலய மட்டத்தில் நடைபெற்று முடிந்த பெரு விளையாட்டுக்கள் மற்றும் மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றியீட்டிய வேரவில் இந்து மகா வித்தியாலய மாணவ, மாணவிகள் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி மதுரநாயகம், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். சுகுமார், உடற் பயிற்சி ஆசிரியர் சாள்ஸ் இன்பதாஸ் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (127)

# மன்னார் மீன்பிடிக் கிராமங்களை நாடி வரும் தென்பகுதி மக்கள்



மன்னார், ஜூலை 5

மன்னாரிலுள்ள மீன்பிடிக் கிராமங்களைப் பார்வையிடுவதற்காக தென்பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் நாளாந்தம் வந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மன்னாரிலுள்ள மீன்பிடிக் கிராமங்களுக்குச் சென்று மீனவர்களைச் சந்தித்து உரையாடுகின்றனர். சிலர் கடல் உணவுகளைக் கொள்வனவு செய்து தென்பகுதிக்கு அனுப்பி வைக்கின்றனர். இதை விட கடற்கரையோரத்தில் காணப்படும் சங்கு, சிப்பி ஆகியவற்றையும் எடுத்துச் செல்கின்றனர்.

நாளாந்தம் மீனவ கிராமப் பகுதிகளில் தென்பகுதியிலிருந்து வருகை தரும் மக்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. (க-601)

# தாமதமாகும் வீட்டுத்திட்ட கொடுப்பனவு; கடன்பட்ட பயனாளிகள் திண்டாட்டம்

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சியில் அரசசார்பற்ற நிறுவனங்களால் வீட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படுவதால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள இரத்தினபுரம், ஆனந்தநகர், திருவையாறு ஆகிய இடங்களைச் சேர்ந்த சில குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளதாகவும் தெரிய வருகின்றது.வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுமென்ற அதிகாரிகளின் உறுதிமொழியை நம்பிய பயனாளிகள் கடன் வாங்கியும், நகைகளை அடைவு வைத்தும் வீட்டுவேலைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். ஆனால் இவற்றுக்கான கொடுப்பனவுகள் உரிய நிறுவனங்களால் வழங்கப்படாமையால் இவர்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

ஆகவே உரிய நிறுவனங்கள் இனியும் காலதாமதம் செய்யாது தமது வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குமாறு இந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க)

# பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த சி.இராசேஸ்வரனின் 40 ஆண்டுகால கல்விச் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்குமுகமாக யோகபுரம் மகாவித்தியாலய அதிபர் த.யோகானந்தராசா அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கடந்த 29 ஆம் திகதி யோகபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற உயர்தர மாணவ மன்றத்தினரின் ஒன்றுகூடல் நிகழ்வின்போதே இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக மாதிரிக் கிராமமாகும் பள்ளிக்குடா

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிப்பு

பூநகரி, ஜூலை 5

பூநகரியில் உள்ள பள்ளிக்குடாக் கிராமம் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இதனை அபிவிருத்தி செய்வதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்திருக்கின்றார் புனர்வாழ்வு, மறுசீரமைப்பு, சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர.

பூநகரிக்கு வருகை தந்த அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர் அங்கு உரையாற்றிய போதே பள்ளிக்குடாகிராமம் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் 50 குடும்பங்களுக்குத் தலா இரண்டு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதில் ஒரு லட்சம் ரூபா மானியமாக வழங்கப்படும். மீதி ஒரு லட்சம் ரூபாவை 10 ஆண்டுகளில் குறைந்த வட்டியுடன் செலுத்தக் கூடிய கடனாக வழங்கப்படும்.

அத்துடன் இந்தப் பிரதேச மக்களுக்கு ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை வளர்ப்பதற்கான கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக பராமரிப்பு நிலையம்

முல்லைத்தீவு, ஜூலை 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தைக் கிழக்கு, நட்டாங்கண்டல் பிரதேச செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சமூகப் பராமரிப்பு நிலையம் மிக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம், மாகாண விசேட அபிவிருத்தி நிதியின் கீழ் பன்னிரெண்டு லட்சம் ரூபாவை இதற்கென வழங்கியிருந்தது.

இந்த நிலையத்தில் சமூக சேவைகள் அதிகாரி, சமூக சேவையாளர், சிறுவர் நன்னடத்தை அதிகாரி, உளவளத்துணை உதவியாளர், முன்பள்ளிப் பராய அபிவிருத்தி உதவியாளர், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

வறிய மக்களுக்குரிய சேவைகளை ஒரேஇடத்தில் திறமையாக வழங் வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கு அமைய இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சமூகப் பராமரிப்பு நிலையங்கள் யாவும் சென்ற ஆண்டிலேயே அமைத்து முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-121)

## இலவசக் கருத்தரங்குகள்

மன்னார், ஜூலை 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளை வவுனியா நகரசபை ஒழுங்கு செய்துள்ளதாகச் சபையின் உப- தலைவரான எம்.எம்.ரதன் தெரிவித்துள்ளார்.

இதன் ஓர் அங்கமாக மல்லாவி மத்திய கல்லூரியில், கல்லூரியின் அதிபர் எஸ்.ஜேசுதாசன் தலைமையில் இந்து நாகரீகம் பாடத்துக்கான கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம்பெற்றது. இந்தப் பாடத்துக்கான விரிவுரைகளை வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் வழங்கினார்.

இதில் 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-601)

## இயற்கைக்கும் எம்மீது கோபமா...?



தொடரும் அவலங்கள்: அண்மையில் வீசிய கடும் காற்றுக் காரணமாக வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் தற்காலிக வகுப்பறைக் கட்டடத்தின் கூரைப் பகுதி சேதமடைந்து காட்சியளிக்கின்றது. (127)

## கருகும் நெற்பயிர்கள்

கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளிலுள்ள நெல்வயல்களுக்குப் போதிய நீர்பாய்ச்ச முடியாத நிலை தோன்றியுள்ளதால் நெற் கதிர்கள் கருகும் நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்கள் சிறுபோக நெற்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் நெல் வயல்களிலுள்ள பயிர்கள் கதிர்வரும் நிலையிலுள்ளன. ஆனால் வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதில் உள்ள தடைகள், தாமதங்களால் உரிய வேளையில் நீரைப் பெறமுடியாத நெற்பயிர்கள் கருகும் அபாயம் நிலை தோன்றியுள்ளது.

எனவே உரியவர்கள் இனியும் காலதாமதம் செய்யாது ஒழுங்கான முறையில் நீரைப் பாய்ச்சுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென விவசாயிகள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# தேர்தல் சூறாவளியினுள் சிக்கியுள்ள வன்னி மக்கள்

> **வன்னியில் தேர்தல் பிரசாரங்கள் தொடங்கிவிட்ட நிலையில் – அங்கு வாழும் மக்கள் குடியிருந்த இடங்கள், தேடிய சொத்துக்கள் உறவுகள் எல்லாமே காற்றில் கரைந்து சோகத்தின் வடுக்கள் இன்னமும் அவர்களின் மனங்களிலிருந்து மறையாமல் ஆழமாகப் பதிந்து கிடக்கின்றன. இந்த நிலையில் இவர்களின் வாக்குக்காக...!**

வன்னியில் வாழ்ந்த ஒரே காரணத்துக்காக உலகம் இதுவரை காணாத கொடிய அவலங்களைச் சந்தித்து மீள் குடியமர்ந்த வன்னிமக்கள் தற்போது தம்முன்னே சுழன்றடிக்கும் உள்ளூராட்சித் தேர்தல் என்ற சூறாவளியின் முன்னால் அலமலந்து நிற்கின்றனர்.

குடியிருந்த இடங்கள், தேடிய சொத்துக்கள், அன்புடன் அரவணைத்த உறவுகள் எல்லாமே காற்றில் கரைந்த சோகத்தின் வடுக்கள் இன்னமும் இவர்களின் மனங்களிலிருந்து மறையாமல் ஆழமாகப் பதிந்து கிடக்கின்றன.

பலர் இவற்றின் தாக்கத்தால் நிரந்தர மனநோயாளிகளாக மாறிப் புலம்பியபடி அலைகின்றனர். இந்த மக்களில் பலர் இன்னமும் கிழிந்து தொங்கிய நிலையில் காணப்படும் தறப்பாள்களினதும், காற்றில் பறந்து செல்லும் தகரங்களினதும் அரவணைப்பில் தான் தமது காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

சீரான போக்குவரத்து வசதிகள் இல்லை. சுகாதார வசதிகள் போதியளவு இல்லை. குடிதண்ணீர் தேடி அலையும் பரிதாபம். தொழிலின்மையால் வறுமையில் வாடும் அவலம். பிள்ளைகளின் கல்விக்கான ஏது நிலைகள் இன்னமும் பூரணமாகக் கிட்டாத நிலை. மின்சார வசதிகளைப் பலர் பெறமுடியாத இழிநிலை. பல இடங்களிலும் சொந்தக் காணியில்லாத ஒரே காரணத்துக்கான வீட்டுத் திட்டங்களில் புறக்கணிப்பு. கடற்றொழிலாளர்கள் தமது தொழிலில் முழுமையாக ஈடுபடமுடியாத நிலைமை. மீள் குடியமர்ந்த மக்களின் சொத்துக்கள் இன்னமும் சமூக விரோதிகளால் கடத்தப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்கின்றன.

பல இடங்களில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற பரிதாபகரமான நிலைமை. இப்படியாக அடுக்கிக்கொண்டே போகலாம்.

வன்னி மக்கள் இப்போதும் மீள் குடியமர்ந்து வருக்கிறார்கள். மீள்குடியமர்வு தாமதமாவதற்கான பிரதான காரணமாகக் கண்ணிவெடிகளை அகற்றாமை கூறப்படுகின்றது. யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள போதும் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரிதாக மாற்றமேதும் நிகழ்ந்துவிட்டதாகக் கூறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் வடபகுதியில் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன.

இந்த வாரம் இதன் செயற்பாடுகள் வன்னிப்பகுதியில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாமென்பதை நிரூபிப்பதற்காக வழக்கம்போலத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் களத்தில் தோன்ற ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாக அரச தரப்பினரும் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தேர்தல்களில் வெற்றி பெறுவதன் மூலம் வடபகுதித் தமிழ் மக்கள் அரசுடன் இணைந்திருக்கிறார்கள் என்ற பார்வையை உலக அரங்கிற்குக் காண்பிப்பதில் அரசு முனைப்புடன் செயற்படுகின்றது.

யுத்தத்தின் போது இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அரசுக்கு எதிராக வலுவடைந்திருக்கும் இந்த வேளையில் தேர்தல் வெற்றி என்பது அரசுக்கு அவசியமானதொன்றாகவே உள்ளது.

ஆகவே இதனை அடைவதற்கு அரசின் சகல வளங்களும் பயன்படுத்தப்படும் சாத்தியம் உண்டு.

இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தோன்றியுள்ளன. அரசின் முக்கிய அமைச்சர்கள் வன்னிப்பகுதியிலே தற்போது முகாமிட்டு உள்ளனர். வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. நலிந்து, நைந்து போய் வீழ்ந்து கிடக்கும் இந்த மக்களின் பலவீனத்தை அரசின் கையாள்கள் நன்கு பயன்படுத்தி வருவதாகத் தெரிகின்றது.

வறுமையிலும், மனவேதனையிலும் ஒடுங்கிக்கிடக்கும் மக்கள் தமது வாக்குறுதிகளை ஏற்பார்கள் என்ற நம்பிக்கையில் அரசு உள்ளது. இதற்கேற்றாற் போல் காய்களும் நகர்த்தப்பட்டு வருகின்றன.

'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது முது மொழி. ஆனால் எந்த நிலையிலும் தனது உணர்வை இழக்காதவன்தான் உண்மையான மனிதன். வன்னியில் தேர்தல் களத்தில் முன்னாள் முக்கிய போராளிகள் சிலர் அரசுக்கு ஆதரவாகப் பரப்புரையில் ஈடுபட்டுள்ளதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தவறென்று யாராலும் பகிரங்கமாகக் கூற முடியுமா? கூறினாலும் அதனால் பயனேதும் விளையப்போவதில்லை. ஆனால் ஒன்று மட்டும் உள்ளத்தை நெருடுகின்றது. பல ஆயிரக் கணக்கான மக்களின் சீரழிவுக்கும், அழிவுக்கும் வித்திட்ட இவர்கள் இன்று எல்லாவற்றையும் மறந்து அரசின் அரவணைப்பில் குளிர்காய்வது தான் மனதை நெருடுகிறது.

எது எவ்வாறு எனினும் நடைபெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தல் ஒரு முக்கியமான காலகட்டத்தில் நடைபெறுகின்றது என்பதை வன்னி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தற்காலிகமாகத் தோன்றும் சபலங்களுக்கும், பலவீனங்களுக்கும் இடந்தரக்கூடிய நேரம் இதுவல்ல என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணமும் இதுவாகும். *

**ராஜராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் விராட் விஸ்வ ...

# புங்குடுதீவு மேற்கு, 4ஆம் ...
# ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ...
# புதிய சிற்பத்தேர் வெள்...

## ஆலய பிரதம குருவின் ஆசி



புண்ணிய பூமியாம் இலங்கைத் தீவிலே புங்குடுதீவுதனில் பிட்டியம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாளுக்கு இந்த வருட மஹோற்சவத்தில் புதிய சிற்பத்தேர் உருவாகி வெள்ளோட்டம் நடைபெறுவதை யிட்டு மனம் பூரிப்படைகின்றது. அம்பாளின் அடியார்களின் பெரும் நிதிப்பங்களிப்பினாலும் அம்பாளின் நல் அருளினாலும் இந்தக் கைங்கரியம் நிறைவேறியுள்ளது என்றால் மிகையாகாது. இந்தச் சிற்பத்தேர் மிகவும் நேர்த்தியாகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளுடனும் கலை நயத்துடனும் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய சிற்பத்தேரில் அம்பாள் ஆரோகணித்து வீதியுலா வருகின்ற காட்சியைக் கண்டுகளித்து அம்பாளின் அருளைப் பெறுவதோடு இந்தத்தேரை உருவாக்க முன்னின்று உழைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் இந்தத் தேரை உருவாக்கிய சிற்பாச்சாரியாருக்கும், அவருடன் இணைந்து பணிபுரிந்த சிற்பக் கலைஞர்களுக்கும் முன்னின்று உழைத்த அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது ஆசி யுரையைச் சமர்ப்பிக்கின்றேன்!

பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள்
ஆலய பிரதமகுரு
நாகேந்திர அருணோதயக் குருக்கள்

## புதிய சித்திரத்தேர் உருவாக்கியவர் உள்ளத்திலிருந்து...



அம்பிக்கை சரணடைந்தேன். தேர் ஓர் நடமாடும் ஆலயம். ஆலயத்தை தீர்மானிக்கும் வண்ணம் சிறந்த கலையழகும், கம்பீரமும் இணைந்து தேருக்குப் புதியதொரு பரிமாணத்தைத் தருகின்றமை குறிப்பிட வல்லது. இறைவியின் திருவருளைப்பெற அடியார்கள் ஆலயத்தை நாடிச் செல்வர். ஆனால் அடியார்களை ஈர்த்து ஆட்கொண்டருள் கருணை மேலீட்டினால் அவர்களைத் தேடி இறைவி வீதி உலா வருவதற்கு வழி வகிப்பது தேர். எனது தந்தை யாரின் பாட்டனார் அதற்கு முன்னோர்கள் வழிபட்டுவந்த இந்த அம்பிகையின் ஆலயத்தில் இந்தப் புதிய சித்திரத் தேரினை உருவாக்குவதற்குக் கிடைத்த பாக்கியத்தை மனதில் கொண்டு எல்லாம் வல்ல எம்பெருமாட்டி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பா ளின் அருட் கருணையோடு பெரு மகிழ்வடைகின்றேன்.

இதற்கு எனக்கு இந்தத் தேர் வேலை/ சிற்பவேலைகள் செய்வதற்கு கற்றுத் தந்த திருநெல்வேலியைச் சேர்ந்த குருவான சிற்பாலய ஸ்தபிகளுக்கும் எனது தயாரின் சிறிய தகப்பனார் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையவனாக உள்ளேன். இந்தத் தேரை குறுகிய நாளில் முடிப்பதற்கு எனது உடன்பிறவாத சகோதரர்களுக்கும் சக தொழிலாளர்களுக்கும் குறிப்பாக ஆலய நிர்வாகத்தினருக்கும் ஆலய அடியார்களுக்கும் எனக்கு தோளோடு தோள் நின்று உழைத்த அந்த ஊர் மக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அம்பாளின் கடாட்சம் உரித்தாகட்டும்.

இராசதுரை பிரதீபன், ஸ்ரீ காமாட்சி அம்பாள் சிற்பாலயம்,
காமாட்சி அம்பாள் வர்ணக்கலையகம்,
த.மு: அரசடி வீதி, திருநெல்வேலி,
நி.மு:7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

## கிராம அலுவலர் வாழ்த்து

புங்குடுதீவு மேற்கு 4 ஆம், வட்டாரம் பிட்டியம்பதியில் அண்ட சராசரங்களுக்கும் தாயாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயப் புதிய சிற்பத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதை இட்டு அளவிலா ஆனந்தமடைகின்றோம். உலகம் தோன்றிய காலம் முதலே மக்களிடம் அன்பை வளர்க்கும் பணியை சைவ சமயம் செய்துவருகின்றது. மக்களிடம் அன்பை வளர்ப்பதற்கு இறைபக்தி உறுதுணையாக இருக்கின்றது.

ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் புங்குடுதீவில் உள்ள புராண ஆலயங்களில் ஒன்றாக விளங்கி வருகின்றது. இந்த ஆலயத்தில் மஹோற்சவங்கள் ஆகம முறைப்படியே காலம் காலமாக நடைபெற்று வருகின்றது. நீண்டகாலமாக இந்த ஆலயத்தில் கட்டுத்தேரில் காளி அம்பாள் பவனி வந்தாள்.

ஆனால், இன்று சிற்பத் தேரில் அன்னை எழுந்தருளி இருப்பது கண்கொள் ளாக் காட்சியாகும். ஆலய பரிபாலனசபையினர் அன்னையின் தேர்செய்யத் தீர்மானித்தவேளையில் புதுக்குடியிருப்பில் இருந்து பல இடர்களைச் சந்தித்து வந்த இராசதுரை பிரதீபன் அவர்களின் அயராத உழைப்பின் மத்தியில் இந்தச் சிற்பத் தேரை விரைவாக உருவாகித் தந்து, இன்று வெள்ளோட்டம் காணுகின்றோம். அவருக்கு இந்த இடத்தில் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக பல லட்சம் ரூபா செலவில் செய்யப்பட்ட தேரை விரைவாக இந்தக் கலாசார விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்வதற் காக விரைவாக இதற்கு தேர் தரிப்பிட [தேர்முட்டி] மண்டபத்தை அமைப்பதற்கு அடியார்களுக்கும் ஆலய நிர்வாகத்தினரும் விரை வாக நிறைவேற்றிக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அன்னையின் வெள்ளோட்ட நாளை அடுத்து ரதோற்சவ காட்சியையும் கண்டுகளித்து, தரிசித்து அவளருளைப் பெற்று உய்வோமாக!

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சு. சந்திரா
கிராம அலுவலர்
புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரம்.

## முன்னாள் தலைவரின் ஆசிச் செய்தி

சப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும், புங்குடுதீவின் மையப்பகுதியில் பிட்டிம்பதி என்னும் பெயர் கொண்ட நாலாம் வட்டாரத்தில் அகிலாண்ட கோடி நாயகியாக விளங்கும் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பா ளுக்கு இவ்வளவு காலமாக சிற்பத்தேர் இல்லாத குறையை நீக்கும் முகமாக அம்பாளின் அடியார்களின் முயற்சியாலும், ஆலய பரிபாலன சபையின் பெரும் தொண்டாலும் ஆரம்பிக்கப்பட்டு 2011ஆம் ஆண்டு சிற்பத்தேர் செய்து எதிர்வரும் ஆனித்திங்கள் 20 ஆம் நாள் 5.7.2011 முற்பகல் 10.32 தொடக்கம் 11.57வரையான சுபமங்கள நேரத்தில் வெள் ளோட்டவிழா வெகுசிறப்பாக நடைபெறுவதை முன்னிட்டும் சிற்பத் தேரை சிறப்பாக செய்து முடித்த சிற்பக் கலைஞர் அனலையூர் இராசதுரை பிரதீபன் அவர்களையும் நமது தீவகக் கலைஞர்களையும் மனதாரப் பாராட்டி சிற்பத்தேரில் அடுத்த நாள் 6.7.2011 ஏறி வீதியுலா வரும் அரும் பெரும் காட்சியைக் காணவும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வந்து புதிய தேரைக் கண்டு களிக்கவும் பாராட்டியும் வாழ்த் தியும் பூரிப்படைகின்றோம்.

ஆலய பரிபாலன சபை, முன்னாள் தலைவர் ஏ.பசுபதி.

## மஹோற்சவ குருவின் ஆசி



அண்ட சராசரங்களின் நாயகியாகவும் வேண்டுவோருக்கு வேண்டும் வரம் ஈந்தருளும் தாயாகவும் விளங்கும் அன்னை பராசக்தி புங்குடுதீவு மேற்கில் பிட்டியம்பதி எனும் திவ்விய ஷேத்திரத்தில் மந்திர சிம்மாசனத்தில் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி எனும் நாமத்துடன் வீற்றிருந்து அருள் பாலித்து வருகிறார். விஸ்வ பிரம்ம குல நாயகியாக விளங்கும் தாய்க்கு புதிய சித்திரத் தேர் அமையப் பெற்று இன்று வெள்ளோட்டம் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மஹோற்சவம் என்பது ஐந்தொழில்களையும் குறிக்கின்றது. அதில் தேர்த்திருவிழா அறியாமை எனும் இருளை அகற்றி ஞானம் எனும் ஒளியை ஊட்டுவதாக அமைந்துள்ளது. தேரினுடைய தத்துவம் பூமி, ஆகாயம், பாதளாம் போன்றவற்றின் அமைப்பை கொண்டுள்ளது. நான்கு சில்லுகளும் நான்கு வேதத்தையும், சிற்பங்கள் வாழ்வின் தத்துவத்தையும் குறிக்கின்றன. இவ்வாறான தேரை அமைத்துக்கொடுத்த தீவகத்தின் மைந்தன் விஸ்வப் பிரம்மஸ்ரீ இராசதுரை பிரதீபனுக்கும் அவரது குழுவினருக்கும் மற்றும் அனைத்து அடியார்களுக்கும் ஸ்ரீ காளி அம்பாளின் அருளும் எனது ஆசியும் என்றும் உரித்தாகுக.

மஹோற்சவ குரு சிவஸ்ரீ. மகா கணபதி, பிரபாகரக் குருக்கள்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.)

## கலாசார அதிகாரியின் வாழ்த்து



வரலாற்றுப் பெருமை மிக்க புங்குடுதீவு மேற்கு, 4 ஆம் வட்டாரம், பிட்டியம்பதியிலே ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் அமையப் பெற்றுள்ளது.

இங்கு எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் சுரந்து கொண்டிருக்கும் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் மிகப் பழமையானதொன்றாகும்.

இங்கு புதிய சிற்பத்தேர் [05.07.2011] வெள்ளோட்டம் நடைபெறுவதனையிட்டு பெருமகிழ்வடைகிறேன். இந்தச் சிற்பத்தேரினை நிர்மாணித்த திரு.இராசதுரை - பிரதீபன் அவர்களும் நன்கு பரீட்சையமானவர். அவரது கைவண்ணத்தில் நன்றாக அமையப் பெற்றுள்ளமை அம்பாளின் அருட் கடாட்சமாகும். சிற்பத்தேரினை அடியவர்கள் கூடி வடம்பிடித்து அம்பாளின் அருளை பெற வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகிறேன்.

எஸ். உதயபாலன்
இந்து கலாசார, உத்தியோகத்தர், தீவுப்பகுதி.

## தேரேறி வருகிறாள் பக்தர்களைக் காக்க!

பிட்டியம்பதி காளிகாம்பாள் தேரேறி வருகிறாள்
தட்டித் தட்டி வணங்குவோருக்கு வாரி வாரித் தருகிறாள்
கட்டிக் கட்டி மண்டபங்கள் தந்தோருக்கு தாராளமாய் வழங்குகிறாள்
முட்டி இடித்து வடம் பிடிப்போர் மனம் மகிழ அருள்கிறாள்

தகதக வெயிலை குளிராக்கி வைக்கிறாள்
கமகம என மணம் கமழ மாலை சூடி மகிழ்கிறாள்
பளபளக்கும் தங்கத்தேரில் பட்டுடுத்தி நகைக்கிறாள்
ஜல்ஜல் என சலங்கை ஒலிக்க அடி எடுத்து வைக்கிறாள்
பொன் கொடுக்கும் தீவகத்தில் ஆட்சிபுரிந்து நிற்கிறாள்
வானுயர்ந்து விருட்ச நிழலில் குளிர்ந்து மனம் மகிழ்கிறாள்
மானெனவே துள்ளித்துள்ளி பக்தர் குறை தீர்க்கிறாள்
கானம் பாடும் பக்தருடன் மகிழ்ந்து தானும் ஆடுகிறாள்

வளம் நிறை தீவதனில் வளைந்து வளைந்து வருகிறாள்
தளமதனில் மக்கள் வாழ உவந்து வரம் அளிக்கிறாள்
களனி செழிக்க அருள்மாரி அகமகிழ்ந்து பொழிகிறாள்
உளம் உருகும் பக்தர் மனை மாட்சி பெற அருள்கிறாள்

மாட்சிமை பொருந்திய அன்னையே
வீட்சியே இலையுன் அருளாலே
காட்சிகள் பலவும் காட்டி நின்று
கட்சி [illegible]

[illegible]
மாவட்ட நீதிபதி, ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேர் - ஒரு ...

மனித நாகரிக வரலாற்றிலே தேர் பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்... படைகளில் ஒன்றாகவும், தெய்வங்களின் ஊர்தியாகவும், சமய தத்துவப் பொருளை உணர்த்... நாகரி கங்களிலே குறிப்பாகச் சுமேரிய, அசீரிய, ஹிற்றைற்ஸ் நாகரிகங்களிலே தேர் ஒரு போர்... பழைய காலம் தொட்டுப் பயன்படுத்தினர். காலத்தால் முந்திய இந்திய இலக்கிய நூலான இரு... இந்திரன், சோமன், அக்கினி, மருத்ஸ் முதலிய தெய்வங்களைப் பற்றியும், தேர்ச்சவாரி, போர் ப... காகவும் விளங்கிற்று. இந்தியாவிலே நெடுங்காலமாக நிலவி வந்துள்ள நால்வகைப் போர்ப் ப...

தேரினைத் தக்கவாறு செலுத்தி வெற்றி பெறுதல் போல உள்ளத்தினைத் தக்கவாறு கட்டு... இலக்கியத்திலும் குறிப்புக்கள் வருகின்றன. குழந்தைகளுக்குரிய பருவங்களிலே சிறு தேரோட்... பயிற்சி பெறுதல் இன்றும் எம் நாட்டிலேயே காணக்கூடிய நிகழ்ச்சி. தமிழிலுள்ள பிள்ளைத்தமி... காலத்திலே தேரினை ஓட்டிய சூதன் [தேர்ப்பாகன் அல்லது சாரதி] மன்னரின் ஒரு முக்கிய... ஸ்ரீகிருஷ்ண பகவான் அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்து திருவருள் புரிந்தான். இறைவ... எனப் பெரியோர் குறிப்பிடுவர். மன்னரும், பிறமேலிடத்தவரும் வீரரும் பயன்படுத்திய தேர் கால... ஊர்தியாக மட்டும் மிளிர்கின்றது. அதன் வடிவம் மாறிற்று. சமய தத்துவக் கருத்துக்கள் பொதி... பொருளாகவும், பக்தர் உள்ளத்தினைத் தன்பாலிழுக்கும் திருவருட் சின்னமாகவும் தேர் மாறி...

ஆகம முறையிலமைக்கப்பட்ட கோயில்கள் வளர்ச்சியடைந்து நித்திய நை... தியக் கிரிை... பெறலாயிற்று. அரச மாளிகையினைக் குறித்த கோயில் எனும் தமிழ்ச்சொல்லும், பிராசாதம் [தே... தொடர்பினைக் காட்டுவதுபோல இரதோற்சவமும் அதனையே வலியுறுத்தும் தேர்கள், மரம், ... தேர்வடிவிலான கோயில்களும் கட்டப்பட்டன. இவற்றுள்ளே தனிப்பட்ட கற்பாறைகளைக் செ... 'ரதங்கள்' மிகக் குறிப்பிடத்தக்கவை. கல்லினாலே தேர்களும், சில்லுகளும் அமைக்கப்பட்டன... சாரங்பாணி கோயில், தாராசுரம் ஐராவதேஸ்வரர் ஆலயம், திருவலஞ்சுழி விநாயகர் கோயில் முத... லுள்ள கோனாக்கிரக்கிலுள்ள பெரிய நேர்த்தியான சூரியன் கோயில் தேர் வடிவிலமைக்கப்பட்... தேருக்கு ஒரு சில்லு உண்டு என்பர். ஆனால் இங்குள்ள கோயிலுக்கு 24 சக்கரங்கள் உள்ள... தேர்ச் சாரதியான அருணனைக் குறிக்கும், அருணஸ்தம்பம் உள்ளது. இந்தக் கோயிலிலுள்ள ... எனவே, இரு சில்லுகள் ஒரு மாதத்தினைக் குறிக்க 24 சில்லுகளும் 12 மாதங்களையும் குறிக்கும்... அசையாதிருப்பினும் இவை அசைந்து கொண்டிருப்பன போலக் காட்சியளிப்பன. கி.பி 16 ஆம்... விட்டலேஸ்வரர் ஆலய விமானத்திலுள்ள சக்கரங்களும் குறிப்பிடத்தக்கவை. எனவே, கல்லா...

இவற்றைவிட மரத்திலான பல்வேறு அளவினவாகிய நேர்த்தியான தேர்கள் பல இந்தியா... வரலாறு குறிப்பிட்ட ஆலய ஐதீகங்கள், வரலாறு முதலியனவற்றைச் சித்திரிக்கும் கவின்கல... இலங்கையிலுள்ள நயினை நாக பூஷணி அம்மன் கோயிலுள்ள நேர்த்தியான சிற்ப வேலைப்பாடு... காலப் பறாளை [யாழ்ப்பாணத்தில் உள்ளது] விநாயகர் ஆலயத்தேரிலே சமயச் சிற்பங்க... எழுந்தருளியிருக்கும் ஆலயமும், தேரும் வாழ்க்கையினை முழுமையாகச் சித்திரிக்கவேண்டு... நாடவேண்டும் என்பது ஆன்றோர் கருத்து. யாழ்ப்பாணத்திலுள்ள புங்குடுதீவு பிட்டியம்பதி... மேஸ்வரிக்கு அன்பர்கள் அமைத்துள்ள அழகிய சித்திரத்தேர் குறிப்பிடற்பாலது. இன்று ஈழத்தி... உயரம் 27 அடி; இதிலே தேர் ஆசனம் வரையுள்ள கீழ்ப்பகுதி 15 அடி உயரம் கொண்டது.

இந்தப் பகுதியிலே மிக நுண்ணிய கலை நேர்த்தியாக வாய்ந்த சிற்பங்கள் மரத்திலே செய்... ஈடேற்றத்துக்காக மேற்கொண்டருளிய பல திருவுருங்கள் நன்கு குறிப்பிடற்பாலன. முற்காலத்... அருள்பெற்ற இரும்புத் தொழிலாளிகள் இருவர் பற்றிய சிற்பங்களும் நேர்த்தியானவை. மு... இப்பெயர்ப்பட்ட தனிச்சிறப்புக்களும், பொதுச்சிறப்புக்களும் கொண்டு விளங்கும் இந்... சமயப்பற்றுக்கும், கலைப் பற்றுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த அழகிய தேரிலே அம்ர்... காட்சியினை எளிதிலே வருணிக்க முடியாதன்றோ?

இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயில்களிலே நடைபெறும் நைமித்திய விழாக்களின் ... தொழில்களிலே சம்ஹாரத்தினை [அழித்தலை]க் குறிக்கும் என்பர். இங்கு அழித்தல் என்பது ... பந்தங்களை ஒழித்தலே மும்மலங்களிலிருந்தும் ஆன்மா விடுபட்டுப் பேரானந்தப் பரம் பொரு... தேர் ஓட மலங்களும் நீங்கும் என்பர். தேரின் நான்கு சக்கரங்களும், சரியை, கிரியை, யோகம்,...

தேர் மனித உடலைக் குறிக்கும். இறைவன் உடலுள்ள இதயக் கமலத்திலே வீற்றிருப்ப... தேரினை இழுப்பது போன்று ஆன்மாவும் பல தடைகளைத் தாண்டி இறைவனை அடைய... இலட்சியங்களையும் இறைவன் திருவருளைப் பெற்று ஆன்மா உய்யும் நெறியினையும் தேர் கா... இதன்மூலம் ஆன்மா உய்யும் வழியினை இந்து சமய ஞானிகள் காட்டியுள்ளனர்.


ராஜலக்ஷ்மி கட்டடப் பொருள் விற்பனையகம்
Rajaluxmy Building Material Sales Centre
இல. 132, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 0212224350

கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

...ஸ்வரி பிரம்மனே நமஹ

# ...ஆம் வட்டாரம், பிட்டியம்பதி
# ...ரி அம்பாள் தேவஸ்தானம்
# ...ள்ளோட்ட விழா-05.07.2011





## பிரதேச செயலரின் வாழ்த்து



புங்குடுதீவு, மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாளின் புதிய சித்திரத் தேர்வெள்ளோட்டவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். அண்டசராசரங்களின் சக்தியாம் லோகநாயகி, ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி உருவில் இந்தப் பகுதியில் வீற்றிருந்து அடியவர்களின் துன்பங்களை நீக்கி அருள்பாலித்து வருகிறார். இந்தப் பகுதி மக்களின் காக்கும் தெய்வமாக விளங்கி துஷ்ட சக்திகளை அழித்து மக்களுக்கு நல்வாழ்வு அருள்வதற்காக தேரேறிவரும் காட்சி காண்பதற்கு கிடைத்தற்கரிய பேறாகும். இதுவரை காலமும் அன்னையின் தேர் உற்சவம் கட்டுத்தேரிலேயே நிகழ்ந்து வந்தது. இந்த வருடம் முதல் சிற்பத்தேரிலே அன்னை ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அடியவர்களுக்கு அருள்பாலிக்க வரும் காட்சியைக் காண மனம் பேரவா கொள்கின்றது.

இந்தச் சிற்பத்தேர் உருவாக்கும் புண்ணிய கைங்கரியத்தில் தன்னை ஈடுபடுத்திய சிற்பக்கலைஞர் திரு.இராசதுரை பிரதீபன் அவர்கள் தீவகப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டவர், என்பது இந்தப் பகுதி மக்களுக்கு பெருமைக்குரிய விடயமாகும். காரணம், அவரது கைவண்ணத்தில் பல அழகிய சிற்பத்தேர்களை அவர் உருவாக்கியுள்ளார். தற்போதைய பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாளுக்கு உருவாக்கப்பெற்றுள்ள இந்தச் சித்திரத்தேர் அவரது கைவண்ணத்தை ஐயம், தெளிவுபெற எமக்கு எடுத்து ரைக்கின்றது. மேலும் இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் தம்மை அர்ப்பணித்த இந்தப் பகுதி மக்களின் இறைபணி போற்று தற்குரியதாகும். பொருள்தேடுகின்ற இந்த பூமியிலே அம்பிகையின் அருள்வேண்டி இறை பணியில் தம்மை அர்ப்பணித்து சிறப்பாக தொண்டாற்றி வருகின்ற தேவஸ்தான பரிபாலன சபையின் அங்கத்தவர்களின் பணியும் மகத்தானது. அம்பிகையின் அருள் எம் அனைவருக்கும் கிடைப்பதாகுக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

முத்துலிங்கம் நந்தகோபாலன்,
பிரதேச செயலாளர், தீவகம் மேற்கு.

## தலைவரின் உள்ளத்திலிருந்து



இந்த உலகம் முழுவதும் ஒரு சக்தியின் ஆற்றலால் இயங்குகின்றது. பரம்பொருளைப் பெண்ணாகவும் பராசக்தியாகவும் தாய்த்தெய்வமாக அம்மனாகத் தேவியாக நோக்குவது குறிப்பிடற்பாலது. பெரிய ஆற்றல் உள்ளவராதலால் அவர் பராசக்தி, என அழைக்கப்படுகின்ற நான் சக்தியின் வடிவத்தின் ஒன்றான காளி என போற்றப்படும் நாமம் கொண்டு புங்குடுதீவில் மேற்கு, 4 ஆம் வட்டாரத்தில் பிட்டியம்பதியில் ஆலமர, அரசமர வான் பயிர்ச்சோலை இயற்கையான பதிதனில் மாவிலங்கை மரத்தடியில் கோயில் கொண்டு அடியார்களின் இன்னல்களைத் தீர்த்து வேண்டிய வரங்களை வாரி வழங்கும் சக்தியாக விளங்கும் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி திருவருளாலே சிற்பத்தேர் அமைக்க எமது அடியார்களாலும் புலம்பெயர்ந்து வாழும் அடியார்களாலும் கூடி அர்ப்பணிப்போடு தேவையான நிதிக்கு காணிக்கையாகவும் பொருளாகவும் செலுத்தி சிற்பத்தேர் அமைக்கும் பணியில் ஈடுபட்டுத் தேரை அமைப்பதற்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் சிற்பாலய சிற்பாச்சாரியார் இராசதுரை பிரதீபனும் அவரது குழுவினரும் மற்றும் தீவக சிற்பக்கலைஞர்களும் இணைந்து வடிவமைத்து இன்று [05.07.2011] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.32 தொடக்கம் 11.57 சுபநேரத்தில் வெள்ளோட்டம் காண்பதைப் பெரும் சக்தியின் பேறாக ஏற்று மனம் பூரிப்படைகின்றது. வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல சக்தியாம் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் அருள்புரிய வேண்டி அடியார்கள் எல்லோருக்கும் அம்பிகையின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

க.கனகலிங்கம்,
தலைவர்,ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலனசபை.

## "ஊர் கூடி வாரீர்...."



சைவத்தை வளர்த்திடும் சான்றோர் நிறைந்திட்ட புங்குடுதீவு தன்னில் பிட்டியம் பதியுறைந்து காட்சி தந்து காத்தருளும் எங்கள் காளித்தாயின் இந்தவருட பெருவிழாவின் மகத்தான நாள் இன்றாகும். உலகின் பரந்துபட்டு வாழும் அம்பாளின் பக்தர்கள் ஏகோபித்த ஆதரவோடும், மாறாத துன்பச் சுமைகளைச் சுமந்தபோதும் அன்னையின் ஆலய வளர்ச்சியில் அதி அக்கறை மிகுந்த அடியார்களின் ஒத்துழைப்போடும் அன்னைக்கு அழகிய சித்திரத்தேர் கவியுறு கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டு இன்று "வெள்ளோட்டம்" காணுவதையிட்டு பெருவகை அடைகின்றோம். காலாகாலமாய் ஆலய வளர்ச்சியில் எமது நிலையமும், கழகமும் இணைந்தே உள்ளன என்பது, வெள்ளிடைமலை. அந்த வகையில் இந்த முறையும் எமது உறுப்பினர்கள் துடிப்போடு செயலாற்றி அம்பாளின் அருட்கிருபையால் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்தி மகிழ்கின்றேன்.

"காளித்தாயை நம்பினோருக்கு ஊழிப் பெருந்துயர் ஓடியேபோகும்"

ம.சத்தியாகரன், தலைவர் , சிவலப்பிட்டி சனசமூக நிலையம்
அம்பாள் விளையாட்டுக்கழகம், புங்குடுதீவு-4.

## ... - ஒரு குறிப்புரை

...படுத்தப்பட்டு வந்துள்ளது. மன்னரும், பிரபுக்களும், செல்வந்தரும் செல்லும் ஊர்தியாகவும், போர்ப் ... பொருளை உணர்த்தும் சின்னங்களில் ஒன்றாகவும் தேர் விளங்கி வந்துள்ளது. புராதன மேற்காசிய ...ளிலே தேர் ஒரு போர்ப் படையாகவும், ஊர்த்தியாகவும் பயன்படுத்தப்பட்டது. இந்தியர் தேரினை மிகப் ... இலக்கிய நூலான இருக்குவேதம் ரதம் [தேர்] பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றது. குறிப்பாகச் சூரியன், ... தேர்ச்சவாரி, போர் பற்றியும் குறிப்புக்கள் வருகின்றன. தேர்ச்சவாரி ஒரு முக்கியமான பொழுதுபோக் ...நால்வகைப் போர்ப் படைகளிலே தேர்ப்படையும் ஒன்றாகத் திகழ்ந்தது.

...னத் தக்கவாறு கட்டுப்படுத்தி இறைவனையடைவதற்கான வழிபற்றி வேத இலக்கியத்திலும் பிற்கால ...களிலே சிறு தேரோட்டலும் ஒன்று, பிறந்து பின் தவழும் குழந்தை எழுந்து நடத்தற்குச் சிறு தேரோட்டிப் ...இலுள்ள பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களில் இந்தப் பருவம் பற்றிய சிறப்பான பாக்கள் உள்ளன. பழைய ...ன்னரின் ஒரு முக்கியமான ஆலோசகராகவும், அதிகாரியாகவும் இலங்கினான். தேர்ச் சாரதியாகவே ... புரிந்தான். இறைவன் ஆன்மாக்களுக்கு என்றும் இவ்வாறே உள்ளத்திலிருந்து அருள்பாலிக்கிறான் ...ன்படுத்திய தேர் காலப்போக்கிலே உலகனைத்தையும் ஆக்கி அருள் வழங்கும் இறைவன், இறைவியின் ... கருத்துக்கள் பொதிந்துள்ள கலைச் செல்வமாகவும், அரும்பெரும் காட்சிப் பொருளாகவும், அழகியற் ...ணமாகவும் தேர் மாறிற்று.

...ரியக் கிரியை... ஒழுங்காக நடைபெற்றுவரத் தேர்த்திருவிழா மிக முக்கியமான ஒரிடத்தினைப் ...ல்லும், பிராசாதம் [கோயில்] எனும் வடமொழிச் சொல்லும் அரசனுக்கும் கோயிலுக்குமுள்ள நெருங்கிய ...த்தும் தேர்கள், மரம், உலோகம், கல் முதலிய பல்வேறு மூலப்பொருள்களாலே செய்யப்பட்டு வந்தன. ... கற்பாறைகளைக் கொண்டு மாமல்லபுரத்திலே கி.பி.ஏழாம் நூற்றாண்டிலே நரசிம்மவர்மன் அமைத்த ...ளும் அமைக்கப்பட்டன. இவற்றுள்ளே திருவாரூர் தேர் குறிப்பிடற்பாலது. இதனைவிடக் கும்பகோணம் ...விநாயகர் கோயில் முதலியனவற்றிலுள்ள தேர்ச்சக்கரங்களும், சிற்பங்களும் குறிப்பிடற்பாலன. ஒரிசாவி... வடிவிலமைக்கப்பட்டுள்ளது. இது கி.பி 13 ஆம் நூற்றாண்டிலே அமைக்கப்பட்டது. சூரிய பகவானின் ... சக்கரங்கள் உள்ளன. இந்தக் கல் ரதத்துக்கு ஏழு குதிரைகள் பூட்டப்பட்டுள்ளன. இதிலே சூரியனின் ...ந்தக் கோயிலிலுள்ள ஒவ்வொரு சக்கரமும் ஒவ்வொரு மாதத்தின் ஒவ்வொரு பட்சத்தினைக் குறிக்கும். ...ங்களையும் குறிக்கும். இந்தியாவின் பல்வேறு இடங்களிலுள்ள சக்கரங்களில் இவை அழகு வாய்ந்தவை. ...ளிப்பன. கி.பி 16 ஆம் நூண்டிலே கிருஷ்ண தேவராயன் எனும் அரசன் ஹம்பியெனும் இடத்திலமைத்த ...வை. எனவே, கல்லான தேர்களைவிடத் தேர்களைச் சித்தரிக்கும் கற்சிற்பங்களையும் குறிப்பிடலாம். ...தேர்கள் பல இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ளன. இவை இந்து சமய புராணக்கதைகள் அடியார் ...த்திரிக்கும் கவின்கலைச் சிற்பங்களைக் கொண்டவனவாகவும் விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக ...ன சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட தேரினைக் குறிப்பிடலாம். சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட ...லே சமயச் சிற்பங்களுடன் காமகலைச் சிற்பங்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன. இறைவன் சிறப்பாக ...ச் சித்திரிக்கவேண்டும். சிற்றின்ப வெள்ளத்தில் அமிழ்ந்து விடாது பேரின்ப நிலையினை ஆன்மா ...குடுதீவு பிட்டியம்பதிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருட்பெரும் கடலாம் காளிகா பர...பாலது. இன்று ஈழத்திலுள்ள தேர்களிலே உயரமான தேர்களில் இதுவும் ஒன்றாகும். இதன் முழுமையான ...பரம் கொண்டது.

...ங்கள் மரத்திலே செய்யப்பட்டு மிளிர்ந்து கொண்டிருகின்றன. இவற்றுள்ளே அம்பிகை ஆன்மாக்களின் ...ற்பாலன. முற்காலத்தில் இந்தத் திருக்கோயிலமைந்துள்ள திருத்தலத்திலே அம்பாளை நன்கு வழிபட்டு ... நேர்த்தியானவை. மூலைகளிலே கடற்கன்னிகளின் அழகான வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ...ண்டு விளங்கும் இந்த அழகிய தேர் ஈழநாட்டுச் சிற்பிகளின் கலைத்திறனுக்கும், அன்பர்களின் ...அழகிய தேரிலே அமர்ந்து அன்பர்களுக்கு அருள்புரிய எழுந்தருளிவரும் அன்னையின் கண்கொள்ளாக் ...

...நித்திய விழாக்களின் உச்ச விழாவாக இயங்கும் தேர்த்திருவிழா [பிரமோற்சவம்] இறைவனின் ஐந் ...ங்கு அழித்தல் என்பது ஆன்மாவைப் பந்தித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களின் ...ஆனந்தப் பரம் பொருளாகிய இறைவனை அடைவதற்கான வாய்ப்பினைத் தேர்த் திருவிழா அளிக்கும். ...யை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை மார்க்கங்கள் என்பர்.

...மலத்திலே வீற்றிருப்பதுபோன்று தேரின் பீடத்திலும் வீற்றிருக்கின்றான். சறுக்குக்கட்டை போட்டுத் ... இறைவனை அடையும் மார்க்கத்தைச் சீராக்க வேண்டும் என்பர். இந்துசமய வாழ்வின் உயர்ந்த ...நெறியினையும் தேர் காட்டுகின்றது. கோயிலைப் போலவே தேரினையும் மனித உடம்பாக உருவகித்து ...ள்ளனர்.

பேராசிரியர்வி. சிவசாமி.

**அம்பாள் மரவேலை தொழிலகம்**
இறுபிட்டி றோட், புங்குடுதீவு-4, உரிமையாளர்: க.லோகநாதன்.

**சுதா களஞ்சியம்**
பிரதான வீதி, பெருங்காடு புங்குடுதீவு-1.

**அம்பாள் களஞ்சியம்**
பிரதான வீதி, பெருங்காடு ,புங்குடுதீவு-1.

**விஜி குளிர் அகம்**
பிரதான வீதி, பெருங்காடு ,புங்குடுதீவு-1.

**பரமேஸ்வரன் உணவகம்**
குறிகாட்டுவான்,புங்குடுதீவு-3.

**மதுசன் உணவகம்**
குறிகாட்டுவான்,புங்குடுதீவு-3.

**மூர்த்தி ஸ்ரோர்ஸ்**
இறுபிட்டி றோட், புங்குடுதீவு-4.

**கீதா சுவையகம்**
பிரதான வீதி, மாரியம்மன் சந்தி, புங்குடுதீவு-1.

**நேசன் புடைவையகம்**
பிரதான வீதி, மாவடி, புங்குடுதீவு-1.

**ஏஸ்.ரி. சிங்கம் ஸ்ரோர் அன் கிருதி றெஸ்ரோறன்ஸ்**
பிரதான வீதி, சந்தையடி, புங்குடுதீவு-2.

**சித்தி விநாயகர் களஞ்சியம்**
66, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சுதா ஸ்ரோர்**
குறிகாட்டுவான், புங்குடுதீவு-3

**கஜமுகா ஸ்ரோர்**
75 மார்கற் யாழ்ப்பாணம்.

**கபிலா காலணியகம்**
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நுபானாஸ் ஜூவல்லறி** Nubanas jewellery
தங்கப்பவுண் நகை வியாபாரம். இல.27 கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
0213201307

**பிரணகா நகைத்தொழிலகம்**
உரிமையாளர்: சுந்தரம் பத்மநாதன், 68/C கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (ஊர்காவற்றுறை).

**ஆஞ்சநேயர் ஸ்ரோர்ஸ்**
இறுபிட்டி றோட், புங்குடுதீவு-1.

**கார்த்திகேயன் குளிர்பானம்**
குறிகாட்டுவான், புங்குடுதீவு-3.

தேர் வெள்ளோட்டம்
முற்பகல் 10.30-11.45 வரை
பக்க அமைப்பு:
புங்கையூர் நவம்
www.punkuduthivu4kalikaambal.com.
T.P: 0213205578

**மைதிலி உணவகம்**
குறிகாட்டுவான், புங்குடுதீவு-3.

**சிற்றி ஹாட்வெயர் அன்ஸ் ஸ்ரோர்ஸ்**
பிரபல கட்டடப் பொருள் விற்பனையகம்.
55/57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வீனஸ் மரக்காலை**
சாவகச்சேரி.

**க.சே. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
ஆயுர்வேத மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரிய கடை,யாழ்ப்பாணம்.
021 222 2912

**ஈசன் களஞ்சியம்**
ESAN KALANCHYAM
134,K.K.S Road,jaffna.
T.P: 0212224168

...யகம்
...e
...350

**சிறிசக்தி வர்த்தக நிலையம்**
310 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**Ark Enterprises**
No:150, 152 Stanley Road, Jaffna..
Tel: 021 222 2052 Tel/Fax:021 222 4021
E- mail: arkjaffn@sltet.lk

...யர்

**பட்டாபி படமாடம்**
64, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**மயூரா டிஸ்ரிபியூட்டர்**
25, நியூ மாக்கற் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
05 ஜூலை 2011 செவ்வாய்க்கிழமை

# குடாநாட்டு மக்களின் தேவை ரி.வி. பூட்டிய பஸ் சேவை அல்ல!



தனியார் சிற்றூர்தி ஊழியர்களோடு தாமும் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிருபித்து வருகின்றனர் இலங்கை போக்குவரத்துச் சபையினர்.

அதற்கு வலுச்சேர்ப்பது போல் கடந்த 2 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து 750 பஸ் புறப்படத் தயாரானது. பஸ் முழுவதும் சனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. தற்போது பிற்பகல் நேர பஸ்கள் கூடிய நேர இடைவெளியில் தான் சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் பஸ்ஸில் சனக்கூட்டம் நிரம்பிவழிந்தது. ஏறிய எல்லோரையும் ''பின் கதவால் ஏறுங்கோ'' என்று சாரதியும் ''நடுவில் இடம் கிடக்கிறது மேலே ஏறுங்கோ'' என்று நடத்துநரும் கண்டிப்பான உத்தரவைப் பயணிகள் மீது திணித்துக் கொண்டிருந்தனர்.

நடத்துநரின் கண்டிப்பான உத்தரவை சிரமேற்கொண்டு பஸ்ஸின் நடுப் பகுதிக்குச் சென்று தம் தலைவிதியை நினைத்தபடி நெருக்கத்தின் மத்தியிலும் பயணத்தை மேற்கொண்டனர். திடீரென போதி மரத்துக்குக் கீழ் இருந்த புத்தபெருமானைப்போல் நடத்துநருக்கு ஞானம் வந்துவிட்டது.

மளமளவென பஸ்ஸின் நடுப் பகுதிக்கு வந்தார். அங்கிருந்த பெண்மணியிடம் ''பிள்ளை ரிக்கெட் எடுத்தாச்சோ?'' என்று வினவினார். அவரும் ''நீங்கள் அவசரமாக அங்காலை போகச் சொன்னதால் எடுக்கமுடியவில்லை'' எனக்கூறி காசை நடத்துநரிடம் நீட்டினார்.

நடத்துநருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. அவரைத் திட்டத்தொடங்கினார். அந்தப் பெண்ணும் என்ன செய்வது? நடத்துநரின் வாய் வீரங்களை தம் காதில் வாங்கி அழுதபடி தன் தலைவிதியை நினைத்தபடி பயணத்தைத் தொடர்ந்தார்.

சிலவேளைகளில் அரச ஊழியர்களில் அனேகர் பொதுமக்களின் வரிப் பணத்தில்தான் சீவியம் நடத்துகின்றோம் என்பதை மறந்து விடுகின்றனர்.

போதாக்குறைக்கு குறிப்பிட்ட இந்தப் பேருந்து 7.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பயணத்தை மேற்கொள்ள வேண்டியது யாரோ ஒருவரின் வருகைக்காக 10 நிமிடம்வரை யாழ் பஸ் நிலைய வாயில் பகுதியில் காத்திருந்தது.

எல்லோரையும் அள்ளி அடைந்த பின் தன் அலுவல் முடிந்தது எண்ணி 7.40 மணிக்கு பஸ் நிலையப் பகுதியில் இருந்து பஸ் புறப்பட்டது. இதில் மற்றொரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் நேரக்கணிப்பாளர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரும் இந்த நேரத்தில் குட்டித் தூக்கம் போட்டுவிடுகிறார்களோ? இவ்வாறான வலுவான சந்தேகங்களும் தவிர்க்க முடியாமல் பொதுமக்களின் மனதில் ஏற்படுவது இயல்புதான்.

போதாக்குறைக்கு இன்றைய சூழ்நிலையில் பஸ்களின் ஒழுங்கற்ற தன்மை பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதாவது கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் 5 மணி தொடக்கம் பேருந்து நிலையத்தில் பஸ்ஸின் வருகைக்காக வழிமீது விழி வைத்து காத்திருந்தார்கள். 5.35 மணிக்கு ஒரு பஸ் வந்தது. அதன் இலக்கம் 750 என்று இருந்தது. எல்லோரும் ஏறி உட்கார்ந்து விட்டார்கள். திடீரென பஸ் முன்நோக்கி நகர்ந்து நின்றது. பஸ் இலக்கம் 751 ஆக மாற்றம் அடைந்தது. 750 என்று நம்பி ஏறி இருந்தவர்கள் ஏமாற்றத்துடன் இறங்கி 750 பஸ்ஸின் வருகைக்காக காத்திருந்தனர்.

5.55 மணிக்கு ஒரு பஸ் வந்தது. அதுவே பின்னர் 6.30 மணிக்கு பஸ் நிலையத்திலிருந்து தன் பயணத்தை மேற்கொண்டது.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கியும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கியும் பயணத்தை மேற்கொள்ளும் பேருந்துகள் ஒழுங்கற்ற தன்மையைப் பேணி வருகின்றன.

நாங்கள் நினைத்ததை - விரும்பியதைத்தான் செய்வோம். எவரும் எம்மைத் தட்டிக் கேட்கமுடியாது என்றவாறு இ.போ.ச. நிர்வாகத்தினர் நடந்து கொள்கின்றனர்.

ஆனால் கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசிய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர், நாங்கள் இங்கிருந்து கொழும்புக்கு தொலைக்காட்சி பூட்டிய பஸ்ஸை பயணத்தில் ஈடுபடுத்துகின்றோம் என்ற சாரப்பட அறிக்கை விட்டிருந்தார். இவர்களின் இக்கதை ''கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன'' கதையாக இருக்கின்றது.

ஹரிஸ்

தற்போது போரால் நொந்துபோய் இயல்பு வாழ்வுக்குத் திரும்பிவரும் எமது மக்களுக்கான இன்றைய தேவை தெய்வேந்திரமுனைக்கான தொலைக்காட்சி பூட்டிய பஸ் அல்ல. குடாநாட்டு உள்ளூர் போக்குவரத்தில் சீரான நிலையே. எனவே, தற்போதுள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி சிறப்பான பஸ் சேவை பொதுமக்களுக்குக் கிடைக்க ஆவன செய்யுமோ இலங்கைப் போக்குவரத்துச் சபை. அல்லது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்தானா?

## திருத்தப்படாத வீதியால் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வல்வெட்டித்துறை கம்பர்மலை வித்தியாலயத்துக்குச் செல்லும் மாத்திரா வளவு வீதி, நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருப்பதால் பாடசாலை மாணவர்கள் உட்பட வீதியால் பயணம் செய்யும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குப் பல தடவைகள் முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை.

இதனால் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ள இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள் பயணம் செய்ய முடியாமல் சுற்றுப் பாதை [illegible] [illegible]ள்ளதாகவும் தெரி விக்கப் பட்டுள்ளது.(ம-313)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசதுரை நாகேஸ்வரி



திருநெல்வேலி பத்திர காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை நாகேஸ்வரி (02.07.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வ.இராசதுரை (அராலி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அகல்யா (ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி), சகுந்தலா (கனடா), ஜீவகாந்தன் (கனடா) காலஞ்சென்ற ரகுபதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரதேவா(மின் இணைப்பாளர்) தளையசிங்கம் (கனடா), உதயசாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் வைரமுத்து(லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாக்கியத்தின் பெறாமகளும் கிருஷ்ணபிள்ளை, கனகம்மா, நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், பவதாங்கினி, இளங்கீதன், சுபிட்ஷா, பைரவி, கோகிலாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (சி/1362) (28-19-22)

தகவல்:
வ.இராசதுரை(கணவர்)
மு.சந்திரதேவா(மருமகன்)

## கண்ணீர் அஞ்சலி



*'நீங்கள் இருந்தபோது உங்கள் பாசம் தெரியவில்லை''*
*''நீங்கள் மறைந்தபோது உங்கள் பாசம் தெரிகிறது''*

திருமதி
### இராசதுரை நாகேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*காளி கோயிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாய்ப்பாணம்.* (5468) (28-19-22)

சு.கமலசோதி குடும்பம்
(சோதி)

## ஓராண்டு நினைவஞ்சலி

தவப்பேறு 05 - 10 - 1938



சிவப்பேறு 15 - 07 - 2010

### அமரர் அம்பலப்பிள்ளை இலங்கைநாயகம் J.P

(செல்லக்குட்டி, கிளானை கொல்லங்கலட்டி)

திதி: ஆனி பூர்வபக்க பஞ்சமி

அன்பு மொழி பேசி ஆதரவாய் எமக்கு இருந்த நீர்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றபோதும்
ஆறவில்லை எம் துயரம்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டானாலும்
நீர் எம் நினைவில் நீங்காதிருப்பீர்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (5469) (28-19-22)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருமாயின் தெரிவுக்குழு வரவேற்கத்தக்க ஒன்றே

## இது இராதாகிருஷ்ணன் எம்.பியின் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 5

இழுத்தடிப்புச் செய்யாமல் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை இலக்காகக் கொண்டு செயற்படுமானால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு வரவேற்கத்தக்கது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அரசின் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றில் சகல கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்ற இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினை தொடர்பாக நீண்டகாலமாக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு முறையிலும் முயற்சித்துப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகிறது. இம்முறையாவது இனப்பிரச்சினைக்குரிய தீர்வு எட்டுமா? எனப் பார்ப்போம்.

எனவே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க முடியும் என்ற நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் கட்டாயமாக இக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இணைந்து உருவாகும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு காலம் கடத்தாத வகையில் செயற்படவேண்டியதும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை விரைவில் எட்ட ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டியதும் பாதிக்கப்பட்ட இனங்களுக்கு நிவாரணமாக அமையவேண்டும் - என்றார். (ச)

# மண் அகழ்வைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மாவட்ட அரச அதிபரின் பணிப்புரைக்கமைய பொலிஸார் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.இதேவேளை, அரசடித்தீவுப் பகுதியில் சட்ட விரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.பி.ஹேரத் தெரிவித்தார். (ச-21)

## எப்படி பயணிப்பது......



மட்டக்களப்பு, வவுணதீவு, ஆயித்தியமலை வீதி 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

# பலகல தமிழ் வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது

தியத்தலாவை, ஜூலை 5

பண்டாரவளை, பலகல தமிழ் வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பண்டாரவளை, வியங்காவெல, பலகல பிரிவு மலையிலுள்ள கற்பாறை ஒன்று அண்மையில் சரிவுக்குள்ளாகி பெரிய கல்லொன்று இந்தப் பிரதேசத்தில் விழுந்துள்ளதால் கல்வி நடவடிக்கையைத் தொடர முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தமலை தொடர்ந்தும் சரிவுக்குள்ளாகி பாடசாலை முழுமையாக சேதமாகக் கூடிய வாய்ப்பு உள்ளது என்றும் இப்பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதையடுத்து இந்தப் பாடசாலையை மூடிவிட நிர்வாகத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு தற்காலிக கொட்டகை ஒன்றை அமைத்துக் கொடுக்க தோட்ட நிர்வாகம் முன் வந்துள்ளன. இந்தப் பாடசாலைக்கு உகந்த காணியைப் பெற்றுக் கொடுத்து புதிய கட்டடத்தை நிர்மாணிக்க ஊவா மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வரட்சியால் வேலைநாள்கள் குறைப்பு; தோட்டத் தொழிலாளர்கள் அசௌகரியம்

தெனியாய, ஜூலை 5

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக தெனியாயப் பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.தோட்டங்களில் தேயிலைச் செடிகள் கருகிய நிலையில் காணப்படுவதால் கொழுந்துகளைப் பறிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. தேயிலைச் செடிகள் நீர் இல்லாது கருகும் தறுவாயில் உள்ளன.

இதன் காரணமாக, தொழிலாளர்களின் வேலை நாள்களை தோட்ட நிர்வாகங்கள் குறைத்துள்ளன. இதன் நிமித்தம் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்தநிலை மேலும் தொடருமாயின் வரட்சி நிவாரணம் கொடுக்கும் நிலை தோன்றும் என இந்தப்பகுதி தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# புற்றுநோயின் உருவாக்கம்

## புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 5


**வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை "(TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.**

(நேற்றைய தொடர்ச்சி)

புற்றுநோயை உருவாக்கும் காரணிகள் எமது சாதாரண உடற் கலங்களை உடனடியாகப் புற்றுநோய்க் கலங்களாக மாற்றமடையச் செய்வதில்லை.


புற்றுநோயானது பல படிமுறை மாற்றங்களூடாகவே (Multi Step Process) ஏற்படுகின்றது. எமது உடற் கலங்கள் புற்றுநோயாக மாற்றமடைவது நாம் அரவணைக்கும் பாதகமான காரணிகள் மற்றும் பாதுகாப்பான காரணிகளின் அளவுத் தன்மையிலேயே தங்கியுள்ளது.

படம் 1 இல் காட்டப்பட்டவாறு




நாம் பாதகமான காரணிகளை அதிகமாக அரவணைப்போமாயின் சமநிலை வலப்பக்கமாக வலுவடைந்து ஈற்றில் புற்றுநோய் உருவாக்கத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறானபல படிகளூடானபுற்றுநோய் உருவாக்கத்தை கல அளவில் பார்ப்போமானால் (படம்- 2)




எமது சாதாரண உடல்கலங்கள், குறிப்பாக உடல் மேலணிக்கலங்கள், இரசாயனங்கள், அணுக்கதிர்த் தாக்கம் மற்றும் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகையில் பல படிகளூடாக புற்றுநோயின் முற்றிய நிலையை அடைகின்றது.

சாதாரண உடற்கலங்கள் முதலில் புற்றுநோயின் ஆரம்பக் கல நிலைக்கு (Initiated Cells) மாற்றமடைந்து பின்னர் புற்றுநோய் முன்னிலைக் கலங்கள், புற்றுநோய்க் கட்டி போன்ற நிலைகளூடாக ஈற்றில் புற்றுநோய்க்கலங்கள் வேறு உறுப்புகளுக்கு (ஈரல், மூளை, என்பு) பரவலடைந்த நிலையை அடைகின்றது.

இவ்வாறான பல படிநிலை மாற்றங்கள் குடல்புற்றுநோயின் உருவாக்கத்தில் மிகவும் தெளிவாகக் காட்டப்படுகின்றது. (படம்-3)




பாதகமான காரணிகள் தொடர்ச்சியாக எமது உடற்கலங்களுடன் தொடுகையில் இருப்பின் இப்படிமுறை மாற்றம் வேகமாக நடைபெறும். இவ்வாறான மாற்றங்களின் போது எமது உடற்கலங்களில் உள்ள நிற மூர்த்தங்கள் (DNA) முதலில் உடைவுகள் மற்றும் மாற்றங்களுக்குள்ளாகின்றன. சிறிய மாற்றங்கள் எமது உடலில் உள்ள நொதியங்கள் மற்றும் பாதுகாக்கும் காரணிகளினால் மீளவும் சரி செய்யப்படுகின்றன. அவற்றையும் மீறி மாற்றமடையும் கலங்கள் எமது உடல் நிர்ப்பீடன சக்தியால் அழிவடையச் செய்யப்படுகின்றன.

எனவே கூட்டுமொத்த விளைவு காரணமாக குறிப்பாக எமது உடலில் உள்ள பாதுகாக்கும் காரணிகள், நொதியங்கள் மற்றும் நிர்ப்பீடன சக்தி குறைவாக இருக்கையில் புற்றுநோய் உருவாக்கம் ஏற்படுவது நிச்சயமாகின்றது. இவ்வாறு உருவாகும் புற்றுநோய்க்கலங்கள் அவற்றின் அருகே உள்ள இழையங்களை ஊடுருவுதல், அழுத்தம் கொடுத்தல் மற்றும் அவற்றுடன் உணவு, ஒட்சிசன் போன்றவற்றுக்குப் போட்டியிட்டு ஓர் ஒட்டுண்ணி போலச் செயற்படும். புற்றுநோயால் பீடிக்கப்பட்ட அல்லது மாற்றமடைந்த அங்கம்/ உறுப்பு அதன் சாதாரண செயலை செய்ய முடியாத நிலை ஏற்படும்.

இது மட்டுமல்லாது புற்றுநோய்க்கலங்கள் வேறு அங்கங்களுக்குச் செல்லுமிடத்து அந்த அங்கங்களிலும் பெருக்கமடைந்து அவற்றின் செயற்பாட்டையும் பாதிப்புறச் செய்யும். இவ்வாறான நிகழ்வுகளூடாக எமது உடலில் பல வகையான அறிகுறிகள் ஏற்படுகின் றன.

புற்றுநோய் வைத்திய நிபுணர்
என்.ஜெயக்குமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். உங்களின் யோசனைக்கு மற்றவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கலாம். நண்பர்களால் சிறு ஆதாயம் ஒன்றைப் பெறலாம். கலைஞர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். எங்காவது வெளியில் செல்லும் போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள்.

**இடபம்:**
சந்தோஷமான செய்திகளால் மனதில் உற்சாகம் குடிகொள்ளும். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். அதிக நேரம் காத்திருக்க நேரிடும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிந்து விடலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கடந்த காலத்தில் உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் இப்போது பதில் உதவி செய்யலாம்.

**மிதுனம்:**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணச் செலவுகளைச் சந்திக்கலாம். உடல் நலத்தில் கவனம் அவசியம். உடன்பிறந்தவர்களுடன் சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். பிள்ளைகளின் சுப காரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கனவுகளால் குழப்பம் ஏற்படலாம்.

**கடகம்:**
நண்பர்கள் வட்டம் விரிவடையும். சில பிரச்சினைகள் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். தொழில் ரீதியாக கோபம், பதற்றம் உண்டாகலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். பெண்களால் செலவுகளைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வாகனங்கள் வழியில் செலவு ஏற்படலாம். ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். யாருக்கும் பிணை கொடுக்க வேண்டாம்.

**கன்னி:**
சோர்வுகளை விலக்கி சுறுசுறுப்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். கூட்டுத் தொழிலில் சுமூகமான நிலைமை காணப்படும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். செலவைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**துலாம்:**
எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். சில வேலைகளை காத்திருந்து முடிக்க நேரிடலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்த வேலையையும் செய்ய நினைப்பீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உறவினர் மீதான பாசம் கூடும்.

**விருச்சிகம்:**
உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். பல நாள்களாகப் பார்க்காத பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் திடீர் விடுப்பு எடுக்க நேரிடலாம். ஆலய வழிபாடு மூலம் அமைதி பெறுவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**தனுசு:**
சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். வெறுப்பேற்றும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். திட்டமிட்டபடி எந்த வேலையும் முடியாமல் இழுத்தடிக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலை நெருக் கடிகளுக்கு ஆள்படலாம்.

**மகரம்:**
தொழில் ரீதியான விடயங்களில் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடந்து சாதனை படைப்பீர்கள். உங்களுக்காக நண்பர்கள் சிலர் செலவு செய்யலாம். சண்டை போட்ட உறவினர் ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். சக ஊழியர்களுடன் சேர்ந்து கூட்டாக சில காரியங்களைச் செய்யலாம். மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும்.

**கும்பம்:**
பெரிய மனிதர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். பிள்ளைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். பார்க்க நினைத்த ஒருவரை பாதையில் சந்திக்க லாம். புதியவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம்.

**மீனம்:**
சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் நாள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். உடன்பிறப்புகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உங்களுக்கு விரோதமாகச் செயற்படும் ஒருவரை அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

# இலங்கையை இந்தியா எப்படிக் காப்பாற்றும்...?

கொழும்பில் இருந்து வெளியாகும் Daily Mirror ஆங்கில நாளேட்டில் அதன் பத்தி எழுத்தாளர்களில் ஒருவரான Harim Peiris எழுதியுள்ள ஆக்கத்தின் தமிழாக்கம்.

நிலைமையை நன்கு அவதானிக்கும் சாதாரண நபர் ஒருவர் கூட ஆச்சரியமடையும் அளவுக்கு இலங்கையில் இடம்பெற்றது எதுவோ அதற்குப் பொறுப்புச் சொல்லும் செயன்முறைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற அனைத்துலக வாதம் கடந்த நாள்களில் அதிகரித்திருந்தது. தற்போது இந்த அனைத்துலக அழைப்பு ஓர் உச்ச நிலையை அடைந்திருக்கிறது.

இலங்கையில் போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அனைத்துலக சட்டங்கள் மீறப்பட்ட அனைத்துச் சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற இந்தியர்கள் தொடக்கம் ஐ.நா. கட்டமைப்பு வரைக்கும், அமெரிக்கா முதல் ஐரோப்பிய ஒன்றியம் வரைக்கும், பொது நலவாய நாடுகளின் செயலகம் தொடக்கம் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சக அலுவலகம் வரைக்கும்,

தமிழ்நாடு முதல்வர் முதல் பிரிட்டன் எதிர்க் கட்சியின் வெளிவிவகாரச் செயலர் வரைக்குமான அனைத்துலக தரப்புகளின் அழைப்புகள் என்றுமில்லாதவாறு வலுப்பெற்று வருகின்றன.

இது தவிர, பொதுவான பொறுப்புகள் என்ற கோட்பாட்டின் கீழ் அமெரிக்காவிலுள்ள மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் அதிபர் ராஜபக்ஷவுக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஜூன் மாதத்தின் முற்பகுதியில் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரின் போது இலங்கை தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்வதற்கு குறுகிய இடைவெளியே இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது. மனித உரிமைச் சபையின் செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது வல்லுநர்கள் குழுவின் அறிக்கையை அடியொற்றிய தொடர் நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் முடுக்கி விடக்கூடும்.

இதுபோன்ற சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதன் ஊடாக இந்தியா கொழும்புக்கு அப்பழுக்கற்ற பாதுகாப்பை வழங்கத் தவறுமிடத்து தற்போது மதில்மேல் பூனையாக நிற்பவர்களும் இந்தியாவின் செல்வாக்குப் பெற்றவர்களும் இலங்கைக்கு எதிராகவே திரும்புவர் என்பதில் சந்தேகமில்லை. இடம்பெறக்கூடிய வாக் களிப்பிலிருந்து இந்தியா விலகியிருந்தாலும் நிலைமைகள் கொழும்புக்குப் பாதகமானவையாகவே இருக்கும்.

செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடரில் இந்தியா இலங்கையைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனில் 13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவுடனான உறவைப் பலப்படுத்துவதுதான் ஒரே வழி. செப்ரெம்பரில் இந்தியா இலங்கையை எவ்வாறு காப்பாற்றப் போகிறது என்பது சுவாரசியமான ஒன்றாகவே இருக்கப் போகிறது.

உலகம் உண்மையிலேயே கடந்தகாலத்தைப் பற்றியல்ல எதிர்காலத்தைப் பற்றியே அதிகம் கவலையடைகிறது என இந்தப் பத்தியாளர் நீண்ட பல காலமாகவே வாதிட்டுவருகிறார்.

உண்மையில் இது எங்களது போரன்று. விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ததன் ஊடாகவும் ஏனைய பல வழிகளிலும் போரின் போது உலகம் எங்களுக்குத் துணையாக நின்றது. தற்போது அமைதிக்காலம். குறித்த சில கரிசனைகளுடனும் சந்தேகத்துடனும் தற்போதைய நிலைமையை உலகம் பார்க்கிறது. இன்றைய இந்த அமைதிக் காலத்தின் தன்மை இதுதான்.

படைத்துறை அணிவகுப்புகளுடன் போர் முடிவுக்கு வந்த இரண்டாவது ஆண்டு நிறைவை கொண்டாடிக் கொண்டிருக்கும்போதும் இடம் பெற்றுவரும் போருக்குப் பின்னான இன நல்லிணக்க முனைப்புகள் கேள்விக்குள்ளாகின்றன. போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது.

போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தபோதும் இங்கு அவசர காலச் சட்டம் இருக்கவில்லை என்பதையும் பின்னர் போர் மீளவும் மூண்டபோது நாங்கள் அதில் வெற்றிபெற்றதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் இன்னமும் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. மீள்குடியேற்றத் திட்டங்கள் மந்த கதியிலேயே தொடர்வதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தியாவின் 50,000 வீடுகளை அமைக்கும் திட்டமும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அரசாக இருக்கலாம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாக இருக்கலாம் இன்னமும் மக்களுக்கான வீடுகளைக் கட்டிமுடிக்கவில்லை.

வளமும் வலுவுமுள்ள மீள்குடியேறிய மக்களே தங்களது வீடுகளைத் திருத்தியிருக்கிறார்கள் அல்லது புதிதாக நிர்மாணித்திருக்கிறார்கள். ஆனால் எத்தகைய வளமும் இல்லாத பெரும்பாலான மக்கள் தொடர்ந்தும் கூரைவிரிப்புகளின் கீழும் தற்காலிக கொட்டில்களிலுமே வாழ்ந்து வருவதாக வன்னித் தகவல்கள் கூறுகின்றன.

இடம்பெற்ற போரால் பெரிதும் சிதைந்துபோன நிலையில் இருக்கும் மீன் பிடி மற்றும் விவசாயத் தேவைகளுக்கான வன்னியின் கிராமிய உட்கட்டமைப்புகள் மீள்குடியேறிய மக்களது வாழ்வாதார மேம்பாட்டுக்குத் துணை நிற்பதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட மற்றும் போர் முடிவுக்கு வந்துவிட்ட இந்த நிலையில் நாட்டின் சமூகங்களைப் பொறுத்த வரையில் தேசிய இன நல்லிணக்கம் அவசியமான ஒன்று.

தமிழர்களின் அரசியல் சக்திகள் பிளவுபட்டும் பிரிந்துபோயும் உள்ளன என வாதிடப்படுகிறது. கட்சிகள் என்ற அடிப்படையில் தமிழ்க்கட்சிகள் பிரிந்திருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தரப்பில் அதிக ஆசனங்களுடன் இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி. போன்ற இரண்டு தமிழ்க் கட்சிகளே நாடாளுமன்றில் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன.

அரசுடன் இணைந்து செயற்படும் டக்ளஸ் கூட 13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் நடை முறைப் படுத்தப்படவேண்டும் என்றே விரும்புகிறார்.

வட மாகாண சபைத் தேர்தல் இடம்பெற வேண்டும் என்றும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகத் தான் களமிறக்கப்படவேண்டும் என்றும் இவர் விரும்புகிறார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படவேண்டும் என ஈ.பி.டி.பி. அழைப்பு விடுத்திருக்கிறது.

13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பது நாட்டின் அடிப்படைச் சட்டத்தில் ஓர் அங்கமாக ஏலவே இருந்து வருவதோடு அது நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப் படுகிறது. வடக்கில் சுதந்திரமான தேர்தல் ஒன்று இடம்பெறுவதுதான் தற்போது பாக்கியாக உள்ளது.


*[நன்றி: புதினப்பலகை]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேனன், முகர்ஜியைப் பாவித்து

# 'மெரிக்கோ றவுண்ட்' காட்டும் மஹிந்தர்

**கடந்த 26.06.2011 ஆம் திகதி 'சண்டேலீடர்' பத்திரிகையில் வெளியாகிய கட்டுரை ஒன்றின் தொகுப்பு.**



இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்பு செயலர் பிரதீப்குமார் ஆகியோர் அடங்கிய குழுவின் அண்மைக்கால இலங்கை விஜயம் தொடர்பான தகவல்கள் இரகசியமாக, எவரும் புரிந்து கொள்ள முடியாதவாறு முடிவடைந்தது.

பேச்சு வெற்றியளித்தனவோ, இல்லையோ, ஆனால் இவர்கள் வெளியேறியது தான் தாமதம், காணிகள் மற்றும் பொலிஸுக்கான அதிகாரங்கள் மாகாண சபைக்குக் கொடுக்க முடியாது என்ற பலமான அறிக்கை விட்டார் ஜனாதிபதி மஹிந்த. இது உள்ளூர் தகவல்களுக்காகவே வெளியிடப்பட்டது என்ற உண்மை தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளது.

மஹிந்தவை சந்திக்க மூவரணி அலரிமாளி[illegible]க்குச் சென்றபோது வழமையான ராஜீக அந்தஸ்து முறைகள் புறந்தள்ளப்பட்டன. மற்றைய இருவரும் கீழ் மாடியில் காத்திருக்க 45 நிமிடங்களுக்கு அதிகமாக மேனனும், மஹிந்தரும் ஒருவரோடு ஒருவர் என்ற வகையில் உரையாடினர். கீழே காத்திருந்த இருவரது நிலையும் மிகவும் பரிதாபம்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி மஹிந்த விவரித்தார். எதிர்வரும் செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் சபை கூட்டத்தில் யுத்தக் குற்றச்சாட்டுகள் பற்றி ஆராயப்படுமாயின் இந்தியாவின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதையும் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வந்தாலும், இந்திய மத்திய அரசு சரியான தருணத்தில் தனக்கு உதவுமென அமைச்சரவை சகாக்களிடம் மஹிந்த கூறினார். செப்ரெம்பரில் இலங்கைக்குப் பாதகமான தீர்மானம் வருமாயின் இந்தியா தன்னாலான அனைத்து வழிகளிலும் எதிர்க்குமென மஹிந்த உறுதிபடக் கூறினார்.

**ஷாருமி**

ர்ராஜபக்ஷவுடன் மேனன் நடத்திய பேச்சு இரு நாடுகளுக்கிடையே ஒரு ராஜீக குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை விடயத்தில் தமிழ் நாடும், இந்திய மத்திய அரசும் வெவ்வேறு நிலைப்பாட்டில் இருக்கும்போது மஹிந்தவுக்கு மேனன் இவ்வாறான சான்றிதழை வழங்க[illegible]மையே குழப்ப நிலைக்குக் காரணமாகும்.

இதேநேரத்தில் இந்திய ஊடகங்களின் தகவல்கள் வெவ்வேறு விதமாக உள்ளன. மூவரணி மிகவும் கடுமையான நிலை எடுத்ததாகவும், இலங்கைக்குப் போதியளவு அறிவுரை கூறியிருப்பதாகவும் தெரிவித்துள்ளன.

இந்திய ஊடகங்கள் என்னதான் கூறினாலும் இந்தியாவுடனான நிலை எல்லாமே நன்றாக இருப்பதாக மஹிந்த உறுதி கூறினார். மஹிந்தாவிடம் வினாவெழுப்பியவர்களுக்கு... இல்லை... இல்லை நீங்கள் நினைப்பது போல இந்தியா இல்லை என்றதோடு, எங்களோடு எந்த முரண் பாட்டுக்கும் வரவிரும்பவில்லை எந்தப் பிரச்சி னையும் இல்லையென உறுதிப்படத் தெரிவித்தார் மஹிந்த ராஜபக்ஷ.

### 'லூத்ரா' வின் செல்வாக்கு

இந்தியாவை வழிக்குக் கொண்டுவர சிவ்சங்கர் மேனனை ஒரு கையிலும், மறுகையில் வேறொரு பெண்ணின் பெயரும் பேசப்பட்டன.

ஜனாதிபதி இந்தியாவின் சமன்பாடு பற்றி விவரிக்கும் போது இந்தப் பெண்ணின் பெயரும் பலமாகப் பிரஸ்தாபிக்கப்படும். இந்தப் பெண் பெயர் லூத்ரா (LUTHRA). மக்கள் தொடர்புகளுக்கான கம்பனியில் இவர் தொழில் பார்ப்பதாகவும், இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் நண்பரெனவும் தெரியவரு கிறது. இவருக்கு இலங்கை அரசியலில் நெருங்கிய தொடர்புள்ளதாகவும் இந்திய அரசியலில் பலம் பொருந்தியவராகவும் இலங்கை அமைச்சர்கள் விமர்சித்துள்ளார்கள்.

பிரணாப் இலங்கையில் யுத்தம் தொடங்கும் போது இந்திய வெளியுறவு அமைச்சராக இருந்தது மாத்திரமன்றி தற்போது இலங்கை வளர்ச்சி பற்றிக் கண்வைத்துள்ளார். இலங்கை அரசும் லூத்ராவினூடாகவே முகர்ஜி யின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. யுத்தம் நடந்த காலத்திலும், முடிந்த பின்பும் இந்தியாவின் உதவியை முகர்ஜியின் ஊடாகவே பெற்றுக் கொண்டார்கள்.

இந்திய மூவரணி இலங்கையை விட்டு வெளியேறிய குறுகிய நேரத்துக்குள் மஹிந்த மேலுமொரு ஏவுகணையைத் தொடுத்தார். வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க மேலுமொரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க இருப்பதாகக் கூறியது தான் அது.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த விருப்பமின்மையை இது வெளிப்படுத்தியதோடு, பிரச்சினைக்கான தீர்வை ஒத்தி வைப்பதே இதன் நோக்கம் என்பது தெளி வாகிறது. சிவ்சங்கர் மேனனையும் முகர்ஜியையும் [illegible] இந்தியாவுக்கு இலங்கை ''மெரிக்கோ றவுண்ட்'' காட்டுவதாக அரசியல் நோக்காளர்கள் கூறுகிறார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தரும் சீடரும்



ஒருமுறை புத்தர் தனது சீடருடன் சென்று ஒரு வீட்டில் பிச்சை கேட்டார். புத்தரைப் பார்த்து அந்த வீட்டில் இருந்த பெண் மணி, ''சோம்பேறியே கையுங் காலும் நன்றாகத்தானே இருக் கின்றன; உழைத்துச் சாப்பிட உனக்கென்ன கேடு...? என்று திட்டி விரட்டினாள். ஒரு பெண் தனது குருவை இப்படித் திட்டிவிட்டாளே என்று சீடரின் மனம் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தது.

''தயவு செய்து எனக்கு உத்தரவு கொடுங்கள். உங்களைத் திட்டிய அந்தப் பெண்ணுக்குச் சரியான பாடம் புகட்டி விட்டுவருகிறேன்'' என்று சீடன் புத்தரிடம் அனுமதி கேட்டார். புத்தர் ஒன்றும் சொல்லாமல் நடக்கத் தொடங்கினார். பின்னர் தன் கையில் இருந்த கமண் டலத்தை சீடரின் கையில் கொடுத்துவிட்டு சிறிதுநேரம் ஓய்வெடுத்தார்.

மாலை நேரம் ஆனதும் புத்தர் தனது சீடருடன் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார். அப்போது வழியில் சீடரின் கையில் இருந்த கமண்டலத்தைப் பார்த்த புத்தர் ''இது யாருடையது ....? என்று கேட்டார். அதற்கு சீடன் ''சுவாமி இது உங்களுடையது'' என்றார். உடனே புத்தர் அந்த கமண்டலத்தை வாங்கி ஒருமுறை பார்த்துவிட்டு, ''இல்லை..... இதை உனக்கு அப்போதே பரிசாகக் கொடுத்து விட்டேன். அது உன்னுடையது தான்'' என்று திரும்பவும் சீடரிடமே கொடுத்துவிட்டார்.

இரவு வந்தது. புத்தர் சீடரின் கையிலிருந்த அதே கமண்டலத்தை சுட்டிக்காட்டி ''இந்தக் கமண்டலம் யாருடையது...?'' என்று மீண்டும் கேட்டார். இதற்கு சீடர் ''சுவாமி இது என்னுடையது'' என்றார். இதைக் கேட்டதும் புத்தர் சிரித்துக் கொண்டு ''இன்று மாலை உன்னிடம் இதே கேள்வியைக் கேட்டேன். 'இது உங்களுடையது' என்றாய். இப்போதோ 'இது என்னுடையது என்கிறாய். ஒரே கமண்டலம் எப்படி உன்னுடையதாகவும் என்னுடையதாகவும் இருக்க முடியும்? என்று கேட்டார். புத்தரின் கேள்வியில் சற்றே சீடன் தடுமாறினாலும் நிதானமாக இவ்வாறு பதில் கூறினான்.

''சுவாமி கம்ண்டலத்தைத் தாங்கள் எனக்குப் பரிசாகக் கொடுத்து விட்டாதாகச் சொன்னீர்கள். அதை நானும் ஏற்றுக் கொண்டேன். அதனால் கமண்டலம் என்னுடையது என்றேன். ஆனால் முதல் முறை நீங்கள் கமண்டலத்தைக் கொடுத்தபோது அதை நான் என்னுடையதாக எடுத்துக் கொள்ளவில்லை. என்னிடம் நீங்கள் கமண்லடத்தை கொடுத்தீர்கள் என்றாலும் உண்மையில் அது அப்போது உங்களுடையது தான்'' என்றார்.

புன்னகையுடன் புத்தர் சீடனைப் பார்த்துப் பேசினார். ''இதுபோல்தான் அந்தப் பெண் மணி என்னைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளை நான் என்னுடையதாக எண்ணி எடுத்துக் கொள்ளவில்லை. எனவே என்னைப் பார்த்துச் சொல்லப்பட்டிருந்தாலும் அந்த வார்த்தைகள் அந்தப் பெண்மணிக்கே சொந்தம். அதனால் தான் அந்தப் பெண்மணிக்கு பாடம்புகட்டத் தேவையில்லை என் றேன்''. பிறர் உங்களைத் திட்டினால் ஏன் உங்களு டையதாக எடுத்துக் கொள்கிறீர்கள்? இவ்வாறு மற்றவர்களது தவறுக்காகத் தன்னைத் தண்டித்துக்கொள்வதை வெகுகாலத்துக்கு முன்பே புத்தர் நிறத்தி விட்டார். திட்டுகிறார்கள், அது அவர்களின் செயல், தவறு அல்ல. அதில் நான் எங்கே நுழைந்தேன். திட்டட்டும், திட்டாதிருக்கட்டும், மோசமாகத் திட் டட்டும். பலத்தை செலுத்தி திட்டட்டும். திட்டுவதற்கு வந்தான், திட்டிவிட்டான். தனது வேலையை முடித்து விட்டு திரும்பினான். அதில் எனக்கு என்ன சம்பந்தம்.

திட்டுவதற்கு அவனை நான் தூண்டவில்லை. அவனை நான் உற்சாகப்படுத்தவுமில்லை எனக்கு அதில் எந்தத் தொடர்பும் இல்லை. நான் தொடர்பற்றவன். அவனது தவறுக்காக, எனக்கு ஏன் தண்டனை விதித்துக்கொள்ள வேண்டும்? நான் கோபமடைந்தால் அதில் எரியவிடுவது நானே. தீ எனக்குள் எழும். எனது மயிர்க்கால்கள் அனைத்தும் குத்திடும். எனது பிராணன் துடிக்கும். எனது இரத்த அழுத்தமே அதிகரிக்கும். இரவு என்க்கு உறக்கம் வராது. இந்த மனிதன் திட்டிமுடிந்துவிட்டேன் என்று ஆனந்தமாக உறங்குவான். இதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது என்றார். இது தான் புத்தர் காட்டிய வழி.

சுகி.சிவம்

## நெஞ்சை விட்டகலா ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
15.07.1933

மறைவு:
27.06.2009

### அமரர் சுவாமிநாதர் அப்புத்துரை

(முன்னாள் ஒப்பந்தகாரர், சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை)
திதி: பூர்வபக்ஷ பஞ்சமி (05.07.2011)

எங்கள் இல்வாழ்வுக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள்
எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டு ஈராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

வீரவாணி, புத்தூர். (5454)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணகம்
03 . 10 . 1952



விண்ணகம்
23 . 05 . 2011

### திருமதி நித்தியானந்தம் விமலாதேவி

உன் விழிகளில் தூசு விழுந்தாலும்
துடைப்பதற்கு ஒரு மகன் கூட
பக்கத்தில் இல்லையென நினைத்தோ
பாதி வாழ்க்கை முடித்து மீதி வாழ்வைக் காணாது
நீ எம்மையெல்லாம் பரிதவித்து சென்றாயோ
வாடுகிறோம் உன் பிரிவால்
நீ பிரியவில்லை என்றும் எம்மில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்.

எமது குடும்பத் தலைவியின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு, உடன் வந்து உதவியவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (06.07.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும், அன்று நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

(5471)

வத்திராயன் வடக்கு,
தாளையடி

கணவர் மற்றும் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1967 ★ 03 ★ 19

மறைவு
2010 ★ 06 ★ 17

அமரர்
### கணேசமூர்த்தி சசிதரன்

கண்மூடித் திறக்கையிலே ஓராண்டு சென்றதையா
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு வருத்துதையா
இங்கு எங்களைத் தவிக்கவிட்டு எங்கே அப்பா சென்றீர்கள்
பாசமிகு மகனே எம் இதய ஏட்டில் நீ என்றும்
மறையாது வாழ்கின்றாய்.
அன்பான அண்ணாவே காலங்கள் கரைந்தோடி - உங்கள்
உடல் மண்ணோடு மாய்ந்து போனாலும் கலைந்திடுமோ
உங்கள் ஞாபகம் எம் இதயத்தை விட்டு
ஆண்டவனும் எங்களுடன் இங்கு வாழ விட மனமின்றி
அங்கு அழைத்தானோ - அன்பே.
ஆண்டொன்று கழிந்தாலும் - எம்
மனதின் காயம் இன்னும் காயவில்லை
உங்களை எப்பிறப்பில் காண்போம் இனி......

பிரிந்து தவிக்கும்
குடும்பத்தினர்

"பேக்கரி லேன்",
சிறணி,
சண்டிலிப்பாய்.

(5452) (19-2-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற குழு நியமிப்பது காலத்தை இழுத்தடிப்பதற்கே

## ஏழாலையில் சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

அரசு எம்முடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நாடாளுமன்றக் குழு என ஜனாதிபதி அறிவிக்கிறார். இந்தச் செயற்பாடு காலத்தை இழுத்தடிப்பதும் பேச்சைக் குழப்புவதுமேயாகும்.

மேற்க்கண்டவாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குறிப்பிட்டார்:

ஏழாலை உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் வலி.தெற்கு பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் க.பிருந்தாபன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்ததாவது:

அரசு எம்மை அழைத்து தமிழ் மக்களுடைய பிரச்சினை சம்பந்தமாக பேச்சில் ஈடுபடுகின்ற அதேவேளையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வுகாண நாடாளுமன்றக் குழுவொன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்பது பேச்சுவார்த்தையைக் குழப்ப அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். கடந்த காலத்தில் நாடாளுமன்றக் குழுக்கள், வட்ட மேசை மாநாடுகள் சதுர மேசை மாநாடுகள் என எத்தனை வந்து போயின.

அனைத்தும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்குப் பதிலாக காலத்தை இழுத்தடித்து குழப் பியடித்ததே தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. அந்த வகையில் தற்போது ஜனாதிபதி கூறும் நாடாளுமன்றக் குழுவும் கூட பேச்சுவார்த்தையைக் குழப்பவும் இழுத்தடிக்கவுமே தவிர ஒன்றும் நடக்கப் போவதில்லை.

சிங்களக் குடிமகன் ஒருவன் தனது வாக்குகளை சிங்களக் கட்சிக்கே இடுகின்றார். முஸ்லிம் ஒருவன் தனது வாக்குகளை முஸ்லிம் கட்சிக்கே பெருமளவில் போடுகின்றார்.



ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் சிங்களக் கட்சிக்கு வாக்களிக்கும் தன்மை காணப்படகின்றது. சிங்களக் கட்சியில் தமிழர் வேட்பாளராக நின்றாலும் சிங்களவர் வாக்களிப்பதில்லை.

சிங்களக் கட்சியில் வேட்பாளர்களாக நிற்கும் தமிழர்களுக்கு நாம் எவ்வாறு வாக்களிக்க முடியும். இதனையிட்டு எம் மக்கள் சிந்தித்து இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

1958 இல் தமிழர்கள் தமது உரிமைகளுக்காக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்த போதும் 1961 இல் யாழ். கச்சேரி முன் சாத்வீகப் போராட்டமாக சத்தியக் கிரகம் மேற்கொண்ட போதும் சிங்களக் காடையர்கள் தாக்கி எமது தலைவர்களை விரட்டினார்கள்.

அந்த வகையில் ஜனநாயக வழியில் நாம் அளவெட்டியில் நடத்திய கூட்டத்தை இராணுவத்தினர் அடித்து கூட்டத்தைக் கலைத்து பயமுறுத்தியுள்ளார்கள்.

40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களுக்கு மண் அள்ளிப் போட்ட நாங்கள் இன்று அவர்களின் நினைவுநாளைக் கொண்டாட முடியாத நிலையில் இருக்கிறோம்.

ஒரு செய்தியைக் கூட எமது மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்க முடியாத நிலையில் தான் எமது சுதந்திரம் இருக்கின்றது. மிருசுவிலில் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் படையினரின் விசாரணைக்கு உட்பட்டார்கள். இங்கு ஒலிபெருக்கி வெளியில் போடக்கூடாது என்ற நிலைமை காணப்படுகின்றது - என்றார்.

(ஐ-86)

# யாழ்.மாநகர சபையைப் போன்று ஏனைய சபைகளையும் கைப்பற்றுவோம் - பஸில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். மாநகர சபையைக் கைப்பற்றியது போன்று யாழ்ப்பாணம்,. கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதேச சபைகள் அனைத்தையும் கைப்பற்றுவோம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:

நீங்கள் இழந்த உயிரைத் தவிர அனைத்தையும் எமது அரசாங்கம் பெற்றுத்தரும். எமது அரசு உங்களின் எதிர் காலத்துக்காகப் பாடுபடுகின்றது. நீங்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தை ஏனைய பிர தேசங்களை விட வசதி கூடிய அபிவிருத்தியடைந்த மாவட்டமாக மாற்றுவோம்- என்றார்.



பிரதேசத்தை கணினி வசதி கொண்ட நவீன தொழில் நுட்ப மாவட்டமாக அமைத்துக் காட்டுவோம்.

கடந்த மாநகர சபைத் தேர்தலில் வென்றதைப் போல யாழ்ப்பாணம் கிளிநொச்சி என அனைத்துப் பிரதேசங்களிலும் நாம் கைப்பற்றி வெற்றிபெறுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இல்லாத பிரச்சினையை உருவாக்க முயல்கிறது. உயர் பாதுகாப்பு வலய நீக்கல், மீள்குடியேற்றம் என அனைத்து விதமான அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றோம். யாழ். பல்கலைக் கழகத்தில் பெறியியல் பீடம் அமைக்க முழு அளவில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தகவல் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கின்றோம்- என்றார் அவர்.(ஐ-319)

தேர்தல் களம் 2011

# விவசாயத்துறையை மேம்படுத்த அனைவரும் இணைய வேண்டும்

## வலி.தென்மேற்கு பிரதேசசபை வேட்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

பிரதேசங்களில் விவசாயத் துறையை மேம்படுத்த பொது அமைப்புக்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கினால் சிறந்த பயனை அடைய முடியும்.

அத்துடன் புதுப்புது யுக்திகளையும் பயன்படுத்தி விவசாயத்தை வளப்படுத்தி அதிக இலாபத்தைப் பெறமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி தெற்கு பிரதேச சபையின் வேட்பாளர் க.கௌரிகாந்தன்.

நவாலி விவசாயிகளின் சம்மேளனத் தலைவர் தலைமையில் அண்மையில் நவாலிப் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் கலந்துரையாடலில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது நவாலி வடக்கு விவசாய சம்மேளனப் பிரதேசம் நெல் மற்றும் சிறுதானிய உற்பத்தியில் தனித்துவமான பிரதேசமாகும்.

இந்தப் பிரதேசத்தில் விரைவில் பசுமைப் புரட்சியை ஏற்படுத் வேண்டும். இதற்கு விவசாயிகளின் பங்களிப்பு அவசியமாகும்.

அத்துடன் விவசாய முன்னேற்றத்துக்கு கட்டாக்காலி கால் நடைகள் பெரிதும் இடையூறாக இருப்பதாக பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் சிலரால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினைக்குப் பிரதேச செயலகம், பிரதேச சபை, கமநல சேவை நிலையம், பொலிஸ் நிலையம் போன்றன இணைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நவாலிப் பிரதேசம் மிகவும் வளம் மிக்க பிரதேசம் என்பதால் விவசாயிகள் இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி முன்னேற்றமடையலாம். விவசாயத்தின் மூலம் பெறப்படும் இலாபம் விவசாயிகளுக்கு மட்டுமல்லாது அது சார்ந்த பிரதேசத்தையும் முன்னேற்றும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி பிரதேச விவசாயத் துறையை மேம்படுத்த வழி அமைப்போம்- ஏன்றார்.

(ஐ-313-302)

# முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்துடன் ஐ.நாவின் கதவுகள் திறந்துள்ளன

## வட்டக்கச்சியில் மாவை

கிளிநொச்சி, ஜூலை 5

முப்பது வருடகால யுத்தத்தின்போது திறக்கப்படாத ஐ.நாவின் கதவுகள் முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்தின் பின்னர் திறந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி எமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்போம்.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான முதலாவது பிரசாரக் கூட்டம் வட்டக்கச்சிப் பொதுச்சந்தையில் நேற்றுமுன் தினம் மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்தின் போது எமது மக்கள் கணக்கெடுக்க முடியாத வகையில் வகைதொகையின்றி கொல்லப்பட்டனர். அவர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டன.

உலகத்தின் அரசியல் இன்று எம் பக்கம் திரும்பியுள்ளது. இந்தச் சூழலில் தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை மக்கள் சரியான முறையில் எதிர் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.



எம்மை வதைத்துப் பெற்றுக் கொண்ட வரிப் பணத்தின் மூலம் வீதிகளை அபிவிருத்தி செய்து கொண்டு எல்லாவற்றையும் தாமே செய்வதாகத் தம்பட்டம் அடிக்கின்றார்கள். சிலர் இதைவைத்து அரசியல் நடத்துகின்றார்கள்.

இறுதி யுத்தத்தில் எம்மக்கள் கொல்லப்படவில்லையென்று சொன்னவர்கள் இப்போ உங்கள் முன்னால் வாக்குக் கேட்க வருகின்றார்கள். எனவே எது சரி, எது தவறு என்பதை மக்கள் சரியான முறையில் உணர்ந்துகொண்டு செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர் என்றார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-9-06-505)

# உள்ளூராட்சித் தேர்தல் சூடு பிடிக்கும் பிரசாரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்து வருகின்றது.

கட்சிகள் ஒவ்வொன்றும் தமது வேட்பாளர்களை அடையாளப்படுத்தும் வகையில் பரவலாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகள், பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் கட்சிகள் அந்தப் பகுதிகளில் தமது பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டுக் கட்சியான ஈ.பி.டி.பி.ஆகிய இரு கட்சிகளுமே மும்முரமாகப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஐ.தே.க., ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் எதுவும் இன்னமும் பிரசாரத்தில் ஈடுபடவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி.ஆகிய கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தனித்தும் கூட்டாகவும் துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

இதேவேளை - வலி.கிழக்குப் பிரதேச சபை உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசார பணிகளும் சூடு பிடித்துக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் உள்ள வீதிகள் எங்கும் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் இலக்கங்கள், சின்னங்கள் என்பன பொறிக்கப்பட்டுள்ளன.

இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் மக்களைச் சந்தித்து பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

(ம-236-86-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இன்னமும் சுமார் 2 லட்சம் மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை என்கிறது ஐ.நா.

கொழும்பு, ஜூலை 5

வடக்கில் சுமார் 2 லட்சம் இடம்பெயர் மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை - என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நம்பகரமான தரவு மூலங்களின் அடிப்படையில் இந்தப் புள்ளிவிவரத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது என அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் அதிகாரி எலினா பெர்ட்டெரி தெரிவித்துள்ளார்.

புத்தளம் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மீள்குடியேற்றப்பட்டால் இந்த எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 2 ஆயிரம் பேரும், புத்தளத்தில் 55 ஆயிரத்து 400 பேரும், வவுனியாவில் 37 ஆயிரம் பேரும் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மீள்குடியேறுவோருக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 77 பேர் நுகேகொடையில் கைது

கொழும்பு, ஜூலை5

நுகேகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாக இருந்த 77 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுகேகொடை பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் திடீரென 13 பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சனிக்கிழமை நடத்திய சுற்றி வளைப்புத் தேடுதலிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் பல வருடங்கள் தலைமறைவாக வாழ்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் உரிய பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவர் என நுகேகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தாய்மாருக்குத் தெளிவூட்டல் திட்டம்

## அனோமா திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5

நாட்டில் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில், தாய்மார்களுக்குத் தெளிவூட்டல் தொடர்பான விரைவான வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் இந்த வேலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டு, அதனூடாக பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது குறித்து தெளிவுபடுத்தப்படவுள்ளது.

அதன் ஊடாக எதிர்காலத்தில் பிள்ளைகள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் அவர்களே தீர்வைக் காணும் வகையில் இந்தச் செயற்றிட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் மூலம் தாய்மார்களுக்கு அதிக விளக்கம் கிடைக்கவுள்ளது என அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# இராணுவப் பயிற்சி பெறும் மாணவர்களின் போசாக்கு நிலையைக் கண்டறிய ஆய்வு

## சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு,ஜூலை 5

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி தற்போது தலைமைத்துவப் பயிற்சி பெறும் மாணவர்களின் போசாக்கு நிலையைக் கண்டறிவதற்கான ஆய்வொன்றை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

29 இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்த மற்றும் பயிற்சியைத் தொடரும் 22 ஆயிரத்து 500 மாணவர்களை இதன்போது ஆய்வுக்குட்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் போசாக்கு நிலையை உறுதி செய்து கொண்டு அவர்களுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆய்வு தொடர்பாக இராணுவ முகாம்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள போசாக்குத்துறை அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு, எலிக்காய்ச்சலால் 131 பேர் உயிரிழப்பு

முடிவடைந்த அரையாண்டில் டெங்கு நோயால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு மற்றும் எலிக்காய்ச்சலினால் 131 பேர் உயிரிழந்துள்ளனர் - எனச் சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தின் 3 ஆம் திகதிமுதல் 17 ஆம் திகதி வரையே டெங்கினால் 1,769 பேர் பாதிக்கப்பட்டு 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது

மே மாதத்தின் இறுதிவாரத்தில் எட்டுப்பேர் மரணமடைந்துள்ளனர். மே மாதம் 27 ஆம் திகதி முதல் கடந்த 26 ஆம் திகதிவரையான ஒரு மாத காலப் பகுதியில் 3,862 பேர் பாதிக்கப்பட்டு, 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், எலிக்காய்ச்சலினால் 4,315 பேர் பாதிக்கப்பட்டு 56 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் குருநாகலில் மாத்திரம் 1,335 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், கம்பஹாவிலேயே அதிகளவாக 11 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு அடுத்ததாக குருநாகலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்தப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.







## தேவை

I. அனுபவமுள்ள MO/ RMO முழுநேர வேலை
II. அனுபவமுள்ள அம்புலன்ஸ் சாரதி
III. அனுபவமுள்ள முன்பள்ளி பிள்ளைகள் பராமரிப்பாளர்

விவரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.

வைத்திய அதிகாரி.
CENTRAL NURSING HOME (Pvt) Ltd.
350, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P 021 222 2263



சீட்டிழுப்பு இல. **2414**
திகதி **03.07.2011**

## மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து | வெற்றி எண்கள்
**X 4 5 1 0 1 8**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X | 4 | 5 | 1 | 0 | 1 | 8 | ரூபா. | 24,171,933/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 4 | 5 | 1 | 0 | 1 | 8 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 5 | 1 | 0 | 1 | 8 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 09 |
| 3ம் பரிசுகள் | | | | 1 | 0 | 1 | 8 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 84 |
| 4ம் பரிசுகள் | | | | | 0 | 1 | 8 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 856 |
| 5ம் பரிசுகள் | | | | | | 1 | 8 | ரூபா. | 100/= | பரிசுகள் | 8,456 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 8 | ரூபா. | 20/= | பரிசுகள் | 83,888 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 4 | 5 | 1 | 0 | 1 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 4 | 5 | 1 | 0 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 85 |
| 9ம் பரிசுகள் | | 4 | 5 | 1 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 846 |
| 10ம் பரிசுகள் | | 4 | 5 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 8,433 |
| 11ம் பரிசுகள் | X | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 33,644 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. **24,549,224.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **8,473,490.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631
முடிவுகளை அறிய www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா, பாகிஸ்தானுடன் இணைந்து இலங்கை இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும் ஆபத்து

## எச்சரிக்கிறார் ஜெயலலிதா



சென்னை,ஜூலை 5

இலங்கை அரசு சீனா மற்றும் பாகிஸ்தானுடன் இணைந்து இந்தியாவிற்கு எதிராகச் செயற்படக் கூடிய ஆபத்து காணப்படுவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அச்சம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னணி தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

பாகிஸ்தானைப் போன்றே சீனாவும் பல வழிகளில் இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நேபாளம் மற்றும் இலங்கையுடன் குறித்த இரண்டு நாடுகளும் இணைந்து கொண்டு இந்தியாவிற்கு எதிராக நட வடிக்கை எடுக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு மத்திய அரசை தொடர்ச்சியாக தாம் வலியுறுத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத் தடை விதித்தல் மற்றும் கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்ளல் ஆகிய தீர்மானங்கள் ஏற்கனவே இலங்கைக்கு எதிராக தமிழக சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.(வ)

# சன் ரி.வி. நிர்வாக அதிகாரி கைது

## திரைப்படத் தயாரிப்பாளரை மிரட்டி ரூ.82 லட்சம் மோசடி



சென்னை, ஜூலை 5

சினிமா தயாரிப்பாளரிடம் 82 லட்ச ரூபா மோசடி செய்த வழக்கில், சன் ரி.வி நிர்வாக அதிகாரி ஹன்ஸ்ராஜ் சக்சேனா நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சேலத்தைச் சேர்ந்த டி.எஸ். செல்வராஜ் என்பவர் கந்தன் பிலிம்ஸ் என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வருகிறார். 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற திரைப்படத்தை தயாரித்தார்.

அவர் இரண்டு நாள்களுக்கு முன், சென்னை மாநகர பொலிஸ் ஆணையாளரான திரிபாதியைச் சந்தித்து முறைப்பாடு ஒன்றை கொடுத்தார். அந்த முறைப்பாட்டில் கூறியிருப்பதாவது:

நான் தயாரித்த, 'தீராத விளையாட்டுப் பிள்ளை' படத்திற்கான விநியோக உரிமையைத் தருமாறு, சன், ரி.வி' நிர்வாகம் மிரட்டியது. மிரட்டல் அதிகரித்ததால், வேறு வழியின்றி செலவுத்தொகை 1.25 கோடி ரூபாவைத் தருமாறு கேட்டு, படத்தின் விநியோக உரிமையை சன், ரி.வி' நிர்வாகத்திடம் கொடுத்தேன். படம் விநியோகம் செய்யப்பட்டு, நல்ல ஊதியம் கிடைத்தது. ஆனால் பேசிய படி, 1.25 கோடி ரூபாவை தராமல், குறைந்த தொகையை மட்டுமே தந்தனர். மீதமுள்ள 82.53 லட்ச ரூபா பணத்தை, பல மாதங்கள் ஆகியும் தரவில்லை. மிகுதிப் பணத்தைக் கேட்டபோது, 'பணம் தர முடியாது. உன்னால் முடிந்ததைச் செய்து கொள்' என, மிரட் டினர்.

மிரட்டல் விடுக்கும் சன், ரி.வி' நிர்வாக அதிகாரி ஹன்ஸ்ராஜ் சக்சேனா மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து, எனக்கு பணத்தைப் பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு செல்வராஜ் முறைப்பாட்டில் கூறியிருந்தார். பொலிஸ் ஆணையாளர் திரிபாதியின் உத்தரவின்படி, கே.கே.நகர் பொலிஸார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வந்தனர். அசோக்நகர் உதவி ஆணையாளர் குருசாமி தலைமையிலான தனியான படைப் பிரிவு ஹன்ஸ்ராஜ் சக்சேனாவை நேற்று முன்தினம் இரவு சென்னையில் கைது செய்தனர். முறைப்பாடு குறித்து, அவரிடம் தீவிர விசாரணை இடம்பெற்று வருகிறது.



கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சராகப் பொறுப் பேற்கவுள்ள செந்தூர் பாண்டியன், தலைமைச் செயலகத்தில், முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தமிழகத்தில் பூரண மதுவிலக்கு உடன் அமுலுக்கு வரவேண்டும்

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து

தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வரவேண்டும். தமிழ்நாட்டில் சாராயம் பாவனையில் இருக்கக் கூடாது. அப்படி வர வேண்டும் என்றால் அதை வழி நடத்தும் ஆட்சி வரவேண்டும். மக்கள் அதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. இவ்வாறு தெரிவித் தார் பா.ம.க. நிறுவுனரும் மருத்துவருமான ராமதாஸ்.

மேல்மருவத்தூர் அருகே உள்ள சோத்துபாக்கத்தில் திருமணநிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில்:

தமிழ்நாடு என்ற பெயரை மாற்றி குடிகார நாடு என்று பெயர் வைக்க வேண்டும். மதுப் பழக்கத்தால் நான்கு, ஐந்து தலைமுறைகள் சீரழிந்து வருகின்றன.

இவற்றில் ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லை. போட்டி போட்டுக் கொண்டு இலவசங்களை அறிவிக்கின்றனர். அப்பா குடிகாரன் ஆகி டாஸ்மாக் கடையில் கொடுக்கும் வருமானத்தை அரசு மகனுக்கு இலவசம் என்ற பெயரில் கொடுக்கிறது.

குடிகார நாட்டுக்கு இலவசம் தேவையா? மத்திய அரசு 35 கிலோ அரிசி இலவசமாக கொடுக்கிறது. அதைத் தவிர்த்து இவர்கள் வேறு ஏதாவது இலவசங்கள், நல்ல திட்டங்களை அறிவிக்கலாம். பூரண மதுவிலக்கு அமுலுக்கு வரவேண்டும். தமிழ்நாட்டில் சாராயம் இருக்கக் கூடாது. அப்படி வர வேண்டும் என்றால் அதை நடத்துகிற ஆட்சி வரவேண்டும். மக்கள் அதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. இவ்வாறு கூறினார் அவர்.

# காணாமற்போன மீனவர்களின் குடும்பத்துக்கு முதல்வர் நிதியுதவி

சென்னை,ஜூலை.5

திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகளைச் சேர்ந்த கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன 3 மீனவர்களின் பெற்றோர்களிடம் நிவாரணத் தொகையாக தலா ரூ ஒரு லட்சம் வீதம் ரூ 3 லட்சத்துக்கான காசோலைகளை முதல்வர் ஜெயலலிதா நேற்று வழங்கினார்.

இதுகுறித்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தைச் சேர்ந்த ரவி , பன்னீர்செல்வம் மற்றும் எண்ணூரைச் சேர்ந்த சுதாகரன் ஆகிய 3 மீனவர்களும் கடந்த மே 17 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று கரை திரும்பவில்லை.

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, காணாமல் போன மீனவ குடும்பங்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பரிசீலித்து, அந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு மீனவர் நல வாரியத்தின் மூலம் நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் காணாமல்போன மூன்று மீனவர்களின் பெற்றோர்களிடம் நிவாரணத் தொகையாக ரூ. 3 லட்சத்திற்கான காசோலையை முதல்வர் ஜெயலலிதா நேற்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீமானின் உருவ பொம்மை எரிப்பு

நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் காங்கிரஸ் கட்சி மற்றும் ராகுல் குறித்து இழிவாகப் பேசி வருவதை கண்டித்து இளைஞர் காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அதன் மாநில தலைவர் யுவராஜ் அறிவித்திருந்தார்.

இதனடிப்படையில் கரூர் அருகே உள்ள வெங்கமேடு ப்குதியில் திரண்ட இளைஞர் காங்கிரஸார் சீமானின் உருவ பொம்மையை எரித்தனர்.

இதனையொட்டி வெங்கமேடு பொலிஸார் இளைஞர் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் பத்துப் பேரைக் கைதுசெய்தனர்.

# கேரள பத்மநாப சுவாமி கோயிலுக்கு அதிநவீன தொழில்நுட்ப பாதுகாப்பு

## முதல்வர் உம்மன் சாண்டி தெரிவிப்பு

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலுக்கு அதி நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பாதுகாப்பு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என முதல்வர் உம்மன் சாண்டி தெரிவித்தார்.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி அமைக்கபபட்ட 7 நபர் குழு, திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலின் பாதாள அறைகளைத் திறந்து சில நாள்களுக்கு முன்பு ஆய்வு செய்தது. அப்போது அங்கு சுமார் ஒரு லட்சம் கோடி ரூபா மதிப்புள்ள நகை உள்ளிட்ட பொருள்கள் இருப்பது தெரியவந்தது. கடந்த சனிக்கிழமையும் இந்த ஆய்வு நடந்தது. அப்போதும் ஏராளமான நகைகள் கண்டறியப்பட்டன.

இதையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், கோயிலுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிப்பது குறித்து கேரள முதல்வர் உம்மன் சாண்டி தலைமையில் உயரதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் திருவனந்தபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பின்னர் அதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

கோயிலில் அதி தொழில்நுட்ப கருவிகளின் உதவியுடன் பாதுகாப்பை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 24 மணி நேர செல்போன் கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# திருவனந்தபுரம் ஆலய பாதாள அறையில் நகைக்குவியல்!

திருவனந்தபுரம், ஜூலை.5

கேரள மாநில தலைகநர் திருவனந்தபுரத்தில் பிரசித்திபெற்ற பத்மநாபசாமி கோயிலின் ரகசிய அறைகளில் உள்ள நகைகளின் மதிப்பு ரூ.50 ஆயிரம் கோடிக்கு மேல் என மதிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றில் 10 கிலோ எடையுடன் 18 அடி நீள தங்க மாலை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கேரள மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் பிரசித்தி பெற்றது பத்மநாபசாமி கோவில். இது ஒரு வைணவ சமயத்தைச் சார்ந்த ஆலயமாகும்.

திருவாங்கூர் மன்னர் பரம்பரைக்குச் சொந்தமான அறக் கட்டளையின் பொறுப்பில் இந்த கோயில் கவனிப்பில் உள்ளது. இந்த கோயிலின் கருவறைக்கு அருகே 6 ரகசிய பாதாள அறைகள் நீண்ட காலமாக பூட்டப்பட்டு இருந்தன.

அந்த பாதாள அறைகளைத் திறந்து, உள்ளே இருக்கும் நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொக்கிஷங்கள் விவரம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி, உச்சநீதி மன்றம் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்தது.

இதற்காக ஓய்வு பெற்ற கேரள உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவர் உள்பட 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர், 6 ரகசிய அறைகளுக்கும் ஏ,பி,சி,டி, இ,எப் என பெயரிட்டு ஒவ்வொன்றாக திறந்து நகைகளின் விவரங்கள் குறித்து கணக்கெடுத்து வருகின்றனர்.

ஏ மற்றும் பி அறைகளில் நகைகள் மதிப்பீடு செய்யும் பணி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்ப மாகியது. இந்த அறைகளில் மூடைகளில் வைக்கப்பட்டிருந்த, தங்க மணிகள், தங்கத்திலான சுவாமி சிலைகள், தங்கக் கயிறு, தங்க கிரீடங்க்ள், தங்க மாலைகள் இருப்பது தெரிய வந்தன.

மீட்கப்பட்ட தங்க நகைக் குவியல்கள் மன்னர் காலத்து நகைகள் என்பதால், அதன் தொழில் நுட்பம், வடிவமைப்புகள் ஆகியவற்றை பார்ப்பதற்கு பொது மக்களும், தங்க நகை வியாபாரிகளும், நகை வடிவமைப்பாளர்களும் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹேலீஸ்' நிறுவனத்தின் புதிய பரிமாணம்



இலங்கையின் விவசாயப் பிரிவில் தேசிய ரீதியாக தனித்தனியான பங்களிப்புக்களை கணிசமாக வழங்கிய ஐந்து தசாப்தங்களுக்கு மேலான பரிமாணத்தையும் வளர்ச்சியையும் கொண்டுள்ள ஹேலீஸ் குடும்பத்தின் ஒன்பது கம்பனிகள் ''ஹேலீஸ் அக்ரிகல்ச்சர்'' என்ற பெயரில் ஒரே கூட்டான நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

பாரிய தாக்கம் மற்றும் ஆற்றல் என்பனவற்றை நோக்கியதாக இந்தப் புதிய நிறுவனம் அதன் செயற்பாடுகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும். அத்தோடு ஹேலீஸ் நிறுவனம் இவ்வளவு காலமும் உள்ளூர் பொருளாதாரத்தில் வகித்து வந்த பங்களிப்பின் மேம்பாட்டுக்கும் இது இட்டுச் செல்லும்.

இனிமேல் ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் தெளிவாகப் புலப்படக்கூடிய ஒன்று. அத்தோடு ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் மொத்த உற்பத்திகளையும் வேலைகளையும் வாய்மூலம் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு நிறுவனமாக தனியான ஒரு மேடையின் கீழ் ஹேலீஸ் குழும முகாமைத்துவக் கூட்டமைப்பின் கீழ் செயற்படும். இந்தக் குழுமம் 2010 இல் ஒட்டுமொத்த விற்பனை வருமானமாக ஒன்பது பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையைப் பெற்றிருந்தது.

கொழும்பில் B2B மற்றும் B2C பிரிவு முன்னணி வாடிக்கையாளர்களுக்காகவும், சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினர்களுக்காகவும் மிகவும் கோலாகலமான முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட புதிய நிறுவனம், முகாமைத்துவம், செயற்பாடு, விநியோகச் சங்கிலி, ஆராய்ச்சி, ஹேலீஸ் கம்பனிகளின் பயிர் பாதுகாப்பு, பயிர் உற்பத்தி, விவசாய உபகரணம், சுற்றாடல் விஞ்ஞானம், பசளை, மிருக சுகாதாரம் மற்றும் விவசாய ஏற்றுமதி என எல்லாவற்றையுமே இலகுபடுத்துகின்றது.

ஐக்கியத்தில்தான் பெரும் பலம் உள்ளது என்ற சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயத்துக்கு ஏற்ப இந்த எண்ணக்கரு அமைந்துள்ளது என்று கூறினார் ஹேலீஸ் குழுமத்தின் விவசாயப் பிரிவு கம்பனிகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் றிஸ்வி சஹிட். தனிப்பட்ட கம்பனிகளின் ஸ்திர நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில் அவற்றின் சக்திகளை நாம் ஒன்றுதிரட்டியுள்ளோம். இவற்றின் மூலம் அவற்றின் பெறுபேறுகளும் பாரியதாக அமையும் என்றார்.

ஹேலீஸ் அக்கிரிகல்சர் குடையின் கீழ் பிரதிநிதித்துவம் செய்யும் பொதுச் சேவைகள் ஒருங்கிணைப்பும், பெறுமதிமிக்க ஆலோசனைகளும் துறைசார் பிரிவில் கணிசமான தாக்கத்தை அதிகரித்து செலவுகளைக் குறைத்து வளர்ச்சியை அதிகரிக்கும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (த)



இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளையின் கைதடி விரிவாக்கற் பிரிவு கடந்த 16ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

சாவகச்சேரி கிளை முகாமையளர் கே.சேதுகாவலர் தலைமையில் நடைபெற்ற விழாவில் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணஸ்ரீ, வடக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்க, அதிமேற்றரக் கிளை பிரதம முகாமையாளர் எ.வாமதேவா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் மூவரும் கூட்டாக புதிய கட்டடத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தனர். இந்நிகழ்வில் பெருமளவு பொது மக்கள் கலந்துகொண்டனர். (த-207)

# மலிபனுக்கு வெற்றி ஈட்டித்தந்த அதன் ஊழியர்களுக்கு கௌரவம்

தன்னுடைய ஊழியர்களின் சேவையையும் பங்களிப்பையும் கௌரவிப்பதற்காக மலிபன் பிஸ்கட் உற்பத்தி நிறுவனம் (வரையறுத்த) இரத்மலானையில் அமைந்துள்ள தனது அலுவலக வளாகத்தில் பாராட்டு நிகழ்வு ஒன்றைக் கொண்டாடி யது. தேசிய தர விருதை (National Quality Award) மலிபன் வெல்வதற்கு காரணமாய் அமைந்த ஊழியர்களின் அயராத அர்ப்பணிப்பையும், பங்களிப்பையும் அதன் முகாமைத்துவம் பாராட்டி கௌரவிப்பதற்காக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மலிபன் குழுமத்தின் தலைவர் ஏ. ஜீ. ஆர். சமரவீர உள்ளடங்கலாகப் பல பிரமுகர்களின் உரைகள் மற்றும் கலைநிகழ்வுகள் இடம் பெற்றதுடன் முதன் முதலாக மலிபன் நிறுவன கீதமும் இசைக்கப்பட்டது. காவல் துறையின் கலாசாரப் பிரிவின ரின் நிகழ்ச்சி, கொழும்பு பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவு மாணவர் கள், புகழ்பெற்ற உள்ளூர் கலைஞரான விக்ரர் ரத்னாயக்க அவர்களின் பிள்ளைகள் ஜயந்த ரத்னாயக்க, திலும் ரத்நாயக்க ஆகியோரின் கலையாற்றல்களும் இங்கு வெளிப்படுத்தப்பட்டன. இந் நிகழ்வில் இசைக்கப்பட்ட மலிபன் கீதத்திற்கும் கீதாநாத் குடலிகம அவர்கள் இசை வழங்க விக்ரர் ரத்னாயக்க பாடலைப் பாடியிருந்தார். மலிபன் தலைவர் அவர்கள் ஊழியர்களுக்குப் பாராட்டுச்சின்னம் வழங்கி கௌரவித்தார். ஏறத்தாழ 1,525 ஊழியர்கள் நிகழ்வில் பங்குபற்றி சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய திருமதி. ஏ. கே. சி.ரணவீர அவர்கள் ஊழியர்களாகிய தமது கடமைகளை ஒழுங்கு முறையில் சிறப்பாகச் செய்வதற்கு வேண்டிய போதிய அறிவையும், பயிற்சியையும் தமது முகாமைத்துவம் தமக்கு வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

தமக்கென சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வையிட்டுத்தாம் மிக மனம் மகிழ்வதாகக் கூறிய இவர், இவ்வாறான ஒவ்வொரு நிகழ்வின் போதும் ஆதரவு வழங்கிவரும் மலிபனின் தலைவர் அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். ஒவ்வொரு ஊழியர்களையும் மலிபனின் தலைவர் அறிந்து வைத்திருப்பது நிறுவனத்தின் வெற்றியின் இரகசியம் என்று கே. எச். ஜகத் கூறினார். மலிபனின் ஊழியர்கள் தமது பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவதாலே மலிபன் தனது வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளவும் தேசிய தரவிருதை வெல்லவும் காரணமாகியது என்று தெரிவித்தார்.

மலிபன் ஊழியர்கள் குழுவில் தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த ஊழியர்களும் புதிதாக இணைந்து கொண்ட வர்களும் உள்ளடங்குகின்றனர். அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் புதிதாக இணைந்தவர்களுக்கு வேண்டிய வழிகாட்டல்களையும் ஆதரவையும் தாராளமாக வழங்குவதால் மலிபனின் முன்னேற்றத்திற்கு முக்கியமானதாக அமைந்தன எனத் தெரிவித்தார்.

ஆங்கில மருந்து விற்பனையாளர் தேவை

ஆங்கில மருந்து விற்பனையில் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: [illegible] பார்மசி

406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### லயன் செல்லையா வைத்தியநாதன்

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர், சுன்னாகம் தெற்கு, அகில இலங்கை சமாதான நீதிவான் (All Island J.P.)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வைத்தியநாதன் 02.07.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகம் (குஞ்சு, லங்கா சிமெந்து லிமிட்டெட்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துசாமி-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசரத்தினம், இலங்கைநாதன், ஜெயநாதன் (தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாவட்டம்), மனோரஞ்சிதம் காலஞ்சென்ற கமலாதேவி, மற்றும் ஞானதேவி (கனடா), யோகாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் வீரசிங்கம் காலஞ்சென்ற கந்தசாமி (C.T.B.) மற்றும் ஜெகநாதன் (கனடா), மனோகரன் (பிரான்ஸ்), உருக்குமணிதேவி, கோகிலாம்பிகை, தமயந்தி (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), சிவகுமார் (கனடா), அமுதா (ஆசிரியை, சரஸ்வதி மத்திய கல்லூரி, பதுளை), ரவி (கணக்காய்வாளர், SR.Associats, பதுளை), வசந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (சி/1366)

தகவல்:
குஞ்சு (மனைவி),
ஜெயநாதன் (சகோதரன்- C.D.O)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவரட்ணம் சிவபுஸ்பராணி (குஞ்சு)



கரம்பனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவரட்ணம் சிவபுஸ்பராணி 03.07.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவரட்ணம் (ஓய்வுபெற்ற, Xகதிரியக்க தொழில்நுட்பவியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும் யசோதா (கனடா), சிவகுமார் (ஆசிரியர், யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தாயாயும் ஜெயராஜ் (கனடா), மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமியும் கிரிஷாந்தின் (யா/ உடுவில் மகளிர் கல்லூரி) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

81, மானிப்பாய் வீதி,
மானிப்பாய். (5478)

தகவல்:
குடும்பத்தினர்.

### யோசெப் வின்சன்

(பஞ்சம்)



குருநகர், கடற்கரை வீதியைச் சேர்ந்த பிரபல சம்மாட்டி யோசெப் வின்சன் (பஞ்சம்) கடந்த (02.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசெவ் மனவல் - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் மக னும் சவுரியம்மா (தங்கம்)வின் அன்புக் கணவருமாவார்.

அவரது நல்லடக்கம் பற்றி விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி
(சவுரியம்மா-தங்கம்).

93/2, செபஸ்தியன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(சி/1367) 38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தில் எதிர்க்கட்சியான ப்யூதாய் மகத்தான வெற்றி

## அந்த நாட்டின் முதல் பெண் பிரதமராகிறார் யிங்லக்

பாங்காக், ஜூலை 5

தாய்லாந்தில் நடந்த பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியான ப்யூதாய் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. இதனையடுத்து இக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமரின் சகோதரியுமான யிங்லக் புதிய பிரதமராகத் தேர்வு செய்யப்பட உள்ளார்

மொத்தமாகவுள்ள 500 இடங்களில் 260 இடங்களை ப்யூதாய் கட்சி கைப்பற்றியுள்ளது. ஆளும் ஜனநாயகக் கட்சிக்கு 163 இடங்கள் கிடைத்துள்ளன. எதிர்க்கட்சியான ப்யூதாய் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.



தாய்லாந்தில், எதிர்க்கட்சியான தாய்லாந்து மக்கள் கட்சி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றது.அக்கட்சியின் பிரதமர் வேட்பாளரான யிங்லக், வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் தலைநகர் பாங்கொக்கில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கிறார்.

இந்நிலையிலேயே முன்னாள் பிரதமர் ஷினவத்ரேவின் சகோதரியும், இக்கட்சியின் தலைவருமான யிங்லக் (வயது-44) புதிய பிரதமராகத் தேர்வு செய்யப்பட உள்ளார். தற்போதைய பிரதமர் அபிஜித், புதிய பிரதமராகவுள்ள யிங்லக்குக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார். யிங்லக் தாய்லாந்து நாட்டின் முதல் பெண் பிரதமராகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அல்குவைதாவை ஒழித்துக் கட்டுங்கள் பாக். அதிபரிடம் பிரதமர் கமரூன்

லண்டன், ஜூலை 5

அல்குவைதா இயக்கத் தலைவனும், சர்வதேச தீவிரவாதியுமான ஒசாமா பின்லேடன் ஒழித்துக்கட்டப்பட்டதை அடுத்து அந்த இயக்கத்துக்கு எதிராக தீர்க்கமாக செயற்பட்டு அல்குவைதாவை ஒழித்துக்கட்டுமாறு பாகிஸ்தானை பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் வலியுறுத்தி உள்ளார்.

பிரிட்டனின் தலைநகர் லண்டனில் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோரது சந்திப்பு நேற்றுமுன்தினம் நடந்தது.

அப்போது பின்லேடன் ஒழித்துக்கட்டப்பட்டு விட்டார். ஆகவே அவனது இயக்கத்திற்கு ஆதரவாகச் செயற்படும் அல்குவைதா இயக்கத்தை வேரறுக்குமாறு சர்தாரியைக் கேட்டுக் கொண்டார்.

இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இந்த நேரத்தில் தீர்க்கமாகச் செயற்பட்டு அல்குவைதாவை ஒழித்துவிடலாம்என்றும் கமரூன் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 2 ஆம் திகதி அல்குவைதா இயக்கத் தலைவன் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் அமெரிக்க படை நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர் கமரூனும், சர்தாரியும் சந்திப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பின்போது இருவரும் தீவிரவாத ஒழிப்புக் குறித்து விவாதித்தார்கள். எல்லா மட்டத்திலும் ஒத்துழைப்பை தீவிரப்படுத்தி தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று சர்தாரியை கமரூன் கேட்டுக் கொண்டார்.

அப்போது தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானின் முயற்சிகளையும் கமரூன் பாராட்டினார். தீவிரவாதத்தை ஒழிக்க பாகிஸ்தான் உறுதியோடு இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஒபாமா தங்கியிருந்த பகுதியில் திடீரென பறந்த "குட்டி" விமானம்

வாஷிங்டன், ஜூலை 5

அமெரிக்க அதிபர் தங்கியிருந்த இடத்துக்கு அருகே, அனுமதியின்றி குட்டி விமானம் ஒன்று திடீரெனப் பறந்ததால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்க அதிபர் ஒபாமா, தன் வார விடுமுறையைக் கழிப்பதற்காக, மேரிலேண்ட் என்ற இடத்தில் தங்கியிருந்தார். இந்தப் பகுதியை, அமெரிக்க இராணுவத்தினர் தீவிரமாகக் கண்காணித்து வந்தனர்.

இதன்போது ஒபாமா தங்கியிருந்த இடத்துக்கு அருகே, வான் பகுதியில் திடீரென ஒரு குட்டி விமானம், ஊடுருவிப் பறந்தது.

இதைத் தொடர்ந்து உஷாரடைந்த இராணுவத்தினர், அந்த விமானத்தின் விமானியுடன் தொடர்புகொள்ள முயற்சித்தனர். அது முடியவில்லை.

இதையடுத்து, அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான ஜெட் விமானங்கள், அனுமதியின்றி ஊடுருவிய அந்த விமானத்தை வழிமறித்து ஹாகர்ஸ்டவுன் என்ற இடத்தில், கட்டாயப்படுத்தித் தரை இறக்கினர்.

இதுகுறித்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகையில், "அந்தக் குட்டி விமானத்தை ஓட்டிய விமானி வழிதவறி, அனுமதியில்லாத பகுதிக்குள் வந்துள்ளார் எனினும் இது குறித்து தீவிரமாக விசாரித்து வருகிறோம்'' என்றனர்.

# ஏமனில் துப்பாக்கிச் சண்டை: 23 பேர் சாவு

சனா, ஜூலை 5

ஏமனில் பாதுகாப்புப் படையினருக்கும்,தீரவாதிகளுக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் 13 அல்குவைதா தீவிரவாதிகளும் 10 பாதுகாப்புப் படை வீரர்களும் உயிரிழந்தனர்.

அபயான் மாகாணத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. இதில் இருதரப்பிலும் 10 இக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனிடையே அல்குவைதா கைப்பற்றியிருந்த ஜிஞ்ஜிபார் நகரின் பல்வேறு இடங்களில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாய்லாந்தில் கார்க்குண்டு வெடிப்பு அவ்வேளையில் படம்பிடித்தவர் யார்



பாங்கொக், ஜூலை 5

தாய்லாந்தில் அதிக சனநடமாட்டமுள்ள நகரத்தை குறி வைத்து நேற்றுமுன்தினம் காலை கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.யாரும் எதிர்பாராத வேளையில் நடத்தப்பட்ட இந்த கார் குண்டுத்தாக்குதல் சுமார் 200 பேர் வரை காயமடைவதற்குக் காரணமானது.

அங்கு வாழுகின்ற 4500 இக்கும் மேற்பட்ட முஸ்லிம் மதத்தினரை இலக்காகக் கொண்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமென அந்த நாட்டு ஊடகம் தெரிவிக்கிறது.

பொதுவாக குண்டு ஒன்று வெடித்த பின்னரே அது தொடர்பான படங்கள் வெளியாவது வழமை.ஆனால் இந்த வெடிச்சம்பவத்தில் கார் வெடித்துச் சிதறும் பொழுதே படம் பிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய படத்தைப் பிடித்தவர் யாரென்று தெரியாமல் குழம்புகிறது அந்த நாட்டுப் பொலிஸ் பிரிவு.

# லிபியாவில் கடும் மோதல்: 11 பேர் காயம்

திரிபோலி, ஜூன் 5

லிபியாவில் கடாபி இராணுவத்துக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்தத் தாக்குதலில் 11 போராட்டக்காரர்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்கு போர்க்களப் பகுதியில் உள்ள மருத்துவமனையிலேயே அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

லிபியாவில் முகாமிட்டுள்ள நேட்டோப் படைகள் உடனடியாகத் திரும்ப வேண்டும். இல்லையென்றால் ஐரோப்பிய பகுதிகளை குறிவைப்போம் எனக் கடாபி எச்சரித்து இருந்தார். அவரது எச்சரிக்கை வெளியான சில மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

அந்தத் தாக்குதலில் போராட்டக்காரர்கள் ஆதிக்கம் உள்ள மிஸ்ரட்டாவில் 8 ரொக்கெட்டுகள் விழுந்தன.

லிபியா அரசு செய்தித் தொடர்பாளர் முசா இப்ராகிம் கூறுகையில்''கடாபி பழி தீர்க்க அறை கூவல் விடுத்து உள்ளார். போராட்டக்காரர்களுக்கு உரிய ஆதரவு இல்லை'' என்றார்.

## மக்கள் வங்கியின் பொன்விழா 2011

### முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்த நிறுவமைப்புகள் மக்கள் மனங்களில் இடம் பிடிக்கின்றன. இந்த வகையில் 'மக்கள் மனமறிந்த வங்கி' என்ற மகுட வாசகத்தின் பொருளாகி இன்று தன் பொன் விழாப் பெருமையினைக் கொண்டாடும் மக்கள் வங்கியை வாழ்த்தும் இந்த வேளை அர்த்தமுள்ளது.

மக்கள் வங்கியின் தனித்துவம் அதன் வரலாற்று ஊற்றுக்களில் பொதிந்துள்ளது. அன்றைய கூட்டுறவு வங்கியின் படிமலர்ச்சியாய் இன்றுவரை அதன் செயற்திட்டங்களை வழிப்படுத்தும் சமுதாய உணர்திறன்; ஆடம்பரம் இல்லாத அர்ப்பணிப்பு என்பன மக்கள் வங்கியின் பொன் விழா பெருமிதத்தின் அடிப்படைகள் என்றால் மிகையில்லை.

சூழமைவின் நெருக்கடியான பொழுதுகளில் மக்கள் துணைக்கரமாகய் விளங்குவதுடன் பொருளியல் நோக்கு போன்ற ஆக்கங்களின் வழி சமுதாய அறிவெல்லைகளை விரிவாக்குகின்றமை, சமூகப் பணிகளின் பங்காளார்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக-பண்பாட்டு உணர்திறனுடன், எல்லோர்க்கும் வாழ்வு என்ற உன்னதத்தை நோக்கி, மக்கள் வங்கியின் பணிகள் நிறைந்திட எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
சமூகவியல் பேராசிரியர் & முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# ரஷ்ய மொழியில் 'காம சூத்ரா'

மாஸ்கோ, ஜூலை 5

வாத்சாயனர் எழுதிய, 'காமசூத்ரா' முதன் முறையாக, ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கும், ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த வாத்சாயனர் எழுதிய,'காமசூத்ரா' என்ற நூல், பல்வேறு உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தற்போது முதன் முறையாக, ரஷ்யாவில் பேசப்படும்,'உட்மரூட்' மொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது. இதை புகழ்பெற்ற கவிஞரும், திரைப்பட எழுத்தாளருமான, 'பயோட் சாக்காரோ' மொழி பெயர்க்கிறார்.

## மக்கள் வங்கியின் பொன்விழா 2011

### மத்திய வங்கி முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையின் கிராமிய பொருளாதாரத்துடன் இரண்டறக் கலந்த தனது ஏற்றமிகு சேவையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன் விழாக் காணும் பெருமை மிகு இத்தருணத்தில் மக்கள் வங்கிக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இலங்கையின் வங்கித்துறை வரலாற்றில் மக்கள் வங்கி தனக்கென் ஒரு தனி இடத்தை பதித்து நகரங்கள், கிராமங்கள் என சகல இடங்களிலும் மக்களுக்கு அளப்பரிய நிதியியல் துறை சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது என்பதை யாவரும் அறிவர். இதனால்தான் என்னவோ மக்கள் மனமறிந்த வங்கி என்ற வாசகத்தை கேட் டவுடன் அது மக்கள் வங்கி என முடிக்கத் தோன்றுகிறது. குறிப்பிட்ட தசாப்தங்களுக்கு முன்னர் வங்கித் துறையின் சேவை; நகர்ப் புறங்களிலுள்ள மேல்தட்டு மக்களுக்கு என காணப்பட்டிருந்த நிலையில் வங்கிச் சேவையினை சாதாரண மக்களுக்கும் கிடைக்கத்தக்க வகையில் கிராமங்கள் தோறும் கிளைகளை அமைத்து கிராமிய மக்களிடத்து வங்கிச் சேவையினை சென்று சேர்த்த பெருமை மக்கள் வங்கியையே சாரும் என்றால் அது மிகையல்ல.

விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில் என்கின்ற கிராமிய பொருளாதாரம் சார்ந்த வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு மக்கள் வங்கி வழங்கி வருகின்ற சேவை என்றும் நினைவு கூரத்தக்க ஒன்றாகும். போர் முடிவடைந்த பின்னர், இன்று வட பகுதியை நோக்கி பெருமளவான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் சேவையாற்ற வந்துள்ளன. ஆனால் அன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் மக்களோடு மக்களாக நின்று பல்வேறு நிதிச் சேவைகளையும் வழங்கிய மக்கள் வங்கியினுடைய சேவை போற்றுதற்குரிய ஒன்றாகும். இன்றும் கூட வடபகுதியினுடைய பொருளாதார அபி விருத்திக்காக பல்வேறு கடன் திட்டங்களையும் வழங்குவதில் மக்கள் வங்கி காட்டுகின்ற ஆர்வம் உண்மையிலேயே பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மக்கள் வங்கி தனது ஏற்றமிகு சேவையினை மக்களுக்கு வழங்கி பல்லாண்டு பல்லாண்டு பலநூறு ஆண்டு வெற்றிநடை போட வேண்டுமென எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.சிறீதரன்
வடமாகாண முகாமையாளர், இலங்கை மத்திய வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை மெய்கண்டான் ம.வியின் கராத்தே அணி தேசியப் போட்டிக்கு

சுன்னாகம், ஜூலை 5

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய பெண்கள் கராத்தே அணி தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.

வடமாகாணத்தில் ஒரே யொரு பாடசாலையிலிருந்து மட்டும் பெண்கள் கராத்தே அணி போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் 19வயதுக்குட்பட்ட கபடி அணி மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப்பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை கன்னியர்மட பாடசாலையுடன் மோதி இரண்டாம் இடத்துக்குத் தெரிவானது. மூன்றாமிடத்தை வவுனியா கணேஸ்வர மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

19வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான ஆண்கள் கரப்பந்தாட்டப் போட்டியிலும் இப்பாடசாலை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-38)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 5

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி அதிபர் வி.கே. கணபதிப்பிள்ளை தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதி ஆணையாளர் திஸ்ஸஹேவ விதான, கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பணிப்பாளர் திருமதி சில்வா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும்-

கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் எஸ். முரளிதரன், கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிப்பாளர் தயதீன், கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாக பிரதிப் பணிப்பாளர் ஏ.எம்.திலகரட்ண, கல்வி அமைச்சின் வட மாகாண அபிவிருத்திப் பிரிவின் திட்டப் பணிப்பாளர் ஏ. எவ்.எம்.றாபிக் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-23)

# தேசிய மட்டத்தில் வென்று சாதனை படைத்த வீரர்கள், வீராங்கனைகளுக்கு கௌரவம்



யாழ்ப்பாணம், ஜூலை 5

37ஆவது தேசிய மட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வடமாகாணக் கூடைப்பந்தாட்ட அணியையும், இலங்கைக் கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய தரம் IIக்கான சிரேஷ்ட பிரிவு ஆண்களுக்கான போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணி வீரர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை மு.ப 11.45 மணியளவில் நாவலர் மணி மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் உதைபந்தாட்ட பயிற்றுனருமான செ.ரமணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வுக்கு முன்னதாக வீரர்கள், வீராங்கனைகள் யாழ். மத்திய கல்லூரியில் இருந்து திறந்த வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டு இராசாவின் தோட்டம் சந்தியில் இருந்து யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் நாவலர் மணி மண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டனர். நாவலர் மணிமண்டப நுழை வாயிலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏ.எவ். ஜே.ரூபசிங்கம் ஆகியோர் வீர, வீராங்கனைகளைக் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

நிகழ்வு ஆரம்பமாகி சில நிமிடங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்வில் இணைந்து கொண்டு தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வடமாகாண வீராங்கனைகளுக்கு பதக்கங்களை அணிவித்து கௌரவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், இலங்கை கூடப்பந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்பட்ட சிரேஷ்ட பிரிவு தரம் II ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்ற யாழ்.மாவட்ட அணியினருக்குப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தார்.

இதனைத் தொடர்ந்து வட மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் வீரர்கள், வீராங்கனைகளை வாழ்த்தி உரையாற்றினார்கள்.

(த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடந்துவரும் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* முஸ்லிம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் விக்கினேஸ்வர விளையாட்டுக்கழகம் (பிற்பகல் (3.45மணி)
* பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம். (மாலை 5 மணி)

(த-23)

# உரும்பிராய் சென்.மைக்கல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் உரும்பிராய் சென். மைக்கல் வெற்றிபெற்றுள்ளது. மற்றைய ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

இதில் இரண்டு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மற்றைய ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது. (த-23)

# சுழிபுரம் விக்ரோறியன்ஸ் 33 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு, ஜூலை 5

அராலி களவாத்துறை விளையாட்டுக்கழகம் ஆடி விழாவையொட்டி யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையே நடத்தும் 7பேர் பங்குபற்றும் 12 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் 33 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

அராலி களவாத்துறை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை கண்ணகி விளையாட்டுக்கழகமும் சுழிபுரம் விக்ரோறியன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன் விளையாட்டுக் கழகம் 12 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. ரஞ்சன் 35 ஓட்டங்களையும் தர்சன் 16 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

கண்ணகி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரகு 2 விக்கெட்டுக்களையும் தனுசன், அனுசன் ஆகியோர் தலா 1விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

85 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கண்ணகி விளையாட்டுக் கழகம் 9.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது. ரகு 11 ஓட்டங்களையும் ஸ்ரீ ரமணா 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

விக்ரோறியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுகிர்தன் 2 விக்கெட்டுக்களையும் நகுலன், தர்ஷன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(த-86)

## 'கொல்சிம்' இறுதியாட்டம் கொழும்பில் சனிக்கிழமை

யாழ்ப்பாணம், ஜூலை 5

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 'கொல்சிம் ஏவ்.ஏ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு 'சிற்றிலீக்' விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இலங்கை இராணுவ உதைபந்தாட்ட அணியை எதிர்த்து டொன் பொஸ்கோ விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இச் சுற்றுப்போட்டித் தொடரின் இலங்கை பொலிஸ் உதைபந்தாட்ட அணிக்கும் இலங்கை இராணுவ உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான அரை இறுதியாட்டம் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# உடுப்பிட்டி கழுகுகள் சம்பியன்

வடமராட்சி, ஜூலை 5

அல்வாய் கிழக்கு மாலிச் சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திய இருபதுக்கு இருபது கிரிக்கட் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி வடக்கு கழுகுகள் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்னணிக்கழகங்கள் கலந்துகொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் உடுப்பிட்டி வடக்கு கழுகுகள் விளையாட்டுக்கழகமும் கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. போட்டிகள் யாவும் மாலிச்சந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றன. (த-236)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் தொ[illegible] நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியை கல்லூரி முன்[illegible] அதிபர் எஸ்.சேதுராஜா கொடியசைத்து ஆரம்பித்து வைக்கிறார். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் பறிபோனது வெற்றி



## மனம் வெதும்புகிறார் டோனி

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதுகுறித்து இந்திய அணித் தலைவர் டோனி நிருபர்களிடம் கூறியதாவது:

இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது சற்று ஏமாற்றமே. ஆனால் அதிர்ச்சி அடையவில்லை.

கடைசிக் கட்டத்தில் விக்கெட்டுக்களை கைப்பற்றி வெற்றி பெற நல்ல வாய்ப்பு இருந்தது. மழையால் எங்களது திட்டம் எல்லாம் அடியோடு பாதித்தது.

இன்னும் சில விக்கெட்டுக்களை மட்டும் எடுக்க வேண்டிய நிலையில் இருந்த போது போதிய வெளிச்சமின்மையால் எங்களது வெற்றி பறிபோனது. பருவநிலை என்பது நமது கையில் இல்லை. 280 ஓட்டங்கள் என்பது இந்த ஆடுகளத்தில் மிகப் பெரிய இலக்கு தான். ஏனென்றால் இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடுவது என்பது எளிதானது அல்ல.

எங்களது பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்புடன் பந்து வீசினார்கள். சிலர் விக்கெட்டுக்களை எடுக்க முடியாமல் போனாலும் துடுப்பாட்டக்காரர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். இஷாந்த் சர்மாவின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. சகீர்கான் இல்லாததை அவர் நிவர்த்தி செய்து முதன்மை பந்து வீச்சாளர் என்பதை நிரூபித்தார் - என்றார்.(15)

# விம்பிள்டன் வீழ்ந்தார் நடால்



லண்டனில் நடந்த விம்பிள்டன் ரெனிஸ் தொடரில் செர்பியாவின் ஜோவிக் சம்பியன் பட்டம் வென்றார்.

லண்டனில் விம்பிள்டன் ரெனிஸ் தொடர் நடந்தது. இறுதிப் போட்டியில் செர்பியாவில் நோவக் ஜோவிக்கும், கடந்த முறை சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபேல் நடாலும் தகுதி பெற்றனர்.

இறுதிப் போட்டியில் ஜோவிக் 6-4,6-1,1-6,6-4 என்ற செட் கணக்கில் நடாலை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

இது ஜோவிக் இந்த ஆண்டில் கைப்பற்றும் 2 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். விம்பிள்டன் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் செர்பியாவின் முதல் வீரர் என்ற பெருமையையும் ஜோவிக் பெற்றார். (15)



# அமெரிக்கா லிறுதியில்

பெண்கள் உலகக் கிண்ண கால் பந்து தொடரின் லீக் போட்டியில், அமெரிக்க அணி 3-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

ஜேர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது பீபா உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கின்றது. இதில் பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன. 'சி' பிரிவு லீக் போட்டியில் அமெரிக்கா, கொலம்பியா அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய அமெரிக்க அணிக்கு, ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் ஹெதர் ஓரில்லி முதல் கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு கொலம்பிய வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் முதல் பாதி முடிவில் அமெரிக்கா 1-0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த அமெரிக்க அணிக்கு மேகன் ராபினாய் (50 ஆவது நிமிடம்), கார்லி லாய்டு (57 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர்.

கடைசி வரை போராடிய கொலம்பிய வீராங்கனைகளால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் அமெரிக்க அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் வட கொரியா, கொலம்பியா அணிகளை அடுத்தடுத்து வீழ்த்திய அமெரிக்க அணி, காலிறுதிக்கு முன்னேறியது.

'சி' பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் சுவீடன், வட கொரியா அணிகள் மோதின. ஆட்டத்தின் 64 ஆவது நிமிடத்தில் லிசா தால்க்விஸ்ட் ஒரு கோல் அடித்து கைகொடுக்க, சுவீடன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது ஏற்கனவே கொலம்பியாவை வீழ்த்திய சுவீடன் அணி காலிறுதிக்கு முன்னேறியது. (15)

# சந்திமால் சதம் வென்றது இலங்கை




இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி சந்திமாலின் சதத்தின் உதவியுடன் ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் நேற்று முன்தினம் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அலிஸ்ரக் குக் - கிஸ்வெர்ரர் ஆகியோர் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இங்கிலாந்து அணிக்கு மிகச் சிறப்பான ஆரம்பத்தை அமைப்பதற்கு இலங்கை வீரர்கள் சந்தர்ப்பம் வழங்கவில்லை. அணி 18 ஓட்டங்களைப் பெற்ற போது மலிங்கவின் பந்து வீச்சில் கிஸ்வெர்ரர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய ரொரட் 2 ஓட்டங்களுடன் லக்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற இங்கிலாந்து அணி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

தொடர்ந்து களமிறங்கிய கெவின் பீற்றர்ஸன் அணித் தலைவர் குக்குடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். வேகமாக ஓட்டங்களை குவித்த பீற்றர்ஸன் 41 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜீவன் மெண்டிஸ்ஸின் பந்து வீச்சில் ரன்டீவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து வந்த மத்தியவரிசை அதிரடித் துடுப்பாட்ட வீரர் மோர்கன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இங்கிலாந்து அணி 85 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து திணறியது. இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய தலைவர் குக் மறுமுனையில் தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தார். அவர் 69 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இவருடன் இணைந்து பெல் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

157 ஓட்டங்களைப் பெற்றபோது இங்கிலாந்தின் 5 ஆவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. பெல் 30 ஓட்டங்களைப் பெற்ற போது லக்மலின் பந்து வீச்சில் குலசேகரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். புதிதாக நுழைந்த பிறெஸ்னன் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் குக் அபாரமாக ஆடி தனது இரண்டாவது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்தார். இறுதியில் இவர்களின் சிறப்பான இணைப்பாட்டத்தில் (71 பந்துகளில் 75 ஓட்டங்கள்) அணி கௌரவமான இலக்கை அடைந்தது. 232 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் குக் 143 பந்துகளில் 119 ஓட்டங்களை 13 பவுண்டரிகள் அடங்கலாகப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 246 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்தது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் மலிங்க, லக்மால், ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை டில்ஷான் - மஹேல ஜெயவர்த்தன ஜோடி விரட்டத் தொடங்கியது. இருப்பினும் இங்கிலாந்து அணி இலங்கை அணித் தலைவர் டில்ஷானின் விக்கெட்டை வேகமாக வீழ்த்தியது. அணி 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 பந்துகளில் 3 ஓட்டங்களுடன் பிறெஸ்னன் பந்து வீச்சில் 'போல்டாகி' வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணியின் இளம் வீரர் டினேஸ் சந்திமால், மஹேலவுடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை இவர்கள் இருவரும் சரமாரியாகப் போட்டுத்தாக்கினர். ஓவருக்கு ஒவ்வொரு பவுண்டரி வீதம் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தது. இங்கிலாந்து அணியினரால் இவர்களது துடுப்பாட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. சிறப்பாகவும் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடிய மஹேல 45 பந்துகளில் தனது 57 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 116 பந்துகளில் 112 ஓட்டங்கள் பெறப்பட்டது. மஹேல 77 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 79 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய சங்ககார நிதானமாக துடுப்பெடுத்தாடினார். அவருடன் இணைந்து சந்திமால் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது அரைச்சதத்தை 73 பந்துகளில் பூர்த்தி செய்தார். சங்ககார 47 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்ற போது சுவானின் பந்து வீச்சில் மோர்கனிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

கண்டம்பி - சந்திமால் இணைந்து நான்காவது விக்கெட்டுக்காகத் துடுப்பெடுத்தாடினார்கள். இலங்கை அணி 230 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 4 ஆவது விக்கெட்டை இழந்தது. கண்டம்பி 13 பந்துகளில் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து மத்தியூஸ் களமிறங்கினார். மறுமுனையில் சந்திமால் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சதத்தை நெருங்கினார். வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவையான நிலையில் சந்திமாலின் சதத்துக்கு 6 ஓட்டங்கள் தேவையாக இருந்தது. இறுதியில் சந்திமால் அன்டர்ஸன் பந்தில் அதிரடியாக சிக்ஸர் அடித்து தனது இரண்டாவது சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் 48.2 பந்துகளில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 249 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றுக் கொண்டது. சந்திமால் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை உறுப்பினராய்
அமர்ந்து சாமஸ்ரீ தேசமானிய விருதை முதன் முதலாய் குருநகர்
மண்ணுக்குப் பெற்றுக் கொடுத்து மேன்மையுறும் மைந்தனைப்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**அ. கிளபோடாசியஸ் (ஜம்பிள்)**

ஊருக்காய் மாநகர சபை புகுந்து
இறைபணிக்காய் அருட்பணி சபை அமர்ந்து
சமூகத்தின் தேவைகட்காய் உரக்க
குரல் கொடுத்த செம்மலே!
சோதனைகள் மத்தியிலும்
சாதனைகள் செய்து காட்ட
சாமஸ்ரீ பட்டம் வென்றாய்!
வீதிகள் பல செப்பனிட்டாய்!
வீதி விளக்குகள் ஒளிரச் செய்தாய்!
செயற்கரிய சாதனைகள் படைத்திட்டாய்!
இயலாதெனும் வார்த்தையை நீக்கி
நீக்கமற எமது நெஞ்சங்களில் நிறைந்திட்டாய்!

கடலுணவு சந்தைப்படுத்தும் சங்கம், குருநகர்.

## ஒன்றுகூடல் மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தை நேற்றுத் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.எஸ். சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வின் போது விளையாட்டு உபகரணங்களை அமைச்சரும் ஆளுநரும் பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜாவிடம் வழங்கினர். (323-190)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை



மிருசுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை நேற்று (04.07.2011) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (கிராம சேவகர்) அவர்களின் அன்பு மனைவியும், இலட்சுமிப்பிள்ளை, விசாலாட்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை (மக்கள் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் மாமியாரும், துஸ்யந்தன், துஸ்யந்தி (UK) நிஸ்யந்தி (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), அனுஸ்யந்தன் (கணினி பொறியியலாளர்), செந்தில் குமரன் (UK), யசோதா, செந்தூரன் (கொமர்ஷல் வங்கி, கொட்டாஞ்சேனை), திருக்குமரன், மோகனதாஸ் (UK), பிரகாசினி (UK), பரணிதரன் (HNB, சாவகச்சேரி), கார்த்திகாயினி (UK), உதயசங்கர் (HNB, கிளிநொச்சி) ஆகியோரின் பேர்த்தியும் தருண், சருண், சயன், கரிஸ், கருண், பங்கயன், தீபிகா, காருஜன் ஆகியோரின் பூட்டம்மாவும் குமாரசாமி (ஓய்வுபெற்ற கணக் காய்வாளர், சமாதான நீதிவான்-தெகிவளை, மிருசுவில் கொட்டிகை அம்மன் கோயில் தர்மகர்த்தா), நமசிவாயம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் 2 மணி வரை அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2011) புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.கணபதிப்பிள்ளை
(மருமகன் - மக்கள் வங்கி)

'செல்வகிரி',
மிருசுவில்

(5485)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக
உத்தியோகத்தரான
விக்டர் தயாநிதியின்
தந்தை

## மொரிஸ் செல்லையா

அவர்களின் பிரிவால்
துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

(சி/1374)

## கட்டுநாயக்கா சம்பவம்
## 90 வீத விசாரணைகள் பூர்த்தி விரைவில் அறிக்கை நீதிமன்றில்

கொழும்பு, ஜூலை 05

கட்டுநாயக்க தாக்குதல் சம்பவம் தொடர்பான 90 சதவீதமான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் விசாரணை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கட்டுநாயக்க தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும். நீதிமன்ற ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக விசாரணை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார் நடந்துகொண்ட விதம் குறித்து தனியாக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த விசாரணைகள் வெகு விரைவில் நடத்தி முடிக்கப்படும் என நாம் எதிர்பார்க்கிறோம். - என்றார். (ஓ-சி)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் அம்பிகைபாலன் (பாலு)



மோட்டம்சீமாவைப் பிறப்பிடமாகவும், குமுழடி, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் அம்பிகைபாலனின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

குமுழடி, அல்வாய்.

(சி/1372)

## திருமதி முருகேசு செல்லம்மா



வியாழாவத்தை, நெல்லியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கம்பளை - முருகேசின் அன்பு மனைவி செல்லம்மா காலமானார்.

அன்னார் சந்திரவதனா, சுந்தரலிங்கம் (சதாபொன்ஸ், அல்வாய்), ராதாகிருஷ்ணன் (சுவிஸ்), வதனி (மணிரீச்சர்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் சிவகாமசுந்தரி, பிரிந்தாதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று (04.07.2011) திங்கட்கிழமை தகனஞ்செய்யப்பட்டது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
மு.சுந்தரலிங்கம்
(மகன்)

சதாபொன்ஸ்,
அல்வாய்.

(சி/1371)

# இதய அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபர்
சி.சந்திரராசா அவர்களின் அன்பு மனைவி

## சந்திரராசா பரமேஸ்வரி

அவர்கள் 03.07.2011 அன்று இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ நவாலி மகா வித்தியாலயம்,
மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(5480)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
The Only Official French Language Centre in Jaffna.
*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Francaise de Jaffnaஇன் ஊடாக French மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.
6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்....
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri- Nallur Road, Jaffna. Phone: 0212228093, E-mail: alliancejaffna@yahoo.com.
மேலதிக விவரங்களை நேரில்/ தொலைபேசியினூடாக பெறலாம்.

**காணி விற்பனைக்கு**
கருவம்புல லேன்,
திருநெல்வேலியில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி-
S.வரதன், 0750735081

**Innovage**
எங்கள் Innovage நிறுவனத்துக்கு (தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கிளைக்கும் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கிளைக்கும்) ஆளணி வெற்றிடம் காணப்படுகின்றது. நீங்கள் (O/L, A/L) சித்தி பெற்றவராயின் நீங்களும் இணைந்து கொள்ளலாம். பயிற்சியுடன் சம்பளம் வழங்கப்படும்.
மேலதிக தொடர்புக்கு
சிறீகாந் 077 0771377

**வீடு விற்பனைக்கு**
கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக 1985ஆம் ஆண்டு கட்டப்பட்ட நல்ல நிலையில் உள்ள வீடு. 3 பரப்புக்காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0213211479,
ஸ்ரீ முருகன் களஞ்சியம், கோட் றோட், மல்லாகம்.

**விற்பனையாளர் தேவை**
நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள யசோ ரெக்ஸ் புடவை நிலையத்துக்கு விற்பனையாளர் தேவை. ஆண், பெண்
[illegible]
தொடர்பு - [illegible]
உரிமையாளர்.

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை
அகல்யா வின் அன்புத் தாய்

**திருமதி இராசதுரை நாகேஸ்வரி**

அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம், யாழ். மத்தியகல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு.புதூர் வங்கிக் கொள்ளைச் சம்பவம்; தகவல் தந்தால் ரூ. 10 லட்சம் சன்மானம்

மட்டக்களப்பு புதூர் மக்கள் வங்கிக் கிளையில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக தகவல் வழங்குபவருக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

தகவல் தர விரும்புவோர் 011-2320145, 011-2422176, 011-2326936, 011-2380380 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் தரலாம். தகவல் தருபவரின் இரகசியம் முழுமையாக பாதுகாக்கப்படும் என்றும் பொலிஸ் திணைக்கள ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ-ஐ)

# இராணுவ 'டிரக்" மோதி மரணம்



யாழ்ப்பாணம், ஜூன் 5

திருநெல்வேலிச் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு இராணுவ டிரக் மோதி வயோதிபர் ஒருவர் மரணமானார்.

ஐ.ஆர்.சி என அழைக்கப்படும் நாகமுத்து நடராசா (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இவரது சடலத்தை பொறுப்பேற்குமாறு உறவினர்களை பொலிஸார் கேட்டுள்ளனர்.

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட டிரக்கை நேற்று பொலிஸார் கைப்பற்றியதுடன், விபத்துத் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஒ-ஐ.86)

## ரணில்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுக்குழு அமைத்து நேரத்தை வீணடிக்காது அரசிடம் உள்ள தீர்வு யோசனை என்னவென்று அரசு கூறவேண்டும். அதன் பின்னர் அதுதொடர்பில் எமது கருத்துகளைத் தெரிவிக்கக் கூடியதாக இருக்கும்.

இருப்பினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது தொடர்பில் நாம் இன்னும் ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை. அமெரிக்கா சென்று எமது தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்த மாதம் 7ஆம் திகதி நாடு திரும்புகிறார். அவர் நாடு திரும்பியதும் இதுதொடர்பில் கட்சி கூடி இறுதி முடிவெடுக்கும் - என்றார். (ஒ-சி)

## 8 பெண்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமும் 2956 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் 24 முகாம்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் 16 முகாம்கள் மூடப்பட்டு விட்டன. வவுனியாவில் புனர்வாழ்வு அளிக்க அமைக்கப்பட்டிருந்த நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி முகாம், வவுனியா தமிழ் மகாவித்தியாலய முகாம் ஆகியன மூடப்படவிருக்கின்றன.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு முன்னாள் உறுப்பினர்கள் 186 பேர் தோற்றுகின்றனர். அவர்கள் அவர்களின் வீட்டுக்குச்செல்ல அனுமதிக்கவிருக்கிறோம். அங்கு இருந்து அவர்கள் பரீட்சைக்குத் தோற்ற ஏற்பாடு செய்வோம் - என்றார். (ஒ-ஐ)

## சனல் - 4 க்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவை வருமாறு:-

'சனல் - 4'இல் ஒளிபரப்பப்பட்ட வீடியோ காட்சியை இலங்கையர்கள் அனைவரின் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளாகவே நாம் பார்க்கின்றோம். இந்தக் குற்றச்சாட்டுகள் பொய் என்று நிரூபிப்பது அரசின் கடமை.

சனல் - 4 வீடியோ காட்சி தொடர்பாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை ஏசினால் மாத்திரம் போதாது. அந்த வீடியோ காட்சி பொய்யானது என்பதற்கான ஆதாரம் அரசிடம் இருந்தால் சனல் - 4இற்கு எதிராக அரசு வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

இந்த வீடியோக் காட்சி ஒட்டுமொத்த படையினர், மக்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் நற்பெயரைப் பாதிக்கக் கூடியது. அவ்வாறானதொரு வீடியோ காட்சிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காது வெறுமனே ஏசிக்கொண்டிருப்பதால் பயனில்லை. இது அரசின் பொறுப்பற்றதனத்தைக் காட்டுகின்றது.

குற்றச் சிக்கலைத் தீர்க்க அரசு இராஜதந்திர பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும். அதுவும் இடம்பெறவில்லை. இராஜதந்திர செயற்பாட்டில் நம்பிக்கையிழந்த அரசாகவே மஹிந்தவின் அரசு காணப்படுகிறது.

ஒரு நாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் பிரச்சினை எழுகின்றபோது அந்தப் பிரச்சினையை இராஜதந்திர நகர்வின் ஊடாகவே தீர்க்க முடியும் என்ற அடிப்படை அறிவுகூட இந்த அரசுக்கு இல்லை - என்றார். (ஒ-சி)

## தெரிவுக்குழு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது நிலைப்பாட்டை உத்தி யோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை என்றும், அதனால், நாடாளுமன்றில் இது தொடர்பான நிலைப்பாடுகளை கட்சிகள் அறிவிக்க வேண்டும் என்றும் சபை முதல்வரிடம் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் விடயம் தொடர்பிலான இறுதி முடிவு நாளை எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் அரசின் யோசனைக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. அத்துடன் தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பதாகவும் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியிருந்தார். இருப்பினும், இது தொடர்பான இறுதி முடிவு 7ஆம் திகதியின் பின்னர் எடுக்கப்படும் என்று திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

இத் தெரிவுக்குழுத் திட்டத்துக்கு ஜே.வி.பி. எதிர்ப்பை கடந்த வாரம் வெளியிட்டிருந்தது. இந்த நிலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது தொடர்பான பிரேரணை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகள் எதிர்க்கும் பட்சத்தில் நாடாளுமன்றச் செயற்குழு அமைப்பதில் ஏதாவது சிக்கல் நிலை ஏற்படுமா என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனிடம் கேட்டபோது,

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும், அக்கட்சிகளின் அங்கத்துவம் இல்லாமலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படுமானால் அதில் சட்டச் சிக்கல் தோன்றாது என்று கூறினார்.

# காவத்தைப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் கொலைகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

கொழும்பு, ஜூலை 5

காவத்தைப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும். காவத்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வழமையைவிட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

- இவ்வாறு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்தார்.

காவத்தைப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். சந்தேகநபர் ஒரு வரை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டபோது அவர் மூன்று பெண்களைத் தாம் கொலை செய்ததை ஒத்துக் கொண்டார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக மற்றுமொரு கொலை இடம்பெற்றுள்ளது என்பதும் எமக்குத் தெரியவந்துள்ளது.

இந்த கொலை சம்பவங்கள் தொடர்பாக மூன்று பொலிஸ் குழுக்கள் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. அதுமட்டுமன்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் - என்றார்.

## அரசியல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையின் 33ஆவது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள என்.கே. இலங்கக்கோன் நேற்றுக் காலை தமது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

இதற்கான சமய வழிபாடுகள் உட்படப் பல்வேறு நிகழ்வுகள் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றன.

பொலிஸ் மா அதிபர் சுபநேரத்தில் தமது கடமைக ளைப் பொறுப்பேற்ற பின் னர் விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றும் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் மேலும் கூறியவை வருமாறு:-

பொலிஸ் சேவையில் அர்ப் பணிப்புடன் செயற்படக்கூடிய அதிகாரிகள் உள்ள அதேவேளை, பொலிஸ் சேவைக்கு களங்கத்தை ஏற்படுத்தும் அதிகாரிகள் சிலரும் உள்ளனர். அவர்கள் கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும்.

பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் அந்நியோன்ய உறவை ஏற்படுத்த முயற்சிப்பேன். அதற்கு இரு சாராரதும் ஒத்துழைப்பு எமக்குத் தேவை.

மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமிடத்து பொலிஸார் தீவிர கவனம் செலுத்தி விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு எம்மீது நம்பிக்கை ஏற்படும். மக்களின் வரிப்பணத்திலிருந்து சம்பளம் பெறும் நாம் மக்களுக்கு சிறந்ததொரு சேவையை வழங்கவேண்டும்.

பொலிஸ் சேவையில் உள்ள பலர் இன்னும் முழுமையாகப் பயிற்சிகளை முடிக்கவில்லை. அதற்கான வசதிகள் அவர்களுக்கு செய்துகொடுக்கப்படும்.

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொண்டு அவர்களுக்குத் தகுந்த பயிற்சிகளை வழங்கி அப்பிரதேசங்களுக்கு அவர்களை அனுப்பியுள்ளோம்.

அதுமட்டுமல்ல, சிங்களம் தெரிந்த பொலிஸாருக்குத் தமிழ் மொழியைப் போதிப்பது தொடர்பாகப் பல்வேறு பயிற்சிநெறிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது மொழிப்பிரச்சினையைத் தீர்க்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஒ-சி)

## இந்தியாவின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டமாகத் தெரிவித் துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகளை தொடர அனுமதிக்க முடியாது எனவும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சிரேஷ்ட அதிகாரி ஒருவரை இலங்கைக்கு இந்தியா அனுப்பும் எனவும் கிருஷ்ணா கூறியிருக்கிறார்.

14 இந்திய மீனவர்களை கைது செய்ததாக வெளியான குற்றச்சாட்டை இலங்கை கடற்படை நிராகரித்ததாக செய்தி வெளியான பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கைகுச் சென்று இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறாதிருப்பதற்கான களத்தை தயார்ப்படுத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் ஒருவரை ஈடுபடுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கந்தசாமி



முன்னாள் ஊழியர் ஈழநாடு

நாவற்குழி, கைதடியைப் பிறப்பிடமாகவும், செபஸ்ரியன் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் தற்போது அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி நேற்று (04.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
இராஜரஞ்சினி
(மனைவி).

### சரவணை மார்க்கண்டு



நல்லூர், அரசடி, 3 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, 3 ஆம் ஒழுங்கை, ஆரியகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை மார்க்கண்டு நேற்று (04.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான வேலு-பார்வதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் முத்துலிங்கம் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் இரத்தினம், சின்னக்கிளி, பாலசுந்தரம், சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலாதேவி, நவரத்தினராசா (வயறிங் நவம்) இராஜேஸ்வரி, கனகராசா, (பிரான்ஸ்) தவமணிதேவி, தருமராசா (வயறிங் தருமு) ஸ்ரீகாந்தராசா (நோர்வே) கலாதேவி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பரமராசா, காலஞ்சென்ற புஸ்பராணி, கிருஸ்ணன், றஞ்சி (பிரான்ஸ்), கோபாலசிங்கம் கிரிசா, மாலினி, (நோர்வே) சண்முகராசா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/10, 3 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம்.

(5490)

தகவல்: பிள்ளைகள்,
நவரத்தினராசா (வயறிங் நவம்)
தருமராசா (வயறிங் தருமு)

## நெல்வயல் விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் 5ஆம் கட்டைக்கு அண்மையில் 50 [illegible] நெல்வயல் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு-0786382808

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 நிமிடங்கள் மட்டுமே நடைபெற்ற வெள்ளைக்கொடி விவகார வழக்கு

## கரு ஜயசூரிய நேற்றுச் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 5

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 15 நிமிடங்களில் மின்வெட்டு காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்கிஸை நீதிமன்றில் அங்குலான இரட்டைக் கொலை வழக்கு விசாரணையும் மின்வெட்டு காரணமாக ஒத்திவைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று மேல்நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி.வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய சாட்சியம் அளித்தார். பிரதிவாதியின் சட்டத்தரணி நளின்லத்துவஹெட்டி இவரை குறுக்கு விசாரணை செய்தார்.

இதன்போது கேட்கப்பட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட பதில்களும் வருமாறு:-

கேள்வி:- நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கின்றீர்களா? பதில்:- ஆம்.

கே:- நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரா? ப:- ஆம்.

கே:- 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஏதாவது தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டீர்களா? ப:- ஆம்.

கே:- எந்தத் தேர்தலுக்கான பிரசாரம்? ப:- ஜனாதிபதித் தேர்தல்.

கே:- அந்தத் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டீர்கள்? ப:- சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக.

கே:- உங்களைத் தவிர வேறு கட்சிகள் அவருக்கு ஆதரவாக செயற்பட்டனவா?

ப:- ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜே.வி.பியும், வேறு சில கட்சிகளும் ஆதரவாகச் செயற்பட்டன.

(இதன்போது வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக வெளிவந்த சண்டே லீடர் பத்திரிகை கரு ஜயசூரியவிடம் காண்பிக்கப்பட்டது.)

கே:- தேர்தலுக்கு ஆயத்தமானபோது இந்தப் பத்திரிகைச் செய்தியை நீங்கள் வாசித்தீர்களா? ப:- ஆம்.

கே:- எந்தத் திகதியில் இந்தப் பத்திரிகை வெளியானது? ப:- 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி.

கே:- அதன்பின்னர் இது குறித்து ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா?

ப:- இந்தச் செய்தியைக் கண்டவுடன் அதிர்ச்சியடைந்தேன். உடனே சரத் பொன்சேகாவைத் தொடர்புகொண்டு விளக்கம் கோரினேன்.

கே:- அதற்கு அவர் விளக்கம் அளித்தாரா?

ப:- ஆம். இந்தச் செய்தி பாரதூர விளைவை ஏற்படுத்தும். ஆனால், இப்படி நான் கூறியிருக்கவில்லை. திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

கரு ஜயசூரிய இவ்வாறு சாட்சியம் அளித்துக்கொண்டிருக்கையில் 11.30 மணிக்கு மின்தடை ஏற்பட்டது.

இதனை அடுத்து வழக்கு விசாரணை இன்று காலை 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-சி)

# பாதாள உலகத் தலைவர் பொலிஸ் சூட்டில் பலி

## 25 கொலைகளுடன் தொடர்புடையவராம்

கொழும்பு, ஜூலை 5

சுமார் 25 கொலைகளுடன் தொடர்புடைய நெலுவ பிரியந்த என்னும் பாதாள உலகக் குழுத்தலைவர் ஒருவரை சூரியவெவ பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொன்றனர்.

நேற்றுமுன்தினம் காலை கைதுசெய்யப்பட்ட இவர் பதுக்கி வைத்துள்ள ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அதிரடிப்படையினரால் சூரியவெவ எனும் இடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

அங்கு சென்ற அவர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அதிரடிப்படையினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோதே அவர் அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இவர் 25 கொலைச்சம்பவங்களுடன் மாத்திரமின்றி, போதைப்பொருள் கடத்தல் மற்றும் கப்பம் கோரல் உள்ளிட்ட பல குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர் என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

# ரூ. 85 லட்சம் செலவில் வாகனத் தரிப்பிடம் ஆனால் நீதிமன்றங்களில் வசதி எதுவும் இல்லை

## மின் தடை ஏற்பட்டபோது நீதியரசர் சீற்றம்

கொழும்பு, ஜூலை 5

85 லட்சம் ரூபா செலவு செய்து வாகனத் தரிப்பிட வசதி செய்துகொடுக்கின்றனர். ஆனால் நீதிமன்றத்துக்குத் தேவையான அத்தியாவசிய வசதிகள் இன்னும் செய்துகொடுக்கப்படவில்லை.

-இவ்வாறு வெள்ளைக்கொடி விவகார வழக்கை விசாரிக்கும் மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவிலுள்ள நீதியரசர் எச்.என்.பி.பி.வராவெவ நேற்று கண்டிப்பான தொனியில் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட முன்னரும் இரண்டு தடவைகள் மின்தடை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் நேற்று இவ்வழக்கு காலை 11.15 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 15 நிமிடங்களில் மின்தடை ஏற்பட்டது.

அப்போதே நீதியரசர் வராவெவ மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

''85 லட்சம் ரூபா செலவு செய்து வாகனத் தரிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்கின்றனர். ஆனால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகள் இன்னும் செய்துகொடுக்கப்படவில்லை. நீதியரசர்களதும், சட்டத்தரணிகளதும், மக்களினதும் நேரமே வீணடிக்கப்படுகின்றன. நீதிமன்றுக்கு ஒரு மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) கூட தரப்படவில்லை. - என்று அவர் கூறினார்.(ஒ-சி)


## 29 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 12 - 07 - 1954



விண்ணில் 07 - 06 - 2011

### திருமதி சறோஜினிதேவி செல்வரத்தினம்

கடந்த 07.06.2011 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.07.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்வில் பங்கு கொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோவிலாக்கண்டி,
கைதடி.

(5466)

இ.செல்வரத்தினம்
குடும்பத்தினர்.


# பதிவுசெய்யப்படாத விநியோகஸ்தர்களே தரம் குறைந்த பெற்றோலுக்குக் காரணம்

## ஐ.தே.கட்சி குற்றஞ்சாட்டுகிறது

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்யப்படாத விநியோகஸ்தர்களே தரக்குறைவான பெற்றோலை இறக்குமதி செய்தனர் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக கூறினார்.

இவ்வகைப் பெற்றோலை இறக்குமதி செய்தமையால் இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர் இது தொடர்பாக கூறியவை வருமாறு:-

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து தரக்குறைவான பெற்றோல் விநியோகிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இந்த வகை பெற்றோலைப் பாவித்த வாகனங்கள் நடு வீதியில் நின்றுவிட்ட சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. இது தொடர்பான முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆனால் தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படவில்லை. சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலில் காணப்பட்டபடிவே இதற்குக் காரணம் என்றுபெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

அவர் கூறியவை பொய். தரக் குறைவான பெற்றோலே அது என நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்வகைப் பெற்றோலை இறக்குமதி செய்யக் காரணமான அதிகாரிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பதிவுசெய்யப்படாத விநியோகஸ்தர்களே இவ்வகைப் பெற்றோலை இறக்குமதி செய்தனர் என்று தகவல் கிடைத்துள்ளது - என்றார்.


PHYSICS ⇒ N.எடிசன்
A/L 2012
புலங்கள் ஈர்ப்புப்புலம்
Tue 3.30 - 4.30 p.m. - Thu 4.30-5.30 p.m.
ஆரம்பம்: 05.07.2011 (Tue 3.30 p.m.)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பக் கல்லூரி போதனாசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
ஆரம்பம்: புதன் (06.07.2011) மாலை 5 மணி.
பொது அறிவு, பொது உளச்சார்பு விடயங்கள் தினமும் மாலை 5 மணிதொடக்கம் 7 மணிவரை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே.

வீடு வாடகைக்குத் தேவை
மூவர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாகன தரிப்பிடம் உட்பட சகல வசதிகளுடன் கூடிய வீடு, சுண்டுக்குளி, கல்வியங்காடு, நல்லூர், திருநெல்வேலி, கச்சேரி நல்லூர், இருபாலை மற்றும் நல்லூரை அண்டிய பிரதேசங்களில் நல்ல வீடு வாடகைக்குத் தேவை. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு:
0771758494

No Prior Qualifications
CIMA-UK 14000/= per level
Engineering-USA 4800/= per module
BIT University of Colombo 20000/= per year
Multimedia ~~15000~~ 4800/=
Closing Date 09.07.2011



SMS your name & course to 772395895 & Get Schol.
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்து சலுகைகளைப் பெறலாம்.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Government Schol.
MCS Supported By UNDP/JRRP
மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# காளானின் மருத்துவ குணங்கள்



காளான் மழைக் காலங்களில் உக்கிப்போன பொருள்களின் மீது வளரும் ஒருவகை பூஞ்சண மாகும். இயற்கையாக வளரும் இவற்றை சிலர் பிடுங்கி எறிந்து விடுவார்கள்.

ஆனால் இது பல நாட்டவர்களால் விரும்பி உண்ணப்படும் உணவாக உள்ளது. இயற்கையாய் வளரும் காளான்களில் சில விஷமுள்ளதாகவும், சில விஷமற்றதாகவும் வளர்கின்றன. விஷக் காளான்கள் துர்நாற்றம் வீசக்கூடியதாகவும், அதிக வண்ண முடையதாகவும் இருக்கும்.

காளான் வளர்ப்பு மிகச் சிறந்த வருவாயை ஈட்டித்தரும் எளிய தொழிலாக உள்ளதோடு இதனைப் பல இடங்களில் குடிசைத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். காளான் மிகுந்த சுவையுள்ளதாகவும், மிகுந்த சத்துக்கள் கொண்டதாகவும் இருப்பதோடு மருத்துவப் பயன் கொண்டதாகவும் உள்ளது. இது இதயத்தைக் காக்கும் அற்புத உணவாகும்.

இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை இதற்கு உள்ளது. இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பைத் தடுக்கிறது.

இதனால் உடலில் அதிகம் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப் படுத்தப்படுகிறது. இதனால் இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராக செயற்படுகிறது. எனவே இதயத்தைப் பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம்.

பொதுவாக உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் போது உட்புற அணுக்களில் பொற்றாசியத்தின் அளவு குறையும். வெளிப்புற அணுக்களில் உள்ள சோடியம், உட்புறமுள்ள பொற்றாசியத்துக்கு சமமாக இருக்கும்.

இரத்த அழுத்தத்தின் போது வெளிப்புறத்தில் சோடியம் அதிகரிப்பதால் சம நிலை மாறி உற்புறத்தில் பொற்றாசியத்தின் அளவு குறைகிறது. இதனால் இதயத்தின் செயற்பாடு மாறிவிடுகிறது.

இத்தகைய நிலையைச் சரிசெய்ய பொற்றாசியம் சத்து தேவை. அவை உணவுப்பொருட்களின் மூலம் கிடைப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் பொற்றாசியம் சத்து அதிகம் உள்ள உணவு காளான் தான். 100 கிராம் காளானில் பொற்றாசியம் சத்து 447 மி.கி உள்ளது. சோடியம் 9 மி.கி உள்ளது. எனவே இதயத்தைக் காக்க சிறந்த உணவாக காளான் உள்ளது.

மேலும் காளானில் தாமிரச்சத்து உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. தாமிரச்சத்து இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர் செய்து மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகின்றது.

மேலும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளதால், குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு சிறந்த ஊட்டசத்தாக அமைகிறது. எளிதில் சீரணமாகும் தன்மை கொண்டதுடன் மலச்சிக்கலைத் தீர்க்கும் தன்மையும் கொண்டது.






# மனரீதியான வேதனைகள் அகல சூடான நீரில் குளிப்பது சிறந்தது



தனிமையிலே இனிமை காண முடியுமா என்பது தெளிவான பதிலே தெரியாத ஒரு பழம் பெரும் கேள்வி. பலருக்குத் தனிமைதான் இனிமை, சிலருக்கோ தனிமை பெரிய எதிரி. அய்யய்யோ தனிமையா என்று அலறுவோருக்கு ஆறுதல் கூறும் வகையில் வந்துள்ளது ஒரு ஆய்வு முடிவு. அப்படிப்பட்டவர்கள் சூடான நீரில் குளித்தால் தனிமை தரும் வேதனைகள், விரக்திகள், வெறுப்பு, புழுக்கம் போய் விடும் என்கிறது அந்த ஆய்வு.

குறிப்பாக தனிமையில் இருப்பவர்களுக்கு விரக்தியும், ஒரு வித புழுக்கமும் அதிகம் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் சூடான நீரில் குளித்தால் உடலுக்கும் மனதுக்கும் இதமாக இருக்கும் என்கிறார்கள் இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள்.

இதுதொடர்பாக 18 வயது முதல் 65 வயது வரையிலானவர்களைக் கொண்டு ஒரு ஆய்வை நடத்தினர். அதில், சூடான நீரில் குளித்தவர்களுக்குத் தனிமையின் வேதனை பெரிதாக தெரியாததோடு புத்துணர்ச்சியுடன் அவர்கள் காணப்பட்டனராம். அதேசமயம், சூடான நீரில் குளிக்காதவர்கள் எதையோ பறி கொடுத்தவர்களாகக் காணப்பட்டார்களாம்.

சூடான குளியல் மூலம் மன ரீதியாக தனிமை உணர்வு மட்டுப்படுவதாக ஆய்வை மேற்கண்டவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த ஆய்வு முடிவு எம் மத்தியில் காலம் காலமாக நிலவும் பழக்கத்திற்கு நேர்மாறானதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# லைரே பறவை



லைரே பறவை (Lyre birds) பல் குரலில் பாடும் சக்தி கொண்ட அதிசயமான பறவையினம். லைரே பறவை மிகவும் பிரமிக்கும் வகையில் தனது சூழலில் இருக்கக்கூடிய அனைத்து இசைகளையும் பல குரலில் (மிமிகிரி) செய்யும் ஆற்றல் படைத்தது. இந்தப் பறவையினம் ஆஸ்திரேலியா வின் கிழக்கு பகுதியில் காணப்படுகின்றன. இந்தப் பறவைகள் மயிலின் தோகையையும் குயிலின் உடலை ஒத்தும் காணப்படுகின்றன. இந்தப் பறவை வெப்பப் பிரதேசங்களிலுள்ள ஈரவலைய அடர் காடுகளில் வாழ்கின்றன. இந்தப் பறவை முக்கிய உணவாக உக்கிய மரப் பாகங்களில் காணப்படும் புழுக்கள் மற்றும் பூச்சிகளை உண்கின்றது. இந்தப் பல் குரல் பாடும் சக்தி ஆண் லைரே பறவைக்கு மட்டுமே உள்ளது. இது தனது பெண் இனத்தைக் கவருவதற்காக இந்த பல் குரல் விநோதம் செய்கிறது. இந்தப் பறவைக்கு வைத்திருக்கும் பெயரான லைரே (Lyre) என்பது ஒரு பழமையான இசைக்கருவி.

# டைட்டன் ஆரம்



இந்தோனேசியாவின் சுமத்திரா காட்டுப் பகுதியில் உள்ள டைட்டன் ஆரம் (Titan Arum) தாவரம் உலகில் மிகப்பெரிய மலர்களை கொண்டுள்ளது. இந்த டைட்டன் ஆரம் தாவரம் தனி ஒரு மலரை மட்டுமே கொண்டிருக்கும். இதனை தாவரவியலில் Talipot palm எனும் இன வகையில் சேர்த்துள்ளனர். இம்மலர் சராசரியாக 10 அடி (3 மீற்றர்) உயரம், மூன்று முதல் நான்கு அடி சுற்றளவு உடையதாக உள்ளது. இதன் வாசனை அழுகிய மீன் மணத்தை ஒத்ததாக இருக்கும். இந்தத் தாவரம் உலகிலுள்ள பல தாவரவியல் பூங்காக்களிலும் முக்கியம் கருதி வளர்க்கப்படுகின்றது. இந்த மலர் இராட்சத அளவில் உள்ள போதிலும் மற்றய சிறிய மலர்களில் நிகழக்கூடிய சிறிய பூச்சியினம் மூலமான மகரந்தச் சேர்க்கை மூலமாக மட்டுமே இனப்பெருக்கம் நடைபெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் பழங்களையும் உங்களுக்குத் தெரியுமா...?


சீமை இலுப்பை


அம்பிரலங்காய்


சீத்தாப்பழம்


பாலைப்பழம்


அன்னமுன்னா


ஜம்புநாவல்


## மின்னுவதெல்லாம் பொன்னல்ல...




ஊன்றிக் கவனி உண்மை விளங்கும் !

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி


## உலகில் உள்ள அனைத்து தாவரங்களின் விவரங்களையும் அறிந்து கொள்வதற்கு

தாவரங்கள் பற்றி நமக்கு தெரியாத தகவல்கள் மற்றும் அதன் குண நலன்களை படங்களுடன் அறிந்து கொள்ள ஓர் இணையதளம் உதவி புரிகிறது.

இயற்கை நமக்கு கொடுத்த ஓர் அரிய பொக்கிஷம் தான் தாவரங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு பல அரிய மூலிகைகள் இன்றும் மனிதரின் பல நோய்களை குணப்படுத்தி வருகின்றன. இப்படி நமக்குத் தெரியாத தாவரங்களை படத்துடன் விவரமாக தகவல்களை கொடுக்க ஒரு தளம் உள்ளது.

இத்தளத்திற்கு சென்று நாம் வலது பக்கம் இருக்கும் Search என்ற கட்டத்திற்குள் எந்த தாவரத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமோ அதன் பெயரைக் கொடுத்து Search என்ற பொத்தானை சொடுக்கினால் போதும்.

அடுத்து வரும் திரையில் நாம் தேடிய தாவரத்தை பற்றிய முழுவிவரமும் நமக்குக் கிடைக்கும். இந்தத் தாவரத்திற்கு வேறு என்ன பெயர்கள் எல்லாம் இருக்கின்றன. எந்த நாட்டில் இந்த தாவரம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிவியல் பெயர்கள் மற்றும் இந்த தாவரத்தினால் நமக்கு ஏற்படும் நன்மை என்ன என்பது முதல் அனைத்துத் தகவல்களையும் கொடுக்கிறது.

பல இலட்சம் தாவரங்களின் தகவல்கள் இத்தளத்தில் உள்ளன. இனி நாம் எந்த தாவரத்தையும் விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம்.

http://www.theplantlist.org/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org